**RAJA & CO SOLICITORS**
We provide following Legal Services:
Conveyancing:
Buying and Selling
Houses, Flats & Business
➤ Criminal Cases
➤ Civil Litigation
➤ Family
➤ Immigration
TOOTING
10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG
Tel: 020 8772 4900
COLLIERS WOOD
2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ
Tel: 020 8543 4974
We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 07 ◆ ISSUE - 135 ◆ 05 FRIDAY NOVEMBER 2010

**Adshaya Online Srore**



சகல விதமான மளிகைப் பொருட்கள் கதைப்புத்தகங்கள் மற்றும் பலபொருட்களை உங்கள் வீட்டிற்கு வரவழைக்க!
FREE DELIVERY
Order over £40
All Books and CD's
Orders over £25 only £2.99
Order Online : www.adshaya.com
Call us 075 3581 1470

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




**Happy Diwali**

**Sri Lanka 9p /min**
Landline & Mobile

**Lyca mobile**
Call the world for less

**Ersan & Co SOLICITORS**

Ersans has a wealth of experience in providing specialist help and advice for Personal Injury claims. We offer a free assessment of your claim and a "No Win No Fee" package to ensure that no deductions are made from any compensation to which you may be entitled.

"We will make sure that you will receive 100% of your compensation and our service will not cost you a penny"

தனியாருக்கு ஏற்படும் காயங்களுக்கு நட்டஈடு பெறுவதற்கு உதவிசெய்வதில், 'எர்சன்ஸ்' (Ersans) சிறந்த அநுபவம் உடையவர்கள். உங்களுடைய விண்ணப்பத்தை இலவசமாகப் பரிசீலனை செய்து, 'வெற்றியில்லையேல் கட்டணம் இல்லை' என்ற அடிப்படையில் எவ்விதக் கழிவும் இன்றி உங்களுக்குரிய நட்டஈட்டுத் தொகை கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளோம்.

**உங்களுடைய நட்டஈட்டுத்தொகை 100 சதவீதம் உங்களுக்குக் கிடைக்கவும், எமது சேவைக்காக உங்களுக்கு எவ்வித செலவும் இல்லாதிருக்கவும் உறுதிசெய்வோம்.**

**ERSAN & CO SOLICITORS**







7 Willoughby Road, Turnpike Lane, London N8 0HR
Tel: 0208 342 7070
Fax: 0208 342 7071 Mobile: 07816 646345
E-mail: info@ersans.co.uk

**ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்**



# UNLEASH THE POWER OF GOLD

# GOLD LOANS

**UK's cheapest Gold Loans starting from 2.95% / month**

(APR – 37.96%)

Cheaper than unauthorised overdrafts from banks

**For Gold Loans and Loan Takeovers, please contact us**

**Muthoot** Finance UK Ltd

**PAWNBROKERS**

5B King Street, Southall, UB2 4DF.
tel: 020 8574 7940 | fax: 020 8571 2205 | mob: 078 4684 7114
email: info@muthootgroup.co.uk | website: www.muthootgroup.co.uk

**Special rate of 2% per month for loans upto £500 for those who produce this advert at our counters, valid upto 30/11/2010.**



**Price starts from £1100**

176 Merton High Street
South Wimbledon SW19 1AY
020 8540 0359
077 456 456 45
www.postechnology.co.uk




FREE 3 YEARS WARRNTY & BARCODE PRINTER

ஒரு குறிப்பிட்ட அல்லது நீண்டகாலமான தோல்வியாதிகளால் அவதியுறுகின்றீர்களா?

பின்வரும் தோல் வியாதிகளிற்கு மூலிகை வைத்தியத்தின் மூலம் எம்மிடம் உங்களுக்கான சிகிச்சை உண்டு.

உங்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் இங்கே தீர்வு உண்டு.
we may have herbal solutions for your Skin Problem

Eczema, Vitiligo, Psoriasis, Allergy, Itching, Blemishes, Acne, Pimples, Boils, Urticaria, Discolouration, Melasma etc.



உங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் சிக்கல்களா? காலத்தை விரையடிக்காமல் உடனே தொடர்புகொள்ளுங்கள்.



இன்றே எங்கள் சிறப்பான வைத்தியர்களுடன் தொடர்புகொள்ளுங்கள்.
(தமிழ் பெண் வைத்திய நிபுணரிடமும் தொடர்புகொள்ளலாம்)

herbalAid
10 Park Avenue, Southall, Middx UB1 3AQ
herbalaid@hotmail.co.uk
Tel : 02088430330 Mobile : 07546651898

**M&K MALIKS & KHAN SOLICITORS**

265 Dunstable Road Luton LU4 8BS
mandksolicitors@lawyer.com
Tel 01582 732503
Fax 01582 732533
www.mandksolicitors.com

**IMMIGRATION**

All cases including Asylum, Human rights, Nationality, Detention, Deportation, Bail and Appeals to IAC and High Court

**PERSONAL INJURY**

All cases including Road Traffic Accident, Accident at work and public places. We give 100% compensation + **£300.00 Cash back** on successful completion of case subj to terms and conditions if you instruct us directly.

**CONVEYANCING**

Residential Freehold Purchase £350+VAT; Sale £299+VAT; Residential and Commercial property, Transfer, Assignment and extension of lease,

**FAMILY LAW**

Divorce, Child Contact Orders, Eviction etc.

Our staff can speak Tamil, Malayalam, Hindhi, Urdu and Pahari.

Accredited member of Law society in Immigration




## நல்ல கண்டுபிடிப்புகள்

போர் முடிந்ததும் சிறிலங்கா அரசாங்கம் தமிழ்மக்களுக்கு உரிமையை வழங்கும் என்பதனால் தாம் போரில் அவர்களுக்கு ஆதரவு வழங்கியதாகவும், ஆனால் போரில் வெற்றிகண்ட அரசாங்கம் தமிழ்மக்களுக்கு எந்த உரிமையையும் வழங்க மறுத்து வருகிறது 'என புளொட் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். அதுபோல் சிறிலங்காவில் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரசைகளாக நடாத்தப்படுவதாக ஈபிஆர்எல்எப் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். இந்தக் கண்டுபிடிப்புகளுக்காக இவர்களுக்கு நோபல் பரிசு வழங்கினால் என்ன?

*- செல்வின்*

## கண்டு கொண்டேன்

இந்தியா தமிழனை அழித்தவனை சரியாக இனம் கண்டுள்ளது. அவனுக்கு வெகுமதியாக பொதுநல நாடுகள் விழாவிற்கு அழைப்பு விடுத்து கௌரவித்துள்ளது. இந்தச் சூழலில் கூட எங்கடையள் இந்தியா இல்லாமல் நாங்கள் எதுவும் செய்ய முடியாது எண்டுதுகள். மரமண்டையள். இந்தியா பலமான நாடுதான். ஆனால் நாங்கள் அதன் அடிமைகள் அல்ல.

*- கதிரவன்*

## தமிழரசு கட்சியில் இணைகிறாராம் கூழ்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக வராமல் விடமாட்டேன் அடம்பிடித்துக் கொண்டிருக்கும் கொக்கோக பேராசிரியர் ரத்தின ஜீவன் கூழ் தமிழரசுக்கட்சியில் இணைந்து கொள்ளப் போவதாக செய்தி அடிபடுகிறது. பதவி பதவி என்று அலையும் இதுகளுக்கு யாராவது நல்ல புத்தி சொல்லக் கூடாதா?

*- கருணானந்தசிவம்*

## ஜெயானந்தமூர்த்தி எங்கே?

நாடு கடந்த அரசாங்கத்தின் பிரதிநிதியாக அதிக வாக்குகள் பெற்று தெரிவு செய்யப்பட்ட ஜெயானந்தமூர்த்தி எம்பி அவர்களை எங்கும் காண முடிவதில்லை. முன்னர் அவரது பேட்டிகளை ஒளிபரப்பு செய்த ரீவிகளும் அவரை கண்டு கொள்கிறதாகத் தெரியவில்லை. அவர் தொடரந்தும் எங்களுக்காக பணிபுரிய வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

*- சிவதர்சினி*

## இது பற்றியும் எழுதுங்கோ

தமிழ் அகதிகளுக்காக வாதாடிய சட்டத்தரணி டேவிட் போர்ஜஸ் அவர்கள் மரணித்த சம்பவத்தில் தமிழ் பெண்ணொருவர் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா? யார் அந்தப் பெண்? டேவிட் போர்ஜஸ் பெண்ணாக மாறியிருந்தார் என்று பேசப்படுகிறது? இவற்றைப் பற்றியெல்லாம் விசாரித்து எழுதுங்கோ. எங்களைச் சுற்றி நடக்கிறதுகளே எங்களுக்குத் தெரியாமல் இருக்கிறது.

*- வரதராஜ்*

## யாரப்பா அந்த சட்டத்தரணி?

சற்று மாறுதலுக்காக பத்தியில் சட்டத்தரணி ஒருவர் பற்றி எழுதப்பட்டுள்ளது. முன்பும் ஒரு டொக்ரர் பற்றி எழுதப்பட்டது. இவ்வளவும் எழுதிற நீங்கள், அவையளின்ரை பெயரையும் எழுதக் கூடாதோ? போதாக் குறைக்கு ஆன்மீகவாதி என்று ஒரு குழுவும் தந்திருக்கிறியள், யாரை என்று நாங்கள் நினைக்கிறது? கோயிலுக்கு வாற எல்லா தமிழ் சொலிசிற்றர்மாரையும், அவர் இவரோ என்று நினைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

*- ரமணி*

## ஆறுமுகமண்ணை உங்களிட்டை ஒரு கேள்வி?

மனிசனாய் பிறந்தவன் தன்னட்டை இருக்கிறதெல்லாத்தையும் அப்பப்ப மாத்துறான்.

காசை மாத்துறான்.

காதலியை மாத்துறான்..

கட்டினவளை மாத்துறான்...

காரை மாத்துறான்....

கலரை மாத்துறான்.....

கட்டின வீட்டை மாத்துறான்......

தான் படிச்ச படிப்பை மாத்துறான்....

தான் பிறந்த நாட்டு பிறப்புரிமையை மாத்துறான்....

நாடுவிட்டு நாட்டை மாத்துறான்....

தான் இருந்த மதத்தை மாத்துறான்..

தாய் தகப்பன் வைச்ச பெயரை மாத்துறான்...

ஆனால்..

ஏன்??

சாதியை மட்டும் மாத்தேலாமல் கிடக்கு????

இப்ப...

என்னவெண்டால்!!!!!!!!

நளவர் சாதியில் இருந்த குமாரசாமி வண்ணார் சாதிக்கு அல்லது வெள்ளாளர் சாதிக்கு மாறுவது எப்படி?

ஆறுமுகமண்ணை உடனை பதில் வேணும் :)

*- குமாரசாமி (யாழில்)*

## நாடு கடந்த அரசு

ஒரு நாள் சம்பளத்தை இழந்து, ஏதோ தமிழர் விடிவுக்கு வழிகாட்டுறாங்கள் என்று நாடு கடந்த அரசுக்கு ஒரு அங்கத்தவரை தெரிவு செய்ய வாக்களித்தேன். இப்போ தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ன செய்கிறார்கள். களம் அமைத்து குழுப் போட்டி இடுகிறார்களா? ஆரம்பத்தில் அதன் பெயரே எனக்குப் புரியவில்லை. அது என்ன ஈழவர் அமைப்பு என்று பெயரிடாது அரசு என்று பெயரிட்டது. பெயரிடும்போதே எங்களுக்கு காதில் பூ வைத்தாகி விட்டதா?

*- நாகநாதன்*

## புதிய இந்திய சதி

'ஏங்கித் தவிக்கும் பிரபாகரனின் தாய் என் பிள்ளைகள் வருவார்களா?' போன்ற தலைப்புகளில் இந்திய ஊடகங்களில் பரவலாக கட்டுக் கதைகள் வரத் தொடங்கியிருக்கின்றன.

பார்வதியம்மாள் பிள்ளைகளைப் பார்க்க ஆசைப்படுகின்றார் என்பது புதிய சதியின் வெளிப்பாடே அதையே தொடர்ச்சியாகக் கூறுவது என்பதன் பின்னனி ஒரு சதித்திட்டத்தை மையப்படுத்தியே ஆகும். பாசத்தை முக்கியப்படுத்துவதன் நோக்கமும் அதுவே.

கட்டாயம் யாழ்ப்பாணத்துக்கே பிள்ளைகளை வரவைக்க வேண்டும் என்று முயற்சிப்பதன் பின்னனியில் ஏதோ இருக்கின்றது? அவதானமாக செயற்படுங்கள்..

போய்ப் பார்க்க வேண்டும் என்று முடிவெடுத்தீர்கள் என்றால் ஒவ்வொருவராக சென்று பாருங்கள்.குறித்தவர் போய் வந்தவுடன் மற்றவர் போவது போல... கூட்டமாகப் போவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் கூட்டமாக வலையில் மாட்டுப் படுவதே எங்களின் வேலையாகப் போய் விட்டது..

சிங்கள அரசு என்னுமொரு பிரச்சாரத்தையும் செய்யக் கூடும். தலைவரது சகோதரர்களை இலங்கைக்கு அனுமதித்தன் மூலம், சிறிலங்கா பாதுகாப்பானது என்ற வகையில்.

*- தூயவன்*

> ஒரு பேப்பர் தொடர்பான உங்களுடைய கருத்துக்களைத் தற்பொழுது தொலைபேசி வாயிலாகவும் பதிவு செய்து கொள்ள முடியும்.
>
> பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற்கான இலக்கம் 020 7043 4314.
>
> *ஆ—ர்*

## யாழ் நூல் நிலையம் மீதான இரண்டாவது தாக்குதல்!

போர் நிறைவு பெற்ற பின்னர் யாழ் வரும் பெருமளவான சிங்கள உல்லாசப் பயணிகளில் பலர் தாம் வெற்றி பெற்ற இனம் என்ற வெறியுடனே வருவதாக யாழ் ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர். அதனை தான் யாழ் நூல் நிலையம் மீதான இரண்டாவது தாக்குதல் மூலம் அவர்கள் எமக்கு உணர்த்தியுள்ளனர் என இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அது மேலும் தெரிவித்துள்ளதாவது:

1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் நாள் சிங்களக் காடையர்கள் பிரசித்திபெற்ற, தமிழ் மக்களின் கலாச்சார விழுமியங்களின் அடையாளமாக திகழ்ந்த யாழ் நூல் நிலையத்தை தீயிட்டு கொழுத்தினர். அதனை தென்னிலங்கை அரசியல்வாதிகளே முன்னின்று மேற்கொண்டிருந்தனர்.

48 மணிநேரம் தொடர்ந்து எரிந்த பின்னரே அந்த தீ அணைக்கப்பட்டது. தமிழ் மக்களின் வரலாறு, கலாச்சாரம், அடையாளம் என்பன அந்த 48 மணிநேர தீயில் அழிந்து போனது. இந்த சம்பவம் இரு இனங்களுக்கும் இடையிலான உறவில் பெரும் விரிசலை கொண்டுவந்தது.

இந்த தடவை தென்னிலங்கை உல்லாசப் பயணிகள் யாழ் நூல் நிலையத்திற்குள் நுளைய முயன்றனர். ஆனால் அங்கு மருத்துவ கருத்துரை ஒன்று இடம் பெற்றதால் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்த பயணிகள் பலவந்தமாக உள்நுளைந்துள்ளனர்.

உள்ளே சென்ற 1,500 இற்கு மேற்பட்ட தென்னிலங்கை சிங்களவர்கள் நூல் நிலையத்தில் நூல்கள் அடுக்கப்பட்டிருந்த பகுதிகளை சேதப்படுத்தினர். பணியாளர்களையும் கோபத்துடன் மிரட்டினர். அவர்களை நூல் நிலைய பாதுகாப்பு அதிகாரிகளால் தடுக்க முடியவில்லை என நூல்நிலைய அதிகாரி எஸ் தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

மூன்று மணிநேரம் மேற்கொள்ளப்பட்ட இந்த வன்முறைகளால் அங்கிருந்த அறிவிப்பு பலகைகள், குறியீட்டு பலகைகள் எல்லாம் அடித்து நொருக்கப்பட்டன. யாழ் நகர முதல்வர், காவல் துறையினர் ஆகியோர் செயற்திறனற்று இருந்தனர்.

தமிழ் மக்களின் கலாச்சாரம், கல்வி, இன அடையாளங்களை பாதுகாப்பதாக சிறிலங்கா அரசு தெரிவித்து வருகின்றது. அது அமைத்துள்ள இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் குழு விசாரணைகளையும் மேற்கொண்டு வருகையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது அவர்களின் உள்நோக்கங்களை தெளிவாக இனங்காட்டியுள்ளது.

*நன்றி: நெருடல்*


## தாயக கோட்பாடு தமிழர்கள் தங்கள் பூர்வீக நிலங்களில் சுதந்திரமாக வாழ்வது.

ஆனால் ஒவ்வொரு சிங்கள அரசும் மிகவும் கெட்டித்தனமாக திட்டமிட்டு பூர்வீக நிலங்களை சுவீகரித்து வருகிறார்கள். சுதந்திரந்தின் பின் டி எஸ் சேனநாயகா கெட்டித்தனமாக கல்லோயா, பட்டிப்பளை குடியேற்ற திட்டங்களை கொண்டு வந்தார். இன்று திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் பறி போய்விட்டன. கண்மூடித் திறப்பதற்குள் நான் அறிய தனியே தமிழர்கள் வாழ்ந்த யாழ்ப்பாணமும் பறி போய்க் கொண்டிருக்கிறது.

நான் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்தவன். பூர்வீக பூமி பறிபோதலின் வலி தெரியும். இங்கிருந்து விரட்டியடிக்கப்பட்ட தமிழர்களைப் பற்றி யாரும் வாய் திறப்பதில்லை. மாற்றுக் கருத்து இணையங்களை திறந்து பார்ப்பேன். சிங்களவர்களும் முஸ்லிகளும் படும் கஷ்டங்களை எண்ணி கண்ணீர் விடுவார்கள். யாழில் முஸ்லிம்கள் துரத்தப் பட்டதும், காத்தான்குடியில் முஸ்லிம்கள் படு கொலை செய்யப்பட்ட செய்திகளும் ஒவ்வொரு வருடமும் தங்களை தூசி தட்டி புதிதாய் திறக்கப்படும். இந்த மார்க்சிச, பூர்சுவா மக்குரோனி ஜனநாயகவாதிகளுக்கு தங்கள் சொந்த சகோதரர்கள் துரத்தியடிக்கப்பட்டதை பற்றி கவலை இல்லை. உண்மையில் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. புலி அழிக்கபட்டு ஒன்றரை வருடங்கள். எந்த தடையும் இல்லை. புலி அழிந்தால் தீர்வு வரும் என்று சொன்னவர்கள் எந்த தீர்வை தந்துள்ளார்கள்.

எங்கள் சொத்தி அரசியல்வாதிகளுக்கு மக்களைப் பற்றி கவலையில்லை. சரித்திரமும் தெரியவில்லை. பாவம் தமிழன்.

*- தப்பிலி (யாழில்)*



ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, NOVEMBER 05, 2010, ISSUE 135

## வாய்ப்பை தவற விட்டு விட்டார் உருத்திரகுமாரன்

இன்னமும் தனது இலக்கை நோக்கி இம்மியளவும் நகராத நாடு கடந்த அரசாங்கம், அதன் உறுப்பினர்களிடையே நடைபெறும் குழு மோதல்களால் சிதைக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் தமிழர்களிடையே காணப்படுகிறது. இந்நிலையில், நாடு கடந்த அரசாங்கத்தின் அரசவையில் எதிர்க்கட்சி என ஒன்றும் கிடையாது, உறுப்பினர்களைப் பொறுத்தவரை, அவர்கள் தமது இலக்கில் எவ்வகை மாறுபட்ட நிலைப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை என அண்மையில் அதன் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட திரு. விஸ்வநாதன் உருத்திரகுமாரன் ஊடகமொன்றிற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருக்கிறார். அவரது கருத்து உண்மை நிலையை பிரதிபலிப்பதாக அமையுமானால், அது தமிழ் மக்களுக்கு ஆறுதலைத் தரும் ஒரு விடயமாக அமையும் என்பதனை மறுப்பதற்கில்லை.

நாடு கடந்த அரசாங்கத்தில், உருத்திரகுமாரனுக்கு ஆதரவானதும், எதிரானதுமான இரண்டு பிரிவுகள் இருப்பதும், இவ்விரு பிரிவினரும் அரசவை கூட்டங்களிலும், வெளியிலும் பிரிந்து நின்று செயற்படுவதும் அறியப்பட்ட விடயமே. இக்குழுக்களின் ஆதரவாளர்கள், ஊடகங்களில் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபடுவதும், அவதூறுகளை அள்ளி வீசுவதும் கருத்துச் சுதந்திரம் என்ற வரையறைக்கு அப்பாற்றபட்டவை. அவற்றை ஆக்க பூர்வமான விமர்சனங்களாக எடுத்துக் கொள்ள முடியாது.

நாடு கடந்த அரசாங்கத்தின் உருவாக்கத்திலும், அதன் செயற்பாட்டிலும் முன்னின்று உழைக்கும் உருத்திரகுமாரனுக்கு, நாடு கடந்த அரசாங்கத்தை ஒன்றுபடுத்தி இலக்கு நோக்கி நகர்த்த வேண்டிய பெரும் கடப்பாடு இருக்கிறது. ஆனால் இவற்றை தட்டிக் கழிக்கும் வகையில் அவரது அமைச்சரவை நியமனங்கள் அமைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. கல்விப் பின்னணி, பட்டறிவு, கடந்த காலத்தில் விடுதலைப் போராட்டத்திற்கு வழங்கிய பங்களிப்பு என்ற அடிப்படையில் அமைச்சரவை பொறுப்புகள் வழங்கப்பட்டதாக அவரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், தனித்து அவருக்கு நெருக்கமானவர்களை மட்டுமே அவர் தெரிவு செய்திருக்கிறார்.

முறையான உருவாக்கம் பெறாத ஒரு கட்டமைப்பில், அதன் அமைச்சர்களுக்கென குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அதிகாரம் எதுவும் இருக்கப் போவதில்லை. இருப்பினும் சார்பு நிலையில் நின்று வழங்கப்பட்டுள்ள இந்த நியமனங்கள் மேலும் குழப்பங்களுக்கே வழிவகுக்கும். இவ்விடயத்தில் உருத்திரகுமார் இராசதந்திரத்துடன் நடந்து தனது ஆளுமையை நிரூபித்திருக்க முடியும். அந்த வாய்ப்பை அவர் தவற விட்டு விட்டார்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*எங்களுக்கு மேலை விழுந்திருக்கிற ஒண்டு இரண்டு குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளிக்க வேண்டியிருக்கிறது.*

*குற்றச்சாட்டு 1: **ஒரு பேப்பர்** சைவசமயத்திற்கு எதிரானது ஆனபடியால் கோயிலுகளிலை அதை வைக்கக் கூடாது.*

*குற்றச்சாட்டு 2: சைவ சமயத்தை பற்றி கூடாமல் எழுதிற **ஒரு பேப்பர்** மற்ற சமயங்களைப் பற்றி ஒண்டும் எழுதிறதில்லை.*

*குற்றச்சாட்டு 3: இளம் பிள்ளைகளின்ரை படத்தைப் போட்டுட்டு ஏடா கூடமான வசனங்களை எழுதி அவர்களை பிரச்சினைக்கு உள்ளாக்கிறியள்.*

*குற்றச்சாட்டு 4: நாடு கடந்த அரசாங்கத்திற்கு எதிரான தவறான கருத்துகளை எழுதிறது,*

*குற்றச்சாட்டு 5: நாடு கடந்த அரசாங்கத்திற்கு ஆதரவாய் மட்டும் கருத்துகளை பிரசுரிக்கிறது.*

*ஒவ்வொண்டாய் பார்ப்பம். நாங்கள் கடவுள் இல்லை எண்டும் சொல்லேல்லை இருக்கெண்டும் சொல்லேல்லை, அது போலை அந்தச் சமயம் திறம் எண்டும் சொல்லேல்லை இந்தச் சமயம் கூடாது எண்டு சொல்லேல்லை. சுருக்கமாய் சொன்னால் மதசார்பின்மைதான் எங்கடை கோட்பாடு. இருந்தாலும் சாமி, திருவிழா, எண்டு மனுசர் விடுகிற சில தவறுகளை சுட்டிக் காட்டி எழுதிற கட்டுரைகளை சமூக நன்மை கருதி பிரசுரிக்கிறோம். இது விசயத்திலை உங்களுக்கு திருப்தி இல்லை எண்டா உங்கட கருத்தை எழுதுங்கோ. அப்ப மற்றச் சமயங்களைப் பற்றி ஏன் எழுதிறதில்லை. நல்ல கேள்விதான், மற்றதுகளைப் பற்றி ஒருத்தரும் எழுதி அனுப்பிறதில்லை. நாங்களும் சேர்ச், பள்ளிவாசல், குருதுவாடா போன்ற இடங்களுக்கு போகிறதில்லை. வீடு தேடி வாற அல்லேயுலா தொல்லையை விட்டால், இங்கையிருக்கிற கோயில் தேருகளுக்கு கமராவோடை போய் மூக்கு முட்டச் சாப்பிட்டு வாறதோடை எங்கடை ஆன்மீகம் சரி.*

*அடுத்தது இளம்பிள்ளையிளின்ரை படத்தை போடுறது பற்றினது, பள்ளிக்கூடத்திலை படிக்கக்கிள்ளை கொப்பிக்கு கவர் போட்ட மாதிரி, எது எது எங்களுக்கு வடிவாய் தெரியுதோ, அதை அட்டையில் போடுகிறம், சினிமா நடிகைகளையோ, வேறை கவர்ச்சியான விசயங்களையோ நாங்கள் பிரசுரிக்கிறதில்லை. எங்களுக்கு உங்களைப் பற்றி தெரிஞ்சதாலை சொல்லிறம் நீங்களும் அதை விரும்பமாட்டியள். நம்புங்கோ, இந்தப் படங்களை பிரசுரிக்கிறதாலை ஒரு பிரச்சினையும் வரப் போறதில்லை. இருந்தாலும், பேஸ்புக், மைஸ்பேஸ் எண்டு சமூக வலைத்தளங்களிலை எங்கடை பெடி பெட்டையள் போடுற தங்கடை படங்களை மாதிரி நாங்கள் ஒண்டும் போடப் போறதில்லை நாங்கள் நல்ல எண்ணத்தோடை எழுதிற வசனங்களை, சிலர் குதர்க்கமாய் மாற்றி உங்களை உசுப்பேத்துகிறார்களே தவிர, வேறை ஒண்டும் இல்லை.*


*போன முறை பேப்பரிலை, இரண்டு பெட்டையள் சீரியசாய் கதைக்கிற மாதிரி ஒரு படம் போட்டம், அதிலை 'பாட்டி சுட்ட வடையை காகமெல்லோ கொண்டு போயிட்டுது' எண்டு போட்டிருந்தம். இந்தச் சின்ன விசயத்தை ஏன் சீரியசாய் கதைக்கிற மாதிரி கதைக்கினம் எண்டுற மாதிரி அது இருந்தது எண்டு உங்களிலை பலபேருக்கும் விளங்கியிருக்கும். ஆனால் ஒண்டு இரண்டு விளக்கம் குறைஞ்சதுகள் பிழையாய் விளங்கிக் கொண்டு எங்களை பாடாய் படுத்திப்போட்டுதுகள். திருக்குறளுக்கு உரை எழுதின மாதிரி நாங்கள் விளக்கம் எழுதலாம்தான் ஆனால் அது உங்கடை IQ வை குறைச்சுப் பார்க்கிறதாய் இருக்கும் எண்டதாலை அப்பிடிச் செய்யேல்லை.*

*நாலாவது குற்றச்சாட்டுக்குரிய விளக்கம் அஞ்சாவதில் இருக்குது. அஞ்சாவது குற்றசாட்டுக்கு விளக்கம் நாலாவதில் இருக்குது.*

*சந்திப்பம்*

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

# Speaking out against the regime



**Not all Sri Lankans are indifferent to abuse of the vulnerable; stories of a few brave souls?**

Many outsiders wonder why informed Sri Lankans, Tamils as well as Sinhalese, stay silent about the abuses in their country. We are *not talking only about the minorities* and human rights or pro democracy activists who are targeted without public concern. But even cases of child rape goes unmentioned (1); of course such awful things can happen anywhere but where would so many children raped get so little attention? The most often heard reason or excuse, however you look at it is that security and business concerns prevent those within the country from speaking up.

But sure this reason does not apply to those living abroad, especially those with few ties to Sri Lanka? If they can be motivated to speak up against the violations in Burma or feel sympathy for the destruction by the floods in Pakistan, surely they can feel some urgency and desire to do the same for their 'motherland'?

In a revealing article, Sinhalese commentator Tisaranee Gunasekara says "What happens when a populace willingly abdicates its right to think, because it considers thinking burdensome and, perhaps, dangerous?…Did our gradual descent into moral indifference begin in the North, when we unquestioningly accepted the outrageous lie of zero-civilian casualties?...Indifference and impunity are mutually-sustaining cancers which cannot be isolated politically or geographically; eventually the South too will be consumed by these twin ills. The proposed barricading of the country would be aimed at guaranteeing the Rajapaksa right to impunity (according to the official narrative, national interests and Rajapaksa interests are identical). But the prime guarantor of Rajapaksa impunity will be our own habit of indifference. After all, what cannot be done to and on behalf of a society which remains unmoved by the rape of its children, three a day?."

And she is not the only exception. In a brave speech addressed directly to and made in the presence of President Rajapaksa on his recent visit to Houston, USA, the Sri Lankan US lawyer, George Wiley said "I have watched the land of my forefathers descend from Paradise deep into hell.

*No one can say with any certainty who is to blame. But the time for blaming is long gone... Your Excellency, Fate and Fortune and your great political skills have placed you at a unique point in History...Do not make the Tamils feel as though they are second class citizens...The Tamil people are naked and hungry looking for you to assure them that there is a place for them. Make sure they have one.*

You killed one Prabhakaran, but do not let another one grow. You cannot prevent another one with swords and guns. You can only do that with your heart and wisdom. The compassion, truth, and justice you learned from the Buddha are the only weapons you will need… According to Dhammapada, Buddha said: Hatred does not cease by hatred at any time: hatred ceases by love, this is an old rule… Your Excellency, return us to Paradise! Return us to Paradise!"

### I have watched the land of my forefathers descend from Paradise deep into hell.

And finally, the Centre for Policy Alternatives (CPA) is based in Colombo, has launched a dedicated website aimed at promoting and protecting human rights in Sri Lanka. Being the only group to challenge the 18th Amendment in court and despite repeated death threats to its Director, Dr. Pakiasothy Saravanamuttu, promoting the thinking and talking of 'rights' - whilst other well meaning moderates have said you can't use the word "rights" and "there's no point confronting the government" - is very brave. "People's Rights' (http://www.thepeoplesrights.org) will highlight and record Human Rights issues in Sri Lanka with an emphasis on Minority Rights and will contain updated and archived news reports, detailed studies and multimedia resources in English, Sinhala and Tamil.

CPA has invited readers to submit and comment on content and is focused on making the site a hub for information about minority groups and their rights for all national and international policy makers, non-governmental organisations, academics, researchers and the media concerned.

We do not claim that the above are the only examples of bravery by Sri Lankans for Sri Lankans. We know of those such as Lasantha Wickrematunga who have paved the way for bravery such as the above and other countless attempts that go unnamed and unacknowledged.

Sadly, the sum of all such brave attempts have still not been sufficient to make a difference in Sri Lanka and this is why we need to encourage the brave and encourage each other. Sri Lankans abroad - especially apolitical professional moderates and those who visit Sri Lanka for holidays and do business there - are well placed to serve as true friends, be a mirror and support those who need support.

*[Courtesy Sri Lanka Campaign]*

# தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எதற்காக முன் நின்று பேசி வருகின்றனர்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவைசேனாதிராசா, அரியேந்திரன், சிறிதரன் ஆகியோர் அண்மையில் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து கூட்டங்களில் உரையாற்றினர். இவர்களுடன் உதயன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் வித்தியாதரனும் இணைந்து கொண்டார். இவர்கள் அனைவரும் தமிழ் மக்கள் பட்ட துயரங்கள் அழிவுகள் இழப்புகள் பற்றி மனம் உருகப் பேசி வருகிறார்கள். வடக்கு கிழக்கு மக்கள் குறிப்பாக வன்னி மக்கள் பட்ட பேரவலங்களை எல்லாம் புள்ளி விபரங்களுடன் எடுத்துக் காட்டி வருகிறார்கள். சிறை இருப்போர் காணாமல் போனோர் பற்றியும் சுட்டிக் காட்டியுள்ளனர். பொத்தம் பொதுவாகவும் உணர்ச்சி தரும் வகையிலான தமிழ் உணர்வுடனும் கூடிய அவர்களுக்கே உரிய மொழியில் பேசியவற்றைத் தமிழ் ஊடகங்களில் காண முடிந்தது.

இவ்வாறெல்லாம் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் பேசிய கூட்டமைப்பினர் விடுத்த வேண்டுகோள் யாதெனில் தங்களைத் தமிழ் மக்கள் மத்தியில் மீள் கட்டமைப்புச் செய்ய புலம் பெயர்ந்தோர் உதவ வேண்டும் என்பதாகும். அவர்களது பேச்சின் தொனி தாமே தமிழர்களின் ஏகப் பிரதிநிகளாக அரசியல் அரங்கில் நிலைத்து நீடிக்க வேண்டும் என்பதேயாகும்.

தங்களை விட்டால் தமிழர்களுக்கு எதிர்காலமே இல்லை என்பது போல அறைகூவல் விடுத்திருக்கிறார்கள். குறிப்பாக இளைஞர் கட்டமைப்பு தமது தலைமையில் உருவாக்கப்பட வேண்டும் என வித்தியாதரன் வேண்டுகோள் விடுத்தார். அதுவும் தமிழர் கூட்டமைப்புடன் இணைந்து அதனைச் செய்ய வேண்டும் என்று கோரியதுடன் தான் அரசியலில் தீவிர பங்காற்றவே தனது பத்திரிகை ஆசிரியர் தொழிலைக் கைவிட்டதாகவும் கூறியுள்ளார். அவர் இன்றைய பாராளுமன்ற அரசியலில் ஈடுபடுவது அதிக கஷ்டம் நிறைந்த ஒன்றல்ல. ஏனெனில் அவரின் மைத்துனரான சரவணபவன் கூட்டமைப்பில் பாராளுமன்ற உறுப்பினர். ஐக்கிய தேசியக் கட்சியில் முக்கிய புள்ளியாக இருந்து வந்த சரவணபவன் (உதயன், சுடர்ஒளிப் பத்திரிகையின் சொந்தக்காரர்). தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சேர்ந்து வெற்றி பெற்றார். அந்த வழியில் வித்தியாதரனும் மாகாண சபைத் தேர்தலிலோ அன்றி அடுத்த பாராளுமன்றத்திலோ வெற்றி பெறுவது பெரும் பிரச்சினை அல்ல. அதனாலேயே தமிழ்க் கூட்டமைப்பைக் கிராம மட்டத்தில் பலப்படுத்த வேண்டியும் இளைஞர் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் எனக் கோரி நிற்கிறார்.

இன்று தமிழ் மக்கள் அரசியல் விரக்தியில் ஆழ்ந்து போய் உள்ளனர். அதனாலேயே கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பதினைந்து சத வீத வாக்குகளைப் பெற்றே பதின்நான்கு உறுப்பினர்களைப் பெற்றனர். இது போதாதென்ற வகையில் தாமே மீண்டும் ஏகப் பிரதிநிதிகளாக வேண்டி நிற்கிறார்கள்.

கடந்த 33 வருடங்களாக இதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெவ்வேறு பெயர்களில் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கி எதனைச் சாதித்தனர்? முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களில் நாற்பதினாயிரம் பேரைப் பேரினவாத இராணுவ ஒடுக்குமுறை பலிகொண்டதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்கு எத்தகையது? அங்கு தமிழ் மக்களுக்குக் கொள்ளி வைக்க நீங்களும் காரணம் அல்லவா? நெஞ்சில் கைவைத்து இல்லை எனக் கூறுவீர்களா? உங்களது விசுவாசத்துக்குரிய இந்திய ஆளும் வர்க்கம் எமது மக்களைக் கொன்று குவிக்க பின்னால் நின்று யுத்தத்தை நடாத்தவில்லையா? ஒட்டுமொத்த 33 வருடங்களில் தமிழீழக் கோரிக்கையால் இரண்டரை லட்சம் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப் பட்டமைக்கு இதுவரை என்ன பதில் கூறினீர்கள்? எந்தவித வெட்கமும் ரோசமும் இன்றியே யுத்தம் முடிந்த கையோடு வந்த ஜனாதிபதித் தேர்தலில் யுத்தத்தை நடாத்திய ராணுவத் தளபதிக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கேட்டீர்கள். அதன் மூலம் மகிந்தவின் வெற்றிக்கு எதிர்மறை உதவி செய்வீர்கள். அதன் பின் உங்கள் ஆதிக்க அரசியலை முன்னெடுக்க பாராளுமன்றத் தேர்தலில் நின்றீர்கள்.

இன்று இணக்க அரசியல் செய்ய முடியாமலும் எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்க இயலாமலும் ஒருவகைப் பம்மாத்து அரசியல் நடாத்த வாய் வீச்சு நடாத்தி வருவது தான் உங்களது பரிதாபத்திற்கு உரிய நிலையாக உள்ளது.

நீங்கள் தமிழ் மக்கள் மத்தியில் எதைக் கேட்கிறீர்கள்?

உங்களது அரசியல் வேலைத் திட்டம் யாது? அதற்கான கொள்கை என்ன?

இந்தியா அமெரிக்கா பற்றிய நிலைப்பாடு பழையது தானா?

நாட்டையும் மக்களையும் குறிப்பாக இப்போது வடக்கு கிழக்கையும் விழுங்கி வரும் உலகமயமாதலின் கீழான தாராள பொருளாதாரக் கொள்கையைப் பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன?

சிங்கள மக்கள் பற்றிய பார்வையில் மாற்றம் உண்டா?

சாதியம் பற்றியும், பெண் ஒடுக்குமுறை பற்றியும் உங்களது பார்வையும், கொள்கையும் யாவை?

தொழிலாளர்கள் விவசாயிகளின் நலன்கள் பற்றி திட்டவட்டமாகக் கூறாது பொத்தம் பொதுவாகத் தமிழர், தமிழ் இனம் என்று கூறும் இன உணர்ச்சிதான் கொள்கையா?

இளைஞர் கட்டமைப்பு என்பதன் நோக்கம் என்ன?

முன்பு தமிழர் இளைஞர் பேரவையில் ஆரம்பித்து முள்ளிவாய்க்காலில் முடிந்த இளைஞர் கட்டமைப்பு மீண்டும் தேவையா?

இவற்றுக்குப் பதில் கூறாது கடந்த காலத்தைச் சுய விமர்சனம் செய்யாது பட்டறிவால் தவறான கொள்கைகளை நிராகரிக்காது எவ்வாறு உங்களால் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்க முடியும்?

புதிய கொள்கைகளைக் கொண்ட வேலைத் திட்டம் எதாவது உண்டா?

இவற்றுக்கு நேர்மையான பதில் முன்வைக்காது, தமிழர்கள் களத்திலும் புலத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்க வேண்டும் எனக் கோருவது எதற்காக? உங்களது மேட்டுக்குடி ஆதிக்க அரசியலைப் பாராளுமன்ற வழிகளில் முன்னெடுக்கவே அன்றி வேறு எதற்காகவும் இல்லை என்பதே உண்மை. இவற்றைத் தமிழ் மக்கள், குறிப்பாக இளந் தலைமுறையினர், உணர்ந்து கொள்வதும் புதிய மார்க்கம் தேடுவதும் அவசியமாகும்.

*நன்றி: புதிய பூமி*

நெஞ்சில் ஒரு
களங்கமில்லை
சொல்லில் ஒரு
பொய்யுமில்லை
வஞ்சமில்லா
வாழ்வினிலே
தோல்வியுமில்லை

OPINION

# Machiavellian Branding of Rebels as Terrorists Enabled Genocide of Tamils!

## By Periasamy Kanthavel

Sri Lanka with substantial participation of India and with the 'nod and wink' of the Western-world planned and carried out the annihilation of Tamils, telling the world that the LTTE, the terrorist organization, was different and the Tamils were different and that they would look into the genuine grievances of them, once the Terrorists, the tigers were destroyed. What a shame, this they faithfully followed what the Sri Lanka Govt. was telling the innocent and busy world while planning and executing the the slaughter of Tamils.

Sri Lanka, India and the so called Western-World; each had different agenda and the Tamils in Vanni, were made the victims or the guinea pigs. The silent schemer, the UK Govt. further added that the Tigers are not the democratic representative of Tamils. Further, " Britain trying to dodge obligations to prevent Genocide of Tamils." said, Prof. Boyle *[TamilNet, Monday, 02 March 2009, 04.05 GMT]* •

Now what is happening over there? We, the Tamils, know well that the chauvinist Sri Lankan leaders to-day are openly engaging in ethnic cleansing and in changing the demographics of traditional Tamil areas. This is an evil combination that spells death and annihilation for freedom-aspiring Tamils of Sri Lanka. This too, is possibly the continuation of the original 'grand plan', an acceleration of imperial ambitions.

The recent visit of the Commonwealth Parliamentary Association (CPA), UK branch, in the opinion of the writer is just to feel of the progress of the grand plan. After a discussion with President Mahinda Rajapakse on 18 October 2010, it is reported that the CPA had told him that they would stand by him and were ready to help Sri Lanka. They were also of the opinion that Terrorism from LTTE had gone and that the three 'R's; reconstruction, rejuvenation and reconciliation is the order of the day after their frank and cordial discourse for 45 minutes.

These honorary members of the British-parliament must have overlooked their responsibility and overjoyed because of the splendid hospitality and also must have got lost after watching the series of well directed propaganda video presentations. One must accept that the Sinhalese in Colombo are real masters in that art and always get the desired outcome.

There is 'No Joy' for the Diaspora Tamils, except for the few; the utterly innocent ones and the others suffering from various kinds of phobia like 'remnant of colonialism', inferiority complex, opportunism, who fell in line with with the Labour party and tried to alienate Tigers from Tamils.

If the president is opposed in giving the due political rights of an endangered minority who have a homeland then the CPA should decide what type of democracy is being practiced in Sri-Lanka.

Let the world powers be inspired by, the opening words of the last editorial that Wickramatunga, editor of Sri Lanka's The Leader and brave defender of the rights of all Sri Lankans, wrote, shortly before (and in anticipation of) his assassination:

*"...a military occupation of the country's north and east will require the Tamil people of those regions to live eternally as second-class citizens, deprived of all self respect. Do not imagine that you can placate them by showering "development" and "reconstruction" on them in the post-war era. The wounds of war will scar them forever, and you will also have an even more bitter and hateful Diaspora to contend with. A problem amenable to a political solution will thus become a festering wound that will yield strife for all eternity. If I seem angry and frustrated, it is only because most of my countrymen - and all of the government - cannot see this writing so plainly on the wall."*

## No development worthy of mention in Jaffna

**Che Guevara once said," God please take care of my friends. I will take care of my enemies myself".** That is the position of most of us.

A similar visit to Jaffna was also made by a delegation of German MPs led by Ms. Petra Ernstberger accompanied by German Ambassador to Sri Lanka, Mr. Jens Ploetner and Mr. Guido Baumann, officer in charge of press affairs. Mr. Guido Bauman, at the end of the visit Thursday, told local press that the delegation saw no development worthy of mention in Jaffna. He added that the main intention of the delegation was to find out how the German tax payers' money given as donation is being used in Jaffna peninsula. *[http://www.tamilnet.com/art.html?catid=13&artid=32944]*

ஒரு பேப்பர் ORU PAPER

**ஒரு பேப்பர்**
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

*ஆசிரியர் குழு:*
*பிரித்தானியா*
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்

*கனடா*
தயா - அரவிந்தன் - சிந்து

*பிரான்ஸ்*
சிறி

*ஜேர்மனி*
சபேசன்

*சுவிஸ்*
சயந்தன்

*பொறுப்பாசிரியர்*
- கோபி -

*மக்கள் தொடர்பு*
சாரதா

*விளம்பரம்*
சோபனா

*அச்சு*
தர்சினி (கனடா) பானு

*வடிவமைப்பு*
மயூரன் - விஜி

*முகப்பு வடிவமைப்பு*
seven zero graphics

*விளம்பர வடிவமைப்பு*
ரஜீவன் - மாயா

*தமிழ் எழுத்துரு உதவி*
சுரதா யாழ்வாணன்

*நிதி – நிர்வாகம்*
பானு

*வழங்கல்*
உதயகுமார்-சிவா-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

*தொலைபேசி* (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

*தொலைநகல்* (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

*ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:*

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
*மின்னஞ்சல்:*
info@orupaper.com
*இணையம்:*
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Orupaper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# தாள் பணிந்து ஒரு தலை வணக்கம்

ஆண்டவர் என்று எனக்கு ஆருமில்லை இறைவன் என்று எவனையும் நம்பவுமில்லை தெய்வம் என்று எனக்குத் தெரிவோர் மாவீரர் மாத்திரமே. மாவீரத் தெய்வங்கள் மாவீரச் செல்வங்கள் என்று அவர்களை அழைப்பதே எனது பெருவிருப்பு. தமிழீழம் என்ற ஒன்றை இலக்காகக் கொண்டு வீரச் சாவடைந்த அனைவரும் மாவீரர்களே. உலகில் ஒடுக்கப்படும் மக்களுக்காக சொல்லாலும் செயலாலும் உணர்வாலும் ஓர்மத்தாலும் பணிபுரிந்த அனைவரும் மாமனிதர்களே. மாவீரர்களை நினைவு கூரும் மாரி கால கார்த்திகைக் காலத்தில் நெஞ்சார அவர்கள் நினைவுகளைப் பகிர்கிறேன்.

சென்று திரும்பா எம் மாவீரத் தெய்வங்களின் ஆழ்ந்த அர்த்தமும் அதனிடையே நிலைத்து ஓர்ந்த தியாகமும் ஒருப்பட்ட உறுதியும் நேர்ந்த வாழ்வில் நெறிபிறளா இருப்பும் கூர்ந்த நோக்கும் குனியாக் கொள்கையும் கொண்டவர்கள் பற்றி என்ன சொல்லிவிட. எதனை எடுத்து இயம்பிட சொல்லுக்குள் அடங்காத சோதிகள் அல்லவா இவர்கள். வெல்வதைத் தவிர வேறொன்றும் அறியாதிருந்தவர்கள் அல்லவா இவர்கள்.

அதனை நான் கண்டேன் செருப்புப் போடாத சப்பாத்து அணியாத தனித்த கால் புழுதி படிந்த கால் ஒடுக்கமும் உறுதியும் கொண்ட ஆணின் கால் அது. அதனைக் கண்ணுற்றேன் எங்கள் மண்ணில் இருந்து கிளர்ந்த கால், எழுந்த கால் எங்கள் மண்ணின் பல்லாயிரம் கால்களை அழித்த கூட்டத்தின் தளபதியை அழிக்க நிமிர்ந்த கால் நடந்து வந்த கால், வந்து சென்ற கால், செய்து முடித்த கால்.

யாவற்றையும் உங்களுக்கு நினைவூட்ட வேண்டுமா? ஞாபகமேயில்லையா? அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஐஸ் தொழிற்சாலையின் அருகில் மணலில் புதைத்து வைக்கப்பட்டிருந்தன கண்ணிவெடிகள். உப்புக்காற்று படர்ந்த தீவின் மக்களை கண்ணிவெடிகளின் மேலாக நடக்க வைத்தானே ஒருவன் அவன் பெயர் இங்கே எதற்கு? அப்போதைய சிங்களத்தின் பாதுகாப்பு அமைச்சர் அவன். கண்ணிகள் வெடிக்கிறபோது தமிழர் கால்களை இழந்தனர் கால்களை மாத்திரமா இழந்தனர்? அந்தக் கடல் பெருவெளியில் அவர்கள் உயிர்கள் ஆவியாகப் போயின. கடற்காற்றின் வெக்கை போக்க ஓலைத் தொப்பி அணிந்து அதைப் பார்த்து கைகொட்டிச் சிரித்தான் அவன்.

அவனை அழிக்க தனித்து அலைந்தன இரட்டைக் கால்கள்.

அதில் ஒற்றைக்காலை கொழும்பின் வீதியொன்றில் நான் கண்டேன் அந்த நாளில் அந்தக் காலின் நகக் கண்ணில் அழுக்கு இருந்தது அதனிலும் மேலாக செய்த செயலுக்கு அழகு தெரிந்தது. அந்தக் கால்களை கண்ணில் ஒற்றி வணங்குகிறேன். அந்தக் கால்களை ஈன்ற அன்னையவள் ஈன்ற பொழுது எண்ணெய் தேய்த்து நீட்டி நிமிர்த்தி அழுத்தி அமுக்கி அழகு செய்திருப்பாள். வயிரம் பாய வழிவகுத்திருப்பாள் வயிரம் பாய்ந்த அந்தக் கால் எழுந்து செய்த செயல் செயற்கரியது. எதிரியை அழித்து எம்மை தலை நிமிர்த்தியது. ஐயனே உன் தாள் பணிந்து தலை வணங்குகிறேன்.

## சற்று மாறுதலுக்காக

எழுதுவது: **சேயோன்**

அதனையும் நான் கண்டேன் கறுத்தப் பெண் அணிந்த அந்தக் கண்ணாடியை நான் கண்டேன். பெரும்புத்துார் பெருவெளிதனில் தனித் தலைந்த அந்தக் கண்ணாடியைக் கண்ணுற்றேன். கடல் கடந்து வந்தாயா வீர காவியம் பாடிய எங்களை கபளீகரம் செய்ய முயன்றாயா கழுத்தறுக்க நினைத்தாயா பல்லாயிரக் கணக்கில் அவதியுற்று அழிந்து போனோமே ராஜ பரம்பரையில் வந்த அதிகார வர்க்கத்தின் இளவரசன் நீ. அந்த மமதை உனக்கு. ஆணவம் திமிர் செருக்கு அத்தனையும் உன்னிடம். இந்த ஏழை மனதை நீ எப்படி அறிவாய் ஈழத் தமிழரின் இதய தாகத்தை உன்னால் எப்படி உணர முடியும்?

'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்' கூரிய வாள் தான் உன் மேல் பாய்ந்தது. கண்ணாடி அணிந்த காரிகை அக்காரியம் செய்தாள் காலங்களில் அளவற்ற நம்பிக்கை இருந்தது. காலம் ஒரு போதும் நம்மைக் கைவிடாது. இலக்கு தெளிவெனில் நேர் கொண்ட பார்வை இருக்கெனில் நீதியும் நேர்மையும் நியாமமும் உண்மையும் சூழ வரும். காலம் கை கொடுக்கும் கைவிடாது. காலத்தைக் கையில் எடுத்தாள் அக் கண்ணாடிப் பெண். குனிந்தாள் வணங்கினாள். கும்பிடு போட்ட கையும் முகமும். காலமும் சிதறியது. அந்த வெளிதனில் இப்போது அக்கண்ணாடி தனித்து அலைகிறது. நான் என்ன செய்வேன். கண்ணாடியை எடுத்தேன் கண்ணில் ஒற்றினேன் புதிய ஒளி தெரிந்தது. புதிய வழியும் புரிந்தது. அன்னையே உன் தாள் பணிந்து தலை வணங்குகின்றேன் ஏற்றுக் கொள்.

இன்னும் உள்ளன. நாற்பதினாயிரத்துக்கு மேற்பட்டோர் மாவீரர்கள் என்று ஓர் கணக்குச் சொல்கிறது. வெறும் கணக்குக்குள்ளேயா அடக்கப் போகிறோம்? அத்தனையும் காவியம் செறிந்த கதைகள் அல்லவா இன்னும் இருக்கின்றன நாற்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட காவியங்கள்.

'அம்மா போட்டு வாறன்' என்று சொல்ல முடியாது போனோர் எத்தனையாயிரம் பேர். அடையாளம் தெரிய முடியாமல் அங்கு பத்தும் இங்கு பன்னிரண்டுமாய் சிதைந்தோர் எத்தனையாயிரம் பேர். வானில் வரலாறானோர் கணக்குச் சொல்லலாம். கடலில் காவியமானோர் கணக்குச் சொல்ல முடியுமா? காற்றுப் புக முடியா இடத்திலும் புகும் வல்லமை பெற்ற கரும்புலியானோர் எத்தனையாயிரம் பேர்.

வெட்ட வெளிதனில், பட்டப் பகலினில், நட்ட நடு இராவினில், எட்ட முடியா ஏதோ ஒரு திக்கினில் தம்மை அழித்து தமிழரை நிமிர்த்தினோர் கதை அறிய முடியுமா? எத்தனை சம்பவங்கள் நிகழ்ந்தன அத்தனை சம்பவங்களையும் யார் கணக்கினில் வைத்தனர்? இராணுவ முகாம்கள் எத்தனை தகர்க்கப்பட்டன சுற்றி வளைப்புத் தாக்குதல்களும் வழிமறிப்புத் தாக்குதல்களும் என்று எத்தனை நிகழ்ந்தன. கடல் வெளிச் சமரும் தரைவழிச் சமரும் கணக்கிட முடியாதவை. வேவுப் புலிகளின் வீரமும் ஓர்மமும் யார் தான் அறிந்தனர் ? யாரும் எவரும் எண்ணிப் பார்க்க முடியாத காரியங்கள் எத்தனை நிகழ்ந்தன.

அத்தனைக்கும் யார் காரணம். மாவீரர்கள் அல்லாது வேறு யார்? மாவீரர் என்போர் வெறும் மானுடர் அல்லர் ஈழத் தமிழரின் இதயத் தெய்வங்கள். மேலாக தமிழீழ அன்னையின் ஆன்மா. ஆயிரமாயிரமாய் வீழ்ந்த அத் தெய்வங்களும் அத்தனை தமிழரின் மனதிலுள்ள அந்த ஆன்மாக்களுக்கும் தாள் பணிந்து தருகின்றேன் தலைவணக்கம்.

# உங்களிடம் பணமா? பணத்திடம் நீங்களா?

*'பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லது இல்லை பொருள்'* (குறள் - 751)
'எத்தனை ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிப்புடையவராகச் செய்வதாகிய பொருளை விட சிறப்புடைய பொருள் வேறு இல்லை' என்கிறார் திருவள்ளுவர். மதிக்கத் தகாதவரையும் மதிக்க வைக்கும் அளவு பணம் சக்தி படைத்திருப்பது திருவள்ளுவர் காலத்திலேயே இருந்திருக்கிறது. அறநெறி, வாய்மை, நற்குணங்கள் போன்றவற்றிற்கு பிரதான இடம் தந்து வந்த அந்தக் காலத்திலேயே பணத்திற்கு அந்த அளவு மதிப்பு என்றால் இந்தக் காலத்தில் அதன் மகத்துவத்தைச் சொல்ல வேண்டியதேயில்லை.

பணமும் அதிகாரத்தைப் போல ஒரு போதை வஸ்து என்றே சொல்ல வேண்டும். எங்கு போய் சேர்கிறதோ அங்கே பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் சக்தி அதற்கு உண்டு. அந்த மாற்றங்கள் நல்லதாக இருப்பதை விட மோசமானதாக இருப்பது தான் அதிகம். அதை உணர பணம் வந்து சேரும் முன் மற்றும் பணம் வந்து சேர்ந்த பின் என்ற இருநிலைகளையும் ஒப்பு நோக்கினால் போதும். நடை, உடை, பாவனை, பேச்சு எல்லாமே பெரும்பாலானோரிடம் மாறி விடுவதைக் காணலாம். சிலர் சட்டைப் பையில் சிறிது பணம் இருந்தால் போதும் நடையில் ஒரு துள்ளலும், பேச்சில் ஒரு பெரிய மனிதத் தனமும் கூடுதலாக சேர்வதை நாம் அடிக்கடி பார்க்கலாம். அந்தப் பணம் தீர்ந்து போனவுடன் அவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்பி விடுவார்கள். ஆரம்பத்தில் இருந்தே பணத்தை அதிகமாகப் பெற்றிருப்பவர்களை விட சில திடீர் பணக்காரர்கள் பெரிதும் மாறுவதை நாம் அதிகம் மாறலாம். அடிமட்டத்தில் இருந்த நாட்களை அடியோடு மறந்து தங்களை முதன்மைப் படுத்துவதில் அவர்கள் காட்டுகிற ஆர்வம் அலாதியானது. புதிதாகக் கிடைத்த செல்வத்தினால் வாங்கிய பொருள்களை அவர்கள் மற்றவர்கள் பார்வைக்குக் காட்டுவதிலும், பழைய நாட்களின் நண்பர்கள் உறவுகளை விட்டு விலகி புதிய பணக்கார நண்பர்கள், உறவினர்களைத் தேடிப் போவதிலும் அவர்கள் மிகுந்த ஆவலாக இருப்பதையும் பார்க்கலாம். அப்படி மாற்றத்தை ஏற்படுத்த மிக முக்கிய காரணம் என்ன என்றால் பணத்திற்கு நமது சமூகத்தில் தரும் அபரிமிதமான இடம் என்றே சொல்ல வேண்டும். பணம் பத்தும் செய்வதையும், பாதாளம் வரை பாய்வதையும் கண்டு அதை மிக உயர்வாக நினைத்து பூஜிப்பதே காரணம்.

பணம் மிக முக்கியமானது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் பணம் மட்டுமே முக்கியமானது என்பது முட்டாள்தனம். பணம் வைத்திருப்பவர்கள் எல்லாம் மிக உயர்ந்தவர்கள், வெற்றியாளர்கள் என்று கொண்டாடுவதும், பணம் இல்லாதவர்கள் எல்லாம் தோல்வியாளர்கள், ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்று அலட்சியப்படுத்துவதும் வடிகட்டிய முட்டாள்தனம். வாழ்ந்த காலத்தில் வறுமையிலேயே வாடிய காரல்மார்க்ஸ், பாரதியார் போன்ற எத்தனையோ சிந்தனையாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் எல்லாம் இன்றும் உலகத்தால் போற்றப்படுகிறார்கள். வரலாறு அவர்களை நினைவு வைத்திருக்கிறது. அதே நேரத்தில் அவர்கள் வாழ்ந்த காலத்தில் செல்வச் செழிப்பில் இருந்தவர்கள் எல்லாம் இருந்த சுவடு தெரியாமல் மறைந்து விட்டார்கள். இதில் யார் வெற்றியாளர்கள்?

எனவே பணத்திற்கு அதற்கு உரிய இடத்தை விட அதிகப்படியான இடம் தருவதும், அது இருக்கிறது என்ற காரணத்தால் தலைகால் புரியாமல் நடந்து கொள்வதும் நகைப்புக்குரியதே. ஓரிடத்தில் நில்லாது இடம் மாறிச் செல்லும் தன்மையினால் அது செல்வம் என்று செந்தமிழில் அழகாக அழைக்கப்படுகிறது.

இருப்பதை இழப்பதற்கும், இழந்ததைப் பெறுவதற்கும் அதிக காலம் தேவையில்லை. இந்த பேருண்மை தினந்தோறும் நம் முன்னால் பலர் அனுபவங்கள் மூலம் பறையறிவிக்கப் பட்டாலும் பலரும் உணரத் தவறி விடுகிறார்கள்.

ஒருவிதத்தில் பணமும், அதிகாரமும் ஒருவனை அடையாளம் காட்டும் அருமையான கருவிகள் என்றே சொல்ல வேண்டும். அவை சென்று சேரும் நபர்கள் நடந்து கொள்ளும் விதங்களிலேயே அவை அவர்களது உண்மையான தன்மைகள் இன்னதென்று தெளிவாகக் காட்டுகின்றன.


பணம் உங்கள் கையில் இருக்கிறதா, இல்லை பணத்தின் பிடியில் நீங்கள் இருக்கிறீர்களா என்பதைப் பொறுத்தே அதன் பயன்படும் தன்மை நிர்ணயிக்கப் படுகிறது. பணம் உங்கள் கையில் இருக்கும் போது, பணத்தின் எஜமானனாக நீங்கள் இருக்கும் போது அது உங்களுக்கும், உங்களைச் சார்ந்தவர்களுக்கும் மிக நல்ல முறையில் பயன்படும். உங்கள் மனிதத் தன்மையை நீங்கள் தக்க வைத்துக் கொண்டு அதை சிறந்த முறையில் பயன்படுத்தி அனுபவிப்பீர்கள். ஆனால் அதன் பிடியில் இருக்கும் போது, உங்கள் எஜமானனாக மாற அதை நீங்கள் அனுமதிக்கும் போது நீங்கள் அடிமையாகவும், கோமாளியாகவும் மாறி விடுவீர்கள். அது நல்ல விதத்தில் பயன்படாமல் உங்களைப் பாடாய் படுத்தும்.

உங்களை நிர்ணயிப்பதே அது தான் என்கிற ஒரு போலி சித்தாந்தத்தில் மூழ்கி போதையில் இருப்பவர்கள் நடந்து கொள்பவர்கள் போல நடந்து கொள்ள ஆரம்பித்து விடுவீர்கள். உங்கள் நடவடிக்கைகளின் வேடிக்கைத் தன்மை உங்களைத் தவிர மற்ற அனைவருக்கும் தெளிவாகத் தெரியும். நீங்கள் அதன் பிடியில் இருந்து ஒரு வேளை நீங்கி மீண்டால் எத்தனையோ நல்ல விஷயங்களையும், நல்ல தன்மைகளையும் இழந்து விட்டிருப்பது அப்போது புரியும்.

எனவே பணத்தை மதியுங்கள். அதற்கு உங்கள் வாழ்க்கையில் உரிய இடத்தைக் கொடுங்கள். அது உங்கள் நல்ல தன்மைகளை அழித்து விடாதபடி அதற்கு எஜமானனாக இருந்து முறைப்படி பயன்படுத்துங்கள். பணம் மேலும் வந்து சேரச் சேர அது உங்கள் எஜமானனாக மாற மட்டும் அனுமதிக்காதீர்கள்.

*- என். கணேசன்*

# வலி சுமக்கும் நினைவுகளை உரமாக்குவோம்



இவனை பெற்றெடுக்க முடியவில்லையேயென்று
தமிழ்த் தாய்களால் தத்தெடுக்கப் பெற்று
தாலாட்டப்பட்டவன்.... தன் புன்சிரிப்பை
ஈழத்தின் அடையாளமென
அகிலத்திற்கும் பறைசாற்றியவன்..

நீ மறைந்தாலும் - மலருவாய்
வீட்டிற்கு ஒரு தமிழ்ச் செல்வனாய்..
அதுவரை..
உன் தம்பிகள் எடுத்துச் செல்வர்
உன் கடமையை...

– பகலவன்

*'வன்முறையைச் சகித்துக் கொள் என்று அகிம்சையைப் போதிப்பதும், ஒரு வகையில் வன்முறை தான்'*

அண்மையில் இணையத்தளமொன்றில் வெளிவந்த யதார்த்தபூர்வமான தகவல் இது.

ஆயுதப் போராளியாக உருவெடுத்து, பலகளம் கண்ட பிரிகேடியர். தமிழ்ச்செல்வன், அரசியல்த் துறைப் பொறுப்பாளராகி பல நாடுகள் சென்று, சமாதானம் மூலம் தீர்வினை அடையலாமென முயற்சித்தார்.

அந்த அரசியல் சார்ந்த அகிம்சைக் குரலை சர்வதேசம் செவிமடுக்கவில்லை.

**புன்னகை தவழ, பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட தமிழ்ச் செல்வனை, மகாவம்ச மன நோயாளிகள் குண்டு வீசி கொன்றொழித்தனர்.**

வன்முறைதவறென்று, ஒடுக்கப்படும்ஈழத்தமிழ்த்தேசிய இனத்திற்கு அறிவுரை வழங்கிய அனைத்துலகம், அமைதியாக இருந்தது.

ஆனாலும் இற்றைவரை, போர்க்குற்றங்களுக்கு எதிரான ஒரு குரல், ஆசிய நாடுகளிலிருந்து எழவில்லை.

நீண்டகாலமாக, சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து, உலக மனித உரிமைமைச் சங்கங்கள் அறிக்கைகளை சமர்ப்பித்தாலும், சர்வதேச நாடுகள் எந்தவித அழுத்தங்களையும் இலங்கை அரசின் மீது பிரயோகிக்கவில்லை.

இவைதவிர, சரத்பொன்சேக்காவின் விடுதலைக்காக போராட்டங்கள் நடாத்தும் எதிர்க்கட்சிகளும் தென்னிலங்கை இடதுசாரிகளும் சிறையில் வாடும் தமிழ் இளைஞர்கள் குறித்து மௌனம் சாதிப்பதை கைவிடவில்லை.

யாழ் குடா மக்கள் மீது, பேரினவாதம் தொடுத்துள்ள கலாச்சார இன அழிப்பு (Cultural Genocide), திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தோடு, யாழ் நூலகத்தின் மீதும் பரவுகின்றது.

81இல் எரிக்கப்பட்ட ஆசியாவின் மிகப்பெரிய அறிவுக் களஞ்சியம், காடையர்களால் மறுபடியும் சின்னாபின்னப்படுத்தப் படுகிறது.

இதனைத் தட்டிக் கேட்க எவருமில்லை. இவை போன்ற சிங்களக் குடியேற்றங்களும், நூலக சிதைப்புக்களும், மீண்டுமொரு இன வன்முறையை தோற்றுவிக்கும் காரணிகளாக அமைந்து விடுமென, யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன் எச்சரிக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தரப்பிலிருந்து, இவ்வாறான எச்சரிக்கைஅறிக்கைகள், அறிக்கைகள் குறைவில்லாமல் வெளிவந்து கொண்டிருப்பதை மட்டுமே காணக்கூடியதாக உள்ளது.

அதே வேளை, இலங்கையின் அபிவிருத்தி அமைச்சரும் , மகிந்தவின் தம்பியுமான பசில் இராஜபக்சே, யாழ் நகரில்நடாத்திய கூட்டமொன்றில், யாழ் குடாஅபிவிருத்திக்காக 2.85 மில்லியன் பவுண்களை ஒதுக்கப்போவதாக உறுதிமொழி ஒன்றினை வழங்கியிருந்தார்.

சர்வதேச நாணய நிதியம் வழங்கிய 2.6 பில்லியன் டொலர் கடனிலிருந்து, இதற்கான நிதியை ஒதுக்கப்போகிறாரா ? அல்லது வெளிநாடுகளிலிடம் கையேந்தப் போகிறாரா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

## அரசியல் அலசல்

**இதயச்சந்திரன்**

ஆனாலும் இதேயளவு பணத்தினை, இலண்டனிலுள்ள பரப்புரை நிறுவனமொன்றிற்கு வழங்கி தமது இழந்து போன செல்வாக்கினை நிமிர்த்த சிங்களம் முயற்சிப்பதைக் கவனிக்க வேண்டும்.

அபிவிருத்திக்குப் பணமில்லையென்று, இங்கிருந்து செல்லும் சிறு குழுக்களிடம் முதலைக்கண்ணீர் வடிக்கும் பேரினவாத சிங்கள அரசு, சர்வதேச பரப்புரைக்காக 3 மில்லியன் பவுண்ஸ்களைச் செலவிடுகிறது.

இதேபோன்று மேலும் இரண்டு நிறுவனங்களுக்கு, தலா 3 மில்லியன்களை ஒதுக்கியிருப்பதாகவும் தகவல் உண்டு.

வடக்கு அபிவிருத்தியைக் காரணம் காட்டி, பேராசான் பீரிஸ், உலகெங்கும் கடன் வாங்கித் திரியும் அதேவேளை உலகின் பரப்புரைப் பிரம்மாக்களுக்கு வழங்குவதற்கு எங்கிருந்து இவர்களுக்கு நிதி வருகிறது என்பதுதான் மில்லியன் டொலர் கேள்வியாகும்.

இந்த 3 மில்லியன் கொம்பனியின் பரப்புரைப் பணியானது, பிரித்தானிய எஃவ். எம் (F.M) அலைவரிசையொன்றில் ஆரம்பமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

சுயநிர்ணய உரிமை என்கிற பயங்கரவாதத்தை ஒழித்த சிங்கள தேசத்தில் முதலிட முன்வாருங்கள் என்று குரல் அங்கு ஒலிக்கத் தொடங்கி விட்டது.

ஆனாலும் சிங்கத்திற்கு எதிரான போராட்டங்கள், புலம்பெயர் நாடுகளில் முனைப்புப் பெற்று வருவதை அவதானிக்க வேண்டும்.

பேர்மிங்காமிலிருந்து இலண்டன் வரையான இதயங்கள் இணைந்த மனித நேய நடைப்பயணம் (EART 2 EART WALK), புதிய பரிமாணப் பரப்புரைத்தளத்தில் புகுந்துள்ளது.

அத்தோடு டென்மார்க்கில் வசித்து வரும் மூன்று ஈழத்தமிழர்கள், நெதர்லாந்திலுள்ள அனைத்துலக நீதிமன்றில், இலங்கை அரசிற்கெதிராக வழக்கொன்றினை தாக்கல் செய்துள்ளனர்.

டென்மார்க் சட்டத்ரணி ஜோன் எல்ம்யூட்சினால் தொடுக்கப்பட்டுள்ள இவ் வழக்கு வெற்றி பெற்று, அரசிற்கெதிரான போர்க்குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்படுமாயின், இலங்கையின் அரச அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் 111 நாடுகளுக்கு செல்ல முடியாத நிலை தோன்றும்.

அனைத்துலக நீதிமன்றப் பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திடா விட்டாலும், அதனை ஏற்றுக் கொண்ட 111 நாடுகள், நீதிமன்றத் தீர்ப்பினை அமுல்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப் படுவார்கள்.

ஆகவே இறுதிப்போரில் தமிழ் இன அழிப்பினை மேற்கொண்டு இராஜதந்திரிகள் போல் வேடமிட்டவாறு வெளிநாடுகளில் தூதுவர்களாக இருப்பவர்கள், கைது செய்யப்படலாம் அல்லது சிறீலங்காவிற்கு திருப்பி அனுப்பப்படலாம்.

**அண்மையில் பிரித்தானியாவிற்கு விஜயம் செய்த வெளிநாட்டமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், புலம் பெயர் தமிழ் மக்களில் கணிசமானோர் தம்மோடு இணைந்து வருகிறார்கள் என்று தெரிவித்திருந்தார்.**

ஆனாலும் உலகத் தமிழ்ப் பேரவை வெளியிட்ட புகைப்பட ஆதாரங்களால், பீரிசின் பிரித்தாளும் இராஜதந்திர கூற்றுக்கள், புஸ்வாணமாகிப் போனதையும் நாம் தரிசித்தோம்.

இன்னும்பல ஆதாரங்கள் தம்வசம் இருப்பதாகத் தெரிவிக்கும், பேரவையின் தலைவர் அருட்திரு. இம்மானுவல் அடிகளார் அவர்கள் ஐ.நா. சபையின் போர்க்குற்ற விசாரணைக்கான ஆலோசனைக் குழுவின் வேண்டுகோளுக்கமைய, வருகிற டிசெம்பர் 14ம் திகதிக்கு முன்பாக, பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தமது சாட்சிகளை பதிவு செய்ய முன்வர வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளார்.

புவிசார் அரசியலில் ஏற்படும் மாறுதல்கள், இந்த ஐ.நா.வின் ஆலோசனைக் குழுவினை எத் திசையில் திருப்பிவிடும் என்கிற அச்சம் எமக்கு இருந்தாலும், பதிவு செய்யப்படும் சாட்சியங்கள், ஒரு வரலாற்றுச் சான்றாகவும் அதே வேளை அனைத்துலக நீதிமன்றங்களில் நாம் முன்னெடுக்கும் வழக்குகளுக்கு உறுதுணையாகவும் நிச்சயம் அமையும்

பத்துப்பக்கங்களுக்குள் உள்ளடக்கப்பட வேண்டியஇச் சாட்சியங்களை பதிவுசெய்வதற்கு, புலமைசார் உதவிகள் தேவைப்படுமாயின் அதனை வழங்குவதற்க்கு, பிரித்தானிய தமிழர் பேரவை போன்ற அமைப்புக்கள் முன் வரவேண்டும்.

**புலம்பெயர் தமிழ்மக்கள் ஒன்றுபடக் கூடிய இவை போன்ற பொதுத் தளங்களில், சகலரும் இணைந்து பணியாற்ற முன்வரவேண்டுமென்பதே அனைத்துத் தமிழ்மக்களின் வேண்டுதலாக இருக்கிறது.**

அபிவிருத்தி மாயைக்குள் புலம்பெயர் மக்களை வீழ்த்தி, இதுவரை காலமும் (இன்றும்) தாம் மேற்கொண்ட தமிழின அழிப்பினை முள்ளிவாய்க்காலில் மண்போட்டு மூடியது போல் மறைத்து விடலாமென சிங்களம் முயற்சிக்கிறது.

மாவீரர்களைநினைவுகூறும் இம்மாதத்தில் வலி சுமக்கும் ஆழ் மனப்பதிவுகளை உரமாக்கி, இலட்சியம் நோக்கிப் பயணிப்போம்.

**தாயகம் காப்போரின் தாள் பணிவோம் நேயமுடன் அவரை நினைவில் கொள்வோம்**

ஒரு பேப்பர்

# Select
**Estate & Lettings**

*Eastam, Lewisham, Hanger lane, Newbury Park* இன்னும் லண்டனில் பல பகுதிகளில் *Grocery & off Licence, Chicken Shop, A3* அனுமதியுடனான கடைகள் *Leasehold, Freehold*-க்கு விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணத்தில் சுண்டிக்குளி, ஆரியகுளம், பண்டத்தரிப்பு, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் வெறுங்காணி, வீட்டுடனும் விற்பனைக்குண்டு. பருத்தித்துறை வீதியில் 5 பரப்பு, ஹோட்டல், மருத்துவ விடுதி போன்றவற்றுக்கு உகந்தது.

லண்டனில் வீடுகள் வாங்க, விற்க, வாடகைக்கு விடவும் நம்பிக்கையான, நாணயமான சேவைக்கு நாடவேண்டிய நிறுவனம்.

**0208 470 1500**

**07956 150 580**

www. select.gb.com





## வீடுகள் வாங்க விற்க வாடகைக்குவிட மற்றும் அனைத்துவித பராமரிப்பு சேவைகளுக்கும் நாடுங்கள்!



**WE ARE LOOKING FOR PROPERTIES IN**

- Brockley
- Catford
- New Cross
- Nunhead
- Peckham
- Penge
- Plumstead
- Croydon
- Sydenham
- Charlton
- Deptford
- Dulwich
- Eltham
- Forest Hill
- Anerley
- Bellingham
- Blackheath
- Camberwell
- Lee
- Ladywell
- Lewisham
- Hither Green
- Downham
- Bromley
- Greenwich

and the surrounding areas

**LANDLORDS**

We seek to introduce our property Sales, Lettings and Management to you and we are currently managing properties in your area.

**TENANTS**

If you are looking for properties within the areas mentioned above, we can help you whether you are Working or receiving Housing Benefit.

## FREE MARKET VALUATION

அழையுங்கள்

**Sammy, Lee, Kumar or Lux**

**0208 7788400**

(Sydenham)

Web: www.yourperfectmove.co.uk

YOUR PERFECT MOVE



## உங்கள் உடனடித் தேவைக்கு கையில் பணம் இல்லை என்ற கவலையா?



நாங்கள் இருக்கும் போது நீங்கள் இப்படி தலையைப் பிய்க்க வேண்டிய அவசியமில்லை.

**உங்களுக்கு கிடைக்கும்**

- Benefit Cheques
- Inland Revenue
- Insurance Refund
- Wages
- Commissions
- Lottery Winning Cheques
- A/C payee

**இவற்றை 4% - 6% வரையான கட்டணத்துடன் உடனே பணமாக்கிக் கொள்ள அழையுங்கள்.**

**020 7243 1417**

## முகவர்கள் தேவை

பிரித்தானியாவின் எந்த மூலையில் நீங்கள் வர்த்தக நிறுவனம் வைத்திருந்தாலும் நீங்களும் முகவர் ஆகலாம்.

உடன் தொடர்பு கொள்ளவும்

**020 7243 1417**



**Cheque Line**

*31, Queens Way, London, W2 4QJ.*

# பார்வையை விரிவாக்கிய கருத்தாடல்கள்

## தமிழ்ச் செய்தியாளர் மாநாடு பற்றிய கண்ணோட்டம்

கோபி
ஒரு பேப்பர்

ஒக்ரோபர் 23ம் திகதி சனிக்கிழமை வெஸ்ட் மின்ஸரர் பல்கலைக்கழகத்தின் ஹரோ வளாகத்தில் சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் வருடாந்த மாநாடு 'உலகமயமாக்கலில் தமிழர் பிரச்சனையும் ஊடகங்களும்' என்ற தலைப்பில் நடைபெற்றது. இம் மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுவில் அங்கம் வகித்தவன் என்ற வகையில், நான் இம்மாநாடு பற்றி காய்த்தல் உவத்தலின்றி விமர்சிப்பது பொருத்தமாக இருக்காது. ஆதலால் இம்மாநாட்டின் பேசுபொருள் பற்றியும், இன்றைய காலகட்டத்தில் அதன் பொருத்தப்பாடு பற்றியும், பேச்சாளர்கள் வெளியிட்ட கருத்துகள் பற்றியும் எனது கவனத்தைச் செலுத்தியுள்ளேன்.

கடந்த வருடம் மே மாதம், சிறிலங்கா அரசாங்கம் யுத்தத்தில் தமிழர்களை வெற்றி கொண்டதன் பின்னர், ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் குழப்பங்களே மிஞ்சிப் போயுள்ளன. நடைபெறமாட்டாது என நாம் உறுதியாக நம்பியது நடந்தேறியுள்ளது. விடுதலைப் போராட்டம் பேரழிவுகளுடன் தோற்கடிக்கப்பட்டுள்ளது அல்லது பாரிய பின்னடைவினை அடைந்துள்ளது. இந்நிலையில் ஏற்பட்டுள்ள உளவியல் பாதிப்பு என்பது தமிழ் மக்களின் ஆன்மாவில் ஆழமான காயத்தினை ஏற்படுத்தியுள்ளது.

எமக்கு மட்டும் ஏன் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என நாம் வருத்தப்படுகிறோம். இதற்கான பழியை இன்னொருவரின் மீது போட்டு விட்டு தப்பிக் கொள்ள நினைக்கிறோம். எமது பொது எதிரிகளை விட்டு விட்டு, நமக்குள் வெவ்வேறு அணிகளாகப் பிரிந்து, ஒன்றை இன்னொன்று தாக்குவதும், திருப்பித் தாக்குவதுமாக எமது பொழுது வீணே கழிந்துவிடுகிறது.

தமிழ் ஊடகங்களும், இந்த குழப்ப நிலையையே பிரதிபலித்து நிற்கின்றன. இருளில் மூழ்கியிருக்கும் சமூகத்திற்கு வெளிச்சம் காட்ட வேண்டிய ஊடகங்கள் தாங்களும் குழம்பி மற்றவர்களையும் குழப்புவையாகவும் மாறியுள்ளன. இது ஊடகங்களின் தவறும் இல்லை, ஊடகவியலாளர்களின் தவறும் இல்லை. நாடுகள் கடந்து பரந்து நின்றாலும், எங்களது பார்வை குறுகிய வட்டத்திற்குள் அடங்கிப் போனதால் ஏற்பட்ட விளைவு.

நடந்த அழிவுகளை மறுதலிப்பவர்கள் அல்லது நியாயப்படுத்துவரகள் மிலேச்சர்களாக இருப்பர். அவர்களை நாகரீக சமூகங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. மற்றவர்கள் நியாயத்தின் பக்கம் நிற்கவேண்டியவர்களாக உள்ளனர். அவர்களது பார்வை எப்படியிருக்கிறது. அவற்றிலிருந்து தமிழ் ஊடகவியலாளர்களும், மக்களும் கற்றுக் கொள்ள ஏதாவது இருக்கும் என்ற எதிர்பார்ப்பில் இம்மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டது. கருத்துரை வழங்குவதற்காக இலங்கை, இந்தியா, ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க நாடுகளிலிருந்து ஊடகவியலாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களது அனுபவங்களும், இயங்கு தளங்களும் வெவ்வேறாக அமைந்திருந்தன.

இரண்டு அமர்வுகளாக நடைபெற்ற இம் மாநாட்டின் காலை அமர்வு 'எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள்: பார்க்காதவை, மறக்கப்பட்டவை, விடுபட்டவை' என்ற தலைப்பில், லண்டன் பல்கலைக்கழக விரிவுரையாளர் சுதாகரன் நடராஜா தலைமையில் நடைபெற்றது. இவ்வமர்வில் வீரகேசரி பத்திரிகையின் வாரப் பதிப்பின் முதன்மை ஆசிரியர் வடிவேல் தேவராஜ், இணைய வழி தொடர்பு மூலம் சிங்கள ஊடகவியலாளரும், மனிதவுரிமை செயற்பாட்டாளருமான பாசண அபயவர்தன, ரைம்ஸ் ஒப் இந்தியா நாளிதளின் சிறிலங்கா விவகாரங்களுக்கான செய்தி ஆசிரியர் அம்ரித் லால், எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பின் பிரித்தானியப் பிரதிநிதி ஹெதர் பிளேக், ஊடகவியலாளரும் மனிதவுரிமைச் செயற்பாட்டாளருமான இரமேஸ் கோபால கிருஸ்ணன் ஆகியோர் உரையாற்றினர்.

மாலை அமர்வில் 'ஊடக அறம், புதுமைப்படுத்தல், கொள்மானம்' என்ற தலைப்பிலும் உரைகள் இடம்பெற்றன. இவ்வமர்வினை ஜீரிவி தொலைக்காட்சியின் நிகழ்ச்சி வழங்குனர் தினேஸ்குமார் நெறிப்படுத்தினார். நோர்வேயிலிருந்து வெளிவரும் 'யூதோர்ப்' பல்கலாச்சார சஞ்சிகையின் ஆசிரியர் மயூரன் விவேகானந்தன், கவிஞர் சேரன், தமிழ் கார்டியன் பத்திரிகையின் ஆசிரியர் விநோதினி கணபதிப்பிள்ளை, தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் குங்குமம் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்நத அருள் எழிலன், வேல்ஸ், சுவான்சீ பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறை தொடர்பான ஆய்வுமாணவராக இருக்கும் சேந்தன் செல்வராசா ஆகியோர் உயைாற்றினர்.

முதலில் உரையாற்றிய தேவராஜ், இலங்கைத் தீவில் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளை விபரித்தார். நேரடியாகச் சென்று செய்தி சேகரிப்பது முடியாதுள்ள நிலையிருப்பதால், கிடைக்கும் செய்திகளின் உண்மைத்தன்மையை சரிபார்த்துக் கொள்வது என்பது கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது. இரண்டாம் தரப்பிலிருந்து கிடைக்கும் செய்திகளை பிரசுரிப்பதில்கூட தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகங்களிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன என்றார். ஊடகங்களின் சுதந்திரம் அரசாங்கத்தாலும், ஊடகநிறுவனங்களின் உரிமையாளர்களாலும் கட்டுப்படுத்தப்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். போர் நடைபெற்ற காலத்தில் சுதந்திரத்தைக்காட்டிலும் போரில் வெல்வதே முக்கியம் என சிறிலங்கா அரசாங்கம் குறிப்பிட்டு வந்தபோதும், போர் முடிவடைந்த நிலையிலும் ஊடகங்களுக்கு எதிரான போர் தொடர்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். தமிழ் ஊடகங்களுக்கென, நடுநிலையான செய்தி முகவர் நிறுவனம் ஒன்றினை இலங்கைத் தீவிற்கு வெளியில் அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய தேவராஜ், அதனை ஐரோப்பாவில் அமைக்க முடியும் எனக் கருத்து வெளியிட்டார்.

தேவராஜை தொடர்ந்து, ஜேர்மனியிலிருந்து இணைய வழி தொடர்பு மூலம் உரையாற்றிய சிங்கள ஊடகவியலாளர் பாசன அபயவர்தன. சுதந்திரத்தையும் சனநாயகத்தையும் வலியுறுத்தும் நீங்களும் நாங்களும் எங்களது தாய்நாட்டுக்கு வெளியில் அவற்றைப்பற்றி பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளோம். ஆனால் எமக்குள் முறையான தொடர்பாடல்களை ஏற்படுத்த முடியாத நிலையில் உள்ளோம். இதற்கு மாறாக சுதந்திரத்தையும் சனநாயகத்தையும் மறுதலித்துவரும் சிறிலங்கா அரசின் பிரநிதிகள், நாம் வாழும் நாடுகளுக்கு அரச விருந்தினர்களாக வந்து அவற்றைப்பற்றி பேசிவிட்டு செல்கிறார்கள். இதுதான் உலகமயமாக்கலின் விழைவு என்றார்.

இலங்கைத் தீவில் நடைபெற்ற விடயங்கள் ஏதோ உலகின் கவனத்தில் விழாத நிலையில் இருந்ததாக யாரும் எடுத்துக் கொள்ள முடியாது. இதுவொன்றும் சாட்சியமற்ற யுத்தமல்ல, சாட்சிகள் மிக அதிகமான அளவில் இருக்கின்றன. படுகொலைகள் நடைபெறுமென எதிர்வு கூறுப்படட்ட போதிலும், அவற்றினை தடுக்க எந்த முயற்சியும் எடுக்கப் படவில்லை. இவ்வாறு உலகில் வேறு எங்கு நடந்தது? மக்கள் கொல்லப்படுவதை தடுக்க முடியாத ஐநா சபை அவர்களது பிரேதங்களை எண்ணி கணக்குப் பார்த்தது. போர் ஆரம்பித்ததும் தமது பணியகங்களை பூட்டி விட்டு அப்பிரதேசத்தை விட்டு வெளியேறினார்கள். அமெரிக்கா-சீனா, இந்தியா-பாக்கிஸ்தான், பிரித்தானியா-ரஷ்சியா, இஸ்ரேல்-ஈரான் என ஒன்றுக்கொன்று முரண்பட்ட தரப்புகள் ஒரு பேரணியாக இணைந்து இந்தப் போருக்கு உதவின. இவ்வாறான இணைவினை பாலஸ்தீனத்திலோ, சூடானிலோ, வேறு இடங்களிலோ காண முடியாது. இந்த உலக வல்லரசுகளே தமிழ் மக்களின் இன்றைய நிலைக்கு காரணமானவர்கள். இதுவும் உலகமயமாக்கலின் வெளிப்பாடே. தமிழ் ஊடகவியலாளர்கள் வெறுமனே போரின் அழிவுகளை மட்டும் வெளிப்படுத்துவதில் கவனம் செலுத்தாது, இந்த உலக சக்திகளின் நடவடிக்கைகளையும் வெளிப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

ரைம்ஸ் ஒப் இந்தியாவின் செய்தி ஆசிரியர் அம்ரித் லால் உரையாற்றும்போது, இலங்கை விடயத்தில் இந்திய ஊடகங்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றன என்பதனை விபரித்தார். நாடுகள் அறம்சார்ந்த வெளியுறவுக் கொள்கைகளை பின்பற்றுவதாகத் தெரிவித்தாலும்?. நாடுகளுக்கிடையிலான உறவுகளில் வர்த்தக உறவுகளே முன்னுரிமை பெறுவதாக அவர் குறிப்பிட்டார். புலம்பெயர்ந்த தமிழர்கள் இந்தியாவுடனான தொடர்புகளை தமிழ்நாட்டிலுள்ளவர்கள் மூலமாக ஏற்படுத்திக் கொள்ள முனைவதாகவும், புதுடில்லியுடனான தொடர்புகளை நேரடியாக ஏற்படுத்திக் கொள்வதில்லை எனவும் தெரிவித்தார். இந்தியாவில், ஈழத்தமிழ் மக்களது அரசியல் பிரச்சனையானது விடுதலைப் புலிகளினது கோரிக்கையாக பார்க்கப்பட்டமையால் அதற்கான ஆதரவினை திரட்ட முடியாதிருந்தது. எண்பதுகளிலிருந்த நிலையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு ரஜீவ் கொலை மட்டும் காரணமாகக் குறிபிடமுடியாது, தொண்ணூறுகளில் புது டில்லிக்கும் - கொழும்புக்கும் இடையிலான உறவுகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. வர்த்தக நலன்களை மேம்படுத்திக் கொள்வதில் நாடுகளுக்கு இடையிலான நட்பு நெருக்கம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் உறவுகள் அமைந்திருக்கின்றன. காஸ்மீர், நாகலாந்து, மணிப்பூர் பிரதேசங்களில் ஏற்பட்ட தேசிய இனப்பிரச்சனைகளும், தேசிய இனப்போராட்டங்களுக்கு இந்தியா ஆதரவு வழங்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஒன்றுபட்ட இலங்கையை இந்தியா வலியுறுத்தி வருவதும் இதனடிப்படையிலானது.

இந்திய கொள்கை வகுப்பாளர்கள் மட்டத்தில், போருக்குபின்னரான நிலையை, வடக்கு - கிழக்கின் பொருண்மிய மேம்பாட்டுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற கருத்து மேலோங்கியுள்ளதே தவிர, அரசியல் உரிமைகள் விடயம் பின்தள்ளப்பட்டுள்ளது. எனினும் நாம் உரிமைகள் விடயத்திற்கே முன்னுரிமை வழங்க வேண்டும் என்றார்.

ஹெதரை தொடர்ந்து உரையாற்றிய ரமேஸ் கோபாலகிருஸ்ணன், முப்பது வருட காலமாக ஈழப் பிரச்சனை தொடர்பில் அக்கறை கொண்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், இலங்கையில் நடந்த போர், தமிழ் மக்கள் மத்தியில் ஆறாத காயத்தை ஏற்படுத்தியுள்ளதை குறிப்பிட்டதுடன், இன்று உலகில் தமிழ் மக்களுக்கு நட்பு சக்திகள் என யாரும் கிடையாது எனவும் குறிப்பிட்டார். இன்றைய சிறிலங்கா, ஆபிரிக்கா, அல்லது முன்னைய இலத்தீன் அமெரிக்காவின் நிலையில் வைத்து ஒப்பிடக் கூடிய நிலையில் உள்ளது. சிறிலங்காவில் ஊடங்கள் சரிந்து போய்விட்டன என்பது உண்மைதான் இந்தியாவிலும் அவ்வாறான நிலையே உள்ளது. அங்குள் அறிவுசீவிகளின் நிலையும் அதுதான். இன்னமும் சொல்லப் போனால் உலகளவில் உள்ள அறிவுசீவிகளின் நிலையும் சரிந்து போயுள்ளது. இலங்கையில் நடைபெற்ற யுத்தம் தொட்பாக நோம்ஸ் தெரிவித்த கருத்துகளும், அதனை விமர்சித்து தான் கடிதம் எழுதிய போது, தான் இவ்விடயம் பற்றி அறிந்திருக்கவில்லை எனது தவறை சொம்ஸ்கி ஏற்றுக் கொண்டமையையும் ரமேஸ் சுட்டிக் காட்டினார். இந்திய குடிசார் அமைப்புகளுடன் தமிழர்கள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தினையும் அவர் வலியுறுத்தினார்.

மாலை அமர்வு பற்றிய விபரங்களையும் இம்மாநாட்டில் வெளியிடப்பட்ட கருத்துகள் தொடர்பான ஒரு ஆய்வினையும் அடுத்த ஒரு பேப்பரில் எழுதுகிறேன்.

Perma Shipping
பிரேமா விமான, கப்பல் பொதி சேவை
யாழ், வன்னி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறைக்கு விரைவான மலிவான சேவை!
Air Freight World Wide
Collection, Packing & Crating
Urgent, Documents, Parcels Door Delivery
Customs Clearance By Sea/Air
Delivery to anywhere in Srilanka



தொடர்புகளுக்கு : சிவம் (Sivam)
G14, Big Yellow,
1-3 Wyvern Industrial Estates,
Beverely Way, New Malden, Surrey KT3 4PH
Tel: 02086465222 Mob: 07939550397
Email: info@permainternational.co.uk
Web: www.permainternational.co.uk

Properties to Let !
UNIVERSAL ESTATES
www.universal-estates.co.uk
1, 2, 3, 4, 5 படுக்கையறைகள் கொண்ட
வசதியான வீடுகள் வாடகைக்கு உள்ளன
- Norbury
- Thornton Heath
- Croydon
- South Norwood
- Crystal Palace
- Streatham
- Brixton
- Tooting
- Balham
- Clapham
- Mitcham
- Dulwich
- Lewisham and surrounding areas



தமிழில் உரையாட அழையுங்கள்
Charlina - Tel: 0208 764 6444
1526, London Road, Norbury, SW16 4EU
E.Mail:info@universal-estates.co.uk

# நாங்கள் எல்லாம் அரசியலில் பழம் திண்டு கொட்டை போட்டவர்கள்

சுந்தரி
(ஒரு பேப்பருக்காக)

*சத்தியம் பூறுவத்*
*பிரியம் பூறுவத்*
*ந பூறுவத் சத்தியமபிரியம்*

இது சமஸ்கிரதத்தில் கூறப்படும் ஒரு சிந்தனைக்குரிய வாக்கியத் தொடர். இதில் உண்மையைக் சொல்ல வேண்டும், பிரியமான வற்றைக் சொல்ல வேண்டும் ஆனால் சில உண்மையாக இருந்தால் கூட அது மக்க ளுக்கு பிரியமானதாக இல்லாவிட்டால் அவற்றைப் பற்றிக் கதைக்கக் கூடாது என்று சொல்கிறது. தற்போது உள்ள புலம் பெயர் தமிழ் சமூகத்தில் பலர் தாமும் தமிழ் ஈழக் கோரிக்கையை ஆதரிக்கிறோம், தனித் தமிழ் ஈழம் தான் ஒரே முடிவு என்று கூறிக் கொண்டு உள்ளே வருகிறார்கள். அதில் சிலரின் உண்மை முகத்தை மக்கள் விரும்பமாட்டார் கள் என்பதால் விடுதலையின் மேல் விருப்பு கொண்டவர்கள் போலவும், மனித நேயம் மிக்க வர்க்ள் போன்றும் காட்டிக் கொள்கிறார்கள்.

அவர்களிடம் தூர நோக்கு இல்லாததால் அவர்களுக்கு தொலைநோக்குடன் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போகிறது. அவர்கள்,அங்குள்ள மக்களின் வாழ்வை முன் னேற்றுவதற்கு சிறீலங்கா அரசுடன் சேர்ந்து வேலை செய்யவும் தயாராக உள்ளார்கள். மக்களை இந்த சாவு நிலைக்கு தள்ளியதே சிறீலங்கா அரசுதான் என்பதை இவர்கள் மறந்துவிடுகிறார்கள். ஒருபகுதி தமிழர் அரசின் இனப்படு கொலைக்கு ஆதாரங்களை சேகரித்துக் கொண்டு சிறீலங்கா அரசை உலக அரங்கில் நிறுத்தத் துடித்துக் கொண்டிருக்க இன்னொரு பகுதியினர் அதே அரசுடன் கைகோர்த்துக் கொண்டு வேலை செய்யக் காத்திருக்கிறார்கள். தமிழ் மக்களுக்கான நிரத் தரத் தீர்வைப் பற்றியோ, அங்கு நடக்கும் மனித உரிமை மீறல்களைப் பற்றியோ இப்படி அரசுடன் சேர்ந்து வேலை செய்யப் புறப்பட்ட வர்கள் வாய் திறக்கப் போவதில்லை.

இங்கு என்ன நடக்கிறது என்றால் தமிழனுக்கு தமிழன் உதவி செய்யத் துடிக்கும் ஈரமான இளகிய மனதை மிகவும் சாதுர்யமாக அரசு உள்வாங்கிக் கொண்டு தனது குடிமக்க ளான தமிழர்களுக்கு (சிறீலங்கா ஒரு நாடு என்று அவ்வரசு சொல்வதால்) தான் பார்க்க வேண்டிய கடமையை இந்த உதவத் துடிக்கும் புலம்பெயர் மக்களுக்கு திட்டமாகக் கொடுக் கின்றது.

இவர்களும் ஆளுக்கொரு திட்டத்தை (project) எடுத்துக் கொண்டு தமது நேரம், மூளை இன்னும் தமக்கு தெரிந்தவர்கள், நண்பர்களையும் இணைத்து அவர்களின் நேரம், மூளை அத்தோடு புலம்பெயர் மக்களின் பணம் எல்லாவற்றையும் கொண்டு அரசாங்கத்தின் மேற்பார்வையில் அலுவல் களை சிரமேற் கொண்டு செய்கிறார்கள். அத் தோடு தமது செல்வாக்கையும் சிறீலங்காவின் அரசியல் மட்டத்தில் வளர்த்துக் கொள்கிறார் கள்.

இன்னும் சிலர் உண்மையாகவே உதவி செய்யும் மனத்துடன் தமக்கு இந்த அரசியல் ஒன்றும் தேவையில்லை எங்கட சனம் சாவுது நாம் உதவி செய்கிறோம் என்று சிறீலங்கா அரசுடன் சேராது அங்குள்ள தேவாலயம், பாடசாலை என்பவற்றின் கூடாக உதவி செய்வ தாகச் சொல்கிறார்கள்.

தமிழனின் வாழ்கையில் இருந்து அரசி யலைப் பிரித்தெடுக்க முடியாத கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். யானைப் பசிக்கு சோளப் பொரி போல இவர்கள் எல்லாம் செய்யும் உதவிகள் எந்தனை நாளைக்கு, சுனாமி, வணங்கா மண் காலத்தில் வெளிநாட்டில் இருந்து சிறீலங்கா அரசுக்கு ஊடாக அனுப்பப்பட்ட உதவிகள் எல்லாம் தென் இலங்கை மக்களுக்கே கொடுக்கப் பட்டன. வரலாறாற்றில் சிறீலங்கா அரசு ஒரு போதும் எமக்கு நன்மை செய்ததும் இல்லை, செய்யப் போவதும் இல்லை.

அவர்கள் இனப் படுகொலையின் ஆதாரத் தேடுதலின் தீவிரத்தை தமிழரோடு கைகோர் த்து மறைக்கப் பார்கிறார்கள். எமது மக்களின் இழப்பு அதிகம், அதற்கு உதவுவதற்கென்றே அமெரிக்கா, கனடா, என பேர் போன நாடுகளில் அபிவிருந்தி முகவர் நிறுவனங்கள் உள்ளன.

(Development agencies) அங்குள்ள மக்க ளின் தரவுகளையும், அவர்களின் ஆதரவற்ற விபரங்களை திரட்டி, அவர்களை சிறீலங்கா அரசுக்கு ஊடாக இல்லாது நேரடியாக உதவி செய்ய அழுத்தம் கொடுத்து, செய்விக்க வேண்டும். இனப்படுகொலைக்கு ஆளான இனத்திற்கு ஆளாக்கியவனுக் கூடா கவே உதவி செய்வதை எதிர்ப்பதின் தார்ப் பரியத்தை அவர்கள் விளங்கிக் கொள்வார்கள்.

எமது மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இதனை வலியுறுத்துவதற்கு அரசாங்கத்தோடு ஏற்கனவே வேலை செய்யும் கோமாளிகள் ஒரு தடையாக உள்ளார்கள்.

அவர்களைத்தான் அவர்களின் சொந்த பிழைப்புக்காக இனத்தை விற்கிறார்கள் என்று விட்டு விட்டால் இங்குள்ள நாடு கடந்த அரசு சரி, இங்குள்ள பல்வேறு புலப்பெயர் அமைப்புக்களும், குழுக்களும் சரி, அவர் களின் பரிவர்த்தனை மூலோபாயத்தை (communication strategy) மேல் மட்டத்தில் இருந்தே கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் தொலைகாட்சிக்கு, உள்ளூர் பத்திரிகைக்கு, அரசியல்வாதிகளுக்கு எப்படி எமது பிரச்சனையை விளங்கப்படுத்து, எப்பிடி அவர்களை (tackle) எதிர்கொள்வது என்று கூடிக் கதைக்கிறார்கள்.

ஆனால் ஒருவரும் பொது மக்களின் மட்டத்திற்கு இறங்கி வந்து அவர்களையும் உட்வாங்கி தூர நோக்கில் செயல் படுவதற்கான பரிவத்தனை மூலோபாயத்தைப் பற்றிக் கதைப்பதாக தெரியவில்லை. இந்நிலை எதிரிக்கு இன்னும் சாதகமாக அமைய அவர்களும் கைகூலிகள் மூலம் தமிழர் களுக்கிடையே இருக்கக் கூடிய சிறுசிறு பிரச்சினைகளையும், தான்மையையும் (ego) ஊதிபெரிசுபடுத்தி தமிழரின் ஒற்றுமையையும், ஒருகிணைந்து விடுதலைக்கு போராடும் பக்குவத்தையும் குலைந்து விடுகிறார்கள். இதை தான் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, இணையத்தளம், குறும்படம் எனப் பலவற்றில் பார்க்கக் கூடியதாக உள்ளது.

இதை விடுத்து மற்ற மற்ற நாடுகளில் நடந்த போராட்டம் பற்றி, அதில் இருந்து அவர்கள் எப்படி மீண்டெழுந்தார்கள் என்றும், அவர்களின் இழப்புகளோடு ஒப்பிடும் இடத்து எமது இழப்பு மீள முடியாதாத இழப்பல்ல என்றும், உலக அளவில் எமது பிரச்சனை யை கொண்டு சென்று வடக்கு கிழக்குக்கு தனியான உதவியை நேரடியாக அவர்களின் கண்காணிப்புக்கும் வழங்குவதற்கு வழி சமைக்க வேண்டும். ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காக செய்ய வேண்டும் என்ற துடிப்புடன் இருக்கும் மக்களிடம் சக்தியை திரட்டாது, அவர்களிடம் இருந்து 5, 10 தையோ மாதம் மாதம் வாங்கி விட்டு அங்கு துன்பப்படுகிற மக்களுக்கு நாமும் உதவவில்லை என்று குற்ற உணர்வில் இருந்தும் மன உளைச்சலில் இருந்தும் தப்பித்துக் கொள்ள வைக்காதீர்கள்.

ICRC யின் உழவு இயந்திரங்களையே பறிக்கும் சிறீலங்கா அரசு எமது மக்களின் வயிற்றுப் பசியை நீண்ட கால நோக்கில் தீர்த்து வைக்குமா? இங்கு அரசியல் ஆய்வாளர்கள் என்று ஆய்வு செய்பவர்கள் இதையும் கவனத்தில் எடுத்து அடுத்த கட்ட நகர்வுக்கு வெளியில் இருக்கும் மற்ற புற காரண காரணிகளையும் ஆராய்ந்து தொலை நோக்கில் அவர்களது பேனாவை திருப்ப வேண்டும்.

16 வருட கால அனுபவம்
Linga & Co
Legal Advisors & Immigration Specialists




We Specialise in:
- Asylum and Immigration Matters
- Human rights Applications
- Appeals
- Detention and Bail
- Entry Clearance Application and Appeal
- Injunctions & Judicial Reviews through associate solicitors
- Judicial Reviews
- Work Permits
- EEA Application(Sponsor)
- Student Visa, Visitor's Visa
- Highly Skilled migration Programme
- Naturalisation Applications

V.P. Lingajothy
LLB (Hons), M.Sc., Dip Fms, A.PLL
Principal
Immigration Specialist
E-mail: MRLINGA@AOL.COM

ஐரோப்பிய மனித உரிமைகள் சட்டம் சார்பாக தகுந்த ஆலோசனைகளை இப்போது நாங்கள் வழங்குகிறோம்

முதல் ஆலோசனை இலவசம் (Initial Consultation Free)

நீங்கள் அல்லது உங்கள் உறவினர் இங்கிலாந்திற்கு 2007ம் ஆண்டுக்கு முன்னர் வந்துள்ளார்கள்ளாயின் உடன் தொடர்பு கொள்ளவும்

மிகவும் நம்பிக்கையான வெற்றிகரமான நிறுவனம்.

General Line : 020 8544 9285
Fax : 020 8452 9530
46, High Street
Collierswood
London SW19 2BY
OISC
Emergency Line : 07771 646 441

GYPS Pest Control Services

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்



எலி
கண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நின்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly Pest control vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு
07983 589 993
07723 467 012

# தீவாளி வருஷங்கள்

**கானா பிரபா**
*(மடத்துவாசல் பிள்ளையாரடியில்)*

தைபொங்கல், புது வருஷப்பிறப்பு போன கையோட தீபாவளி எப்ப வருகுது எண்டு, அப்பாவின்ர கட்டிலுக்கு அங்கால இருக்கிற மெய்கண்டான் கலண்டரின்ர திகதித் துண்டுகளை விரித்து எண்ணத் தொடங்கி விடுவேன். தீபாவளிக்கான நாள் நெருங்க நெருங்க, பாரதிராஜாவின்ர பாட்டுக்களில வாற வெள்ளை உடை அக்காமார் ஸ்லோமோஷனில் வருமாப் போல நானும் அந்தரத்தில பறப்பேன்.

அப்பாவுக்கு இந்தக் காலத்து நாகரீகம் தெரியாது எண்டு என்ர அண்ணனுக்கு அப்பா எடுக்கும் துணி வகை பிடிக்காது. ரண்டு, மூண்டு கிழமைக்கு முந்தியே சித்தப்பாவைக் கொண்டு ரவுணிலை சேர்ட்டுத் துணியையும், காற்சட்டைத் துணியையும் எடுத்து விடுவோம். இணுவில் கந்தசுவாமி கோயிலடி வெங்காயச் சங்கத்துக்கு முன்னாலை இரு முஸ்லீம் ரெய்லர் கடை இருந்தது. அம்மா ரீச்சர் எண்டதால பள்ளிக் கூடம் போற வழியில இருக்கிற அந்த ரெய்லரிட்டைத் தான் எப்பவும் சட்டை தைக்கக் குடுப்பம்.

'ரீச்சர்! தீபாவளி வருது தானே, நிறையச் சோலி இருக்கும், கொஞ்சம் கெதியா துணியைக் குடுங்க' எண்டு அம்மா பள்ளிக்கூடம் போற நேரம் கடைக்குள்ளால எட்டிப் பார்த்து நினைப்பூட்டி விடுவார் ரெய்லர். துணிக்கு அளவெடுக்கிற போது ரெயிலர் மீற்றர் பட்டியை வைத்து கொலருக்கும், கையுக்கும் எண்டு அளவெடுத்து விட்டுக் என்ர காற்சட்டைக்கு அளவெடுக்கிற நேரம் பார்த்து

'ரெய்லர்! கொஞ்சம் கால் நீட்டா விட்டுத் தையுங்கோ, கன காலம் வச்சுப் போடலாம்' எண்டு அம்மா கட்டளை இடவும் , பல்லால் நெருவிக்கொண்டே அம்மாவை ஒரு முறை முறைப்பேன்.

தீவாளிக்கு உடுப்புத் தாறது வீட்டுக்காரர் மட்டுமில்லை, சித்தப்பாவின் முறையும் இருக்கு. சித்தப்பாவோட யாழ்ப்பாணம் ரவுணுக்குப் போய் உடுப்பெடுக்கிற தெண்டால் பெரிய புழுகம் தான். அதுக்கும் ரண்டு காரணம். ஒண்டு அவரின்ர பஜாஜ் ஸ்கூட்டரிலை போகலாம். இன்னொண்டு, ரவுணையும் பார்த்து விட்டு வரலாம்.

தீவாளித் தினத்துக்கு கொஞ்ச நாள் முன்னமே யாழ்ப்பாணம் ரவுண் புதுமாப்பிளை போல நல்ல சந்தோசமா இருக்கும். பஸ்ராண்டுக்கு நடுவில இருக்கிற மணிக்குரல் விளம்பர சேவையில், நிமிடத்துக்கொரு புடவைக்கடை விளம்பரம் வரும். கொடி பறக்குது படத்திலை இருந்து 'சேலை கட்டும் பூவுக்கொரு வாசமுண்டு' பாட்டோட சீமாட்டி ஜவுளி மாளிகை விளம்பரம் வரும். கொடி பறக்குது, ராஜாதி ராஜா சேலைகளும், நதியா சுரிதாரும் விளம்பரங்களில் கட்டாயம் இடம்பிடிக்கும்.

புடவைக் கடைத் தட்டிகளில் அமலாவும், அம்பிகாவும் சாறி கட்டினபடி சிரித்துக் கொண்டிருப்பதை ஆவெண்டு பாத்துகொண்டு சித்தப்பாவின் கையைப் பிடிச்சுக் கொண்டே சனத்திரளுக்குள்ளால நகர்வேன். சித்தப்பாவின் கால் சொல்லிவைத்தது போல் நியூமார்க்கட்டுக்குள்ளை இருக்கிற ஹப்பி ரெக்ஸ் கடைக்குத் தான் போகும். ஊர்க்காரற்றை கடை, ஏமாத்த மாட்டாங்கள் என்று நியாயம் கற்பிப்பார். ஹப்பி ரெக்ஸ் இல் சிங்கப்பூரால வந்த சேர்ட்டுக்கள் குவிஞ்சிருக்கும். எனக்கு டிராகன் படமும் பூவும் போட்ட சிங்கப்பூர் சேர்ட்டை சித்தப்பா வாங்கித் தரவேணும் எண்டு கெதியா கண்ணை மூடி ஒருக்கால் பிள்ளையாரை வேண்டிக் கொள்வேன். பெரும்பாலும் பிள்ளையார் வரம் குடுத்து விடுவார். அங்காலை ரியூசனுக்குப் போறதெண்டு சொல்லிப் போட்டு லுமாலாவிலை பஞ்சாபி சட்டை வாங்க வந்த அக்காமாரின் பேரம் பேசலும் மும்முரமாயிருக்கும்.

கே.கே.எஸ் றோட்டில, தாவடிசந்தி தாண்டிக் கொக்குவில் பக்கம் போகேக்கை ஒரு மதகு வரும். அந்த மதகுக்குப் பாலம் போட்டு அங்கால் காணியில் ஒரு இறைச்சிக் கடை இருந்தது. வழக்கமா இரண்டு முழு ஆடு தோல் உரிக்கப்பட்டுக் கட்டித் தொங்க விடப்பட்டிருக்கும்.

தீவாளி நாளில உதெல்லாம் நடவாது கண்டியளோ, காலமை ஆறு மணிக்கே மதகையும் தாண்டி தீவாளிக்கு இறைச்சி வாங்கவென ஒரு பெருங்கூட்டம் முண்டியடிக்கும்.

'எல்லாரும் வரிசையில நிண்டால் தான் இறைச்சி கிடைக்கும்' என்று புதுப்பணக்காரன் தோரணையில் இறைச்சிக் கடைக்காரன் மிதப்பான். காலை எட்டு மணிக்கெல்லாம் முழு இறைச்சியும் விற்றுத் தீர்ந்து விடும்.

வெள்ளணக் கிணத்தடிப் பக்கம் போய் துலாவில் நீரிறைத்துக் குளியல் போராட்டத்தை நடத்தி முடித்து விட்டு, பிள்ளையாரடிக்கு ஆறரைப் பூசை பார்க்கக் கிளம்புவோம்.

மடத்துவாசல் பிள்ளையாருக்கும் தீபாவளி நாள் தான் நிறையப் பட்டுத் துணிகள் கிடைக்கும். பூசை முடிந்து, கடைசியில சண்டேஸ்வரர் சுவாமியைக் கும்பிடேக்கை, புதுச் சட்டையில் இருந்து ஒரு நூலைப் பவ்யமாக இழுத்தெடுத்து, அந்த நூலைச் சண்டேஸ்வரருக்குச் சார்த்தி விட்டுக் கிளம்புவோம்.

நாலைஞ்சு சொந்தக்காரர் வீட்டுக்குப் போய் புதுச் சட்டையைக் காட்டி விட்டு, அவையள் தாற முறுக்கு, பயற்றம் உருண்டை, அரியதரம் எல்லாத்தையும் சாப்பிட்டுட்டு பால் தேத்தண்ணி வாயுக்குள்ள இருக்கவே அடுத்த வீட்டுக்குப் பாய்வம். சொந்தக்காரர் வீடுகளுக்கு நடைராஜாவிலேயே பயணம் எண்டதால அவையள் தாற பலகாரச் சாப்பாடெல்லாம் பாதிவழியிலேயே செமிச்சுப் போயிடும். எல்லா வீடுகளுக்கும் ஒரு றவுண்ட் அடிச்சுப் போட்டு வீட்டை வர பகல் பன்னிரண்டை தாண்டி விடும்.

வீட்டுக்கு வரும் வழி நெடுகிலும் கடைக் கதவுகளில் பூட்டுக்கள் சிரித்துக் கொண்டிருக்கும். உள் ஒழுங்கைகளுக்காள் வரும் போது ஏற்கனவே மெண்டிஸ் சாராய வகையறாக்களை ஒரு கைபார்த்து விட்ட வயதான மது போதை மன்னர்கள் சிலர் ரோட்டோரமாகவோ, அல்லது கிடுகு வேலிகளின் கதியால் பக்கமாகவோ போதை தலைக்கேறிச் சுருண்டு படுத்திருப்பார்கள்.

'ஒளுதரும் என்னை ஒந்தும் கேட்கப் பிடாது' என்று பஞ்ச் டயலாக் வேற அவர்கள் வாயிலிருந்து அடிக்கடி வரும். ஊர்நாய்களோ, 'மரியாதையா இந்த இடத்தை விட்டுப் போறியோ இல்லையோ?' என்ற தோரணையில் வாள் வாளென்று குரைப்பெடுத்துத் தர்ணாப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும்.

வீட்டுக்குள் நுள்ளயும் போது ஆரோ ஆக்கள் எங்கட வீட்டுக்குப் பலகாரம் சாப்பிட வந்திருப்பினம். 'எட! சோக்கான சட்டையடா' எண்டு ஒருக்கால் சீண்டிப் பார்ப்பினம். மாப்பிளை பார்க்க வந்த பொம்பிளை மாதிரி வெக்கத்திலை கீழை குனிஞ்சு கொண்டே குசினிப் பக்கம் போயிடுவன். அடுப்படியில் இருக்கும் கறிச்சட்டியை மெல்லமாத் திறந்து பார்த்தால் காலையில் பச்சையாக இருந்த ஆட்டிறச்சி கறிச்சட்டிக்குள்ளை பொன்னிறத்தில நல்லா வதக்கிக் காய்ச்சியிருக்கும். இறைச்சிக்குப் போட்ட மசாலா நொடி வயிற்றில் அமிலத்தைச் சுரக்க வைத்து விடும். வீட்டுக்கு வந்த விருந்தாளிகளை வழியனுப்பி விட்டு, அம்மா நேராகக் குசினிக்குள் வந்து விடுவா. அப்பாவுக்கும் சாப்பாட்டு நேரம் எண்டு விளங்கி விடும். குசினிக்குள்ள இருக்கிற பலகைக் கட்டையில் இருந்து அம்மா, கோப்பையில் போடும் குத்தரிசிச் சோறையும் எண்ணையாகத் திரண்ட கொழுப்பு ஆட்டம் போடும் ஆட்டிறச்சியைக் கலந்து வாயுக்குள்ளை திணித்தால் தேவாமிர்தம் தான்.

எங்கட நாட்டிலை தீபாவளி எண்டால் வெடிகளோ மத்தப்போ இல்லாத நாள் அது. தைப்பொங்கலுக்குத் தான் வெடி, மத்தாப்பு, பூந்திரி எல்லாம் இருக்கும். தீபாவளியை பற்றிப் பத்து வசனம் எழுதுங்கோ எண்டு சொன்னால், புதுச்சட்டை போடுவம், பலகாரம் தின்னுவம், ஆட்டிறைச்சியை மூக்குப் பிடிக்க வெட்டுவம், இவை தான் முதலில் வரும். பிறகு தான் நரகாசுரனின் கதை எல்லாம்.

கொஞ்சம் வளர்ந்து விடலைப் பருவம் வந்தவுடன் நாங்களாகவே தீபாவளி உடுப்பு எடுக்க வேண்டிய பொறுப்பு வந்துவிடும். அப்பா தந்த காசில் உடுப்பு வாங்க வேண்டியது எங்கட பொறுப்பு. அந்த நாளிலை ரவுணுக்குப் போய் ஜீன்ஸ் துணி எடுத்து விட்டு, யார் நல்ல ஸ்ரைலாகத் தைப்பார்கள் எண்டு தேடுவதிலேயே பாதி உயிர் போய் விடும். நியூமார்க்கற் பேவ்மென்றையும் தாண்டிக் கொஞ்சம் சந்துக்குள்ளால் நடந்தால் முஸ்லீம் ரெய்லர்மார் நிறையப் பேர் இருப்பினம். எடுத்த ஜீன்ஸ் துணியில் எங்களுக்குப் பிடித்த விஷயத்தைக் கோடிட்டுக் காட்டினால் போதும் அவை ரோட்டே போட்டு விடுவினம். ஜீன்ஸ் இன் இரண்டு பொக்கற்றின் பக்கமும் விதவிதமான Pattern இல் சப்பறத்துக்குச் சோடிச்ச மாதிரி நூல் அலங்காரமும் டிசைனும் இருக்கும். காதலன் படத்திலை நீக்ரோ மாதிரி புதுசா நடிக்க வந்த பிரபுதேவா எண்டு ஆரோ கதாநாயகன் போட்ட மாதிரி தொள தொளவெண்டு ஜீன்ஸ் தைச்சால் தான் பயோ (Bio ) படிக்கிற பெட்டையளும், சுண்டுக்குளி வேம்படிப் பெட்டையளும் பார்ப்பினமாம். கட்டுப்பெட்டித் தனமா உடுப்புப் போட்டால் தமிழ்க் கலவன் பாடசாலையும் ஏறெடுத்துப் பார்க்காது.

'எடேய்! இப்பதான்ரா உன்ர ஆள் கோயிலுக்கு வந்து போட்டுப் போகுது' கோயிலுக்கு வரும் போதே ஏஷியா சைக்கிளில் ஊன்றி கொண்டிருக்கும் நண்பன் சொல்லவும், பிள்ளையாரைப் பிறகு பார்க்கலாம் எண்டு மன்சு சமாதானப்படுத்த வந்த வழியே திரும்பிச் சைக்கிள் வலிக்க, சுரிதார் அணிந்து லுமாலாவில் பறந்த கிளியைத் தேடிப் பறக்கும், அதுவரை அவ்ரோ பிளேன் கணக்காய் ஓடிய ஏஷியா அவளின் சைக்கிளை அண்மித்ததும் வேகம் தணிந்து கடைக்கண்ணால் ஏறெடுத்து அந்தப் புதுச்சட்டைக்கே பெருமை சேர்த்த பெருமாட்டியைப் பார்த்து முத்திப் பேறடையும் கணம், லுமாலாச் சைக்கிளே வெக்கத்தில் சிரிக்கும்.




நாங்கள் இருக்கிறோம்
அஞ்சாதீர்!

உங்கள் வர்த்தகத்தில்....

- கடனுக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

Experienced Expertise
**only a phone call away**

One-off specific instructions are welcome. You can keep your own accountants, but we can provide specialist help to tackle problems with Inland Revenue and Customs & Excise.

We are specialists in solving Tax Investigations, Negotiations & Settlements.

- Tax Solutions
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation

- Chartered Accountants & Registered Autitors
- Accountancy / Audit / Business Startup & Consultancy
- Solicitors Rules Audit

- IT Solutions Supply
- Install, Advice / Train & Support
- IRIS, SAGE, MYOB, DELL
- **up to 40% discount** on retail prices

- Licensed Insolvency Practice, Liquidation and for all insolvency advice.

For **FREE** initial consultations, contact:
**David Beckwith, Sabia Sahota or Ananthan Arnold**

**BBK Partnership**
Chartered Accountants & Business Strategic Solutions
1 Beauchamp Court, Victors Way, Barnet, Herts EN5 5TZ
Telephone: **020 8216 2520** Fax: **020 8216 2521**
Web: **www.bbkca.com**

# கேபி - நாடு கடந்த அரசு - பேரவை - வட்டுக் கோட்டைத் தீர்மானம்

வி. சபேசன்
ஒரு பேப்பருக்காக

தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை நீர்த்துப் போக செய்வதற்கு கூட்டணியினர் கையில் எடுத்த அதே ஆயுதத்தைக் கொண்டு முள்ளிவாய்க்காலின் பின்னர் புதிய வடிவம் எடுக்க இருந்த தமிழர்களின் அடுத்த கட்டப் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்த வேதனையை எங்கே போய் சொல்வது?.

எழுதி நீண்ட நாட்கள் ஆகி விட்டது. மீண்டும் எழுத வேண்டும் என்று அடிக்கடி நினைப்பேன். மீண்டு எழ முடியாத ஒரு நிலை தமிழனித்திற்கு வந்து விட்டதை எண்ணி சோர்ந்து போய் மீண்டும் எழுதுகின்ற எண்ணத்தை கைவிடுவேன்.

உண்மையை சொன்னால் எதை எழுதுவது என்று எனக்குத் தெரியவில்லை. எழுதுவது என்றால் உண்மையை, சரி என்று நம்புவதை எழுத வேண்டும். அது முடியவில்லை என்றால் வாயை மூடிக் கொண்டு பேசாது இருக்க வேண்டும் என்று நினைப்பவன் நான்.

ஆனால் எழுதாது இருக்கவும் முடியவில்லை. புலம்பெயர் அரசியல் மிகவும் ஒரு கேவலமான நிலையில் இருக்கின்றது. யாரிடம் போய் முறையிட முடியும் என்கின்ற திமிரும் இன்றைக்கு புதிதாக சேர்ந்து விட்டது.

ஈழத்து அரசியலிலும் சரி, புலத்து அரசியலிலும் சரி யாரையும் ஆதரிக்க முடியாத ஒரு நிலை தோன்றியிருக்கிறது. மக்களும் சிந்திக்க முடியாதவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் யாருக்குப் போய் எதைச் சொல்வது?

## நாடு கடந்த அரசு பற்றிய நிலைப்பாடு

நாடு கடந்த தமிழீழ அரசு என்னும் புதிய கட்டமைப்பை உருவாக்குவதுபற்றி அறிவிக்கப்பட்ட பொழுது பெரிதும் மகிழ்ச்சி அடைந்தேன். அது ஒரு பலமான கட்டமைப்பாக இருந்து தமிழினத்தை ஒருங்கிணைத்து வழிநடத்தும் என்று நம்பியிருந்தேன். இன்றைக்கு நாடு கடந்த அரசின் நிலை அந்தோ பரிதாபம் என்பதாகவே இருக்கிறது.

நாடு கடந்த அரசினால் அதனுடைய எதிரிகளை முறியடிக்க முடியவில்லை. புலம்பெயர் தேசங்களில் உள்ள கட்டமைப்புகளை தன்னுடைய ஆளுமையின் கீழ் கொண்டு வர முடியவில்லை.

நாடு கடந்த அரசு பற்றிய அறிவிப்பை வெளியிட்ட கேபி வெளியில் இருந்திருந்தால் இந்த நிலைமை தோன்றியிருக்காது. மிகவும் பலமான ஒரு அமைப்பாக நாடு கடந்த அரசு இருந்திருக்கும். ஆனால் துர்நிலையாக கேபி சிறிலங்கா அரசால் கைது செய்யப்பட்டு விட்டார்.

நாடு கடந்த அரசு இன்றைக்கு ஒரு யாப்பை உருவாக்கயிருக்கிறது. ஒரு அமைச்சரவையையும் பிரதம மந்திரியையும் தெரிவு செய்திருக்கிறது. ஆனால் புலம்பெயர் தமிழர்கள் மீது நேரடியான செல்வாக்கை செலுத்த முடியாத ஒரு அமைப்பாகவே நாடு கடந்த அரசு இன்றைக்கு இருக்கிறது.

தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை நீர்த்துப் போக செய்வதற்கு கூட்டணியினர் கையில் எடுத்த அதே ஆயுதத்தைக் கொண்டு முள்ளிவாய்க்காலின் பின்னர் புதிய வடிவம் எடுக்க இருந்த தமிழர்களின் அடுத்த கட்டப் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்த வேதனையை எங்கே போய் சொல்வது?

ஒரு புலம்பெயர் நாட்டில் சில நூறு தமிழர்கள் கலந்து கொள்ளக் கூடியதான ஒரு நிகழ்வை ஒழுங்கு செய்வதற்கான வல்லமை நாடு கடந்த அரசிடம் இருக்கிறதா என்பதே ஒரு பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது. அப்படி ஒழுங்கு செய்தாலும் அது சிலரால் குழப்பியடிக்கப்பட முடியும் என்கின்ற அளவில் தான் இன்றைய நிலைமை இருக்கிறது.

நாடுகடந்த அரசு உறுதியாக அச்சமின்றி சில அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டால் தான் அதற்கு எதிர்காலம் இருக்கின்றது. இல்லையென்றால் அமெரிக்காவில் ஏதாவது இடத்தில் கூடி, அந்த இடத்தின் வரலாற்றுச் சிறப்புகளை இணையத்தில் வரச் செய்து விட்டு அறிக்கைகளையும் விட்டு விட்டு கலைய வேண்டியதுதான். சராசரித் தமிழன் அதைப் பற்றி எந்த அக்கறையும் கொள்ள மாட்டான்.

## பேரவைகள் பற்றிய நிலைப்பாடு

நாடு கடந்த அரசுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டதற்கு இந்தப் பேரவைகளே காரணம் என்று துணிந்து சொல்வேன். 'உள்ளூர் அரசியலுக்கு நாங்கள், வெளியுலக அரசியலுக்கு அவர்கள்', 'இரட்டைக் குழல் துப்பாக்கிகள்' இப்படியெல்லாம் வெளியில் நைச்சியமாக பேசிக் கொண்டே ஒருவருக்கு ஒருவர் குழி பறிப்பதில் மும்மரமாக இருக்கிறார்கள்.

ஏற்கனவே செயற்பட்ட அமைப்புகள் புதிய பெயரையும் ஜனநாயகப் பூச்சையும் பூசிக் கொண்டு வருவதன் பெயர்தான் பேரவைகள். இங்கே புதிதாக எதையும் நாம் காணப் போவது இல்லை. பழைய பெயரில் அவர்களே இயங்குவது நல்லது. ஏதாவது உருப்படியாக செய்தால் மக்கள் தாமாக ஆதரவளிக்கப் போகிறார்கள். பெரும் செலவில் தேர்தல்களை நடத்தி மக்கள் பணத்தை வீணடிக்கத் தேவையில்லை.

ஏற்கனவே 'வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு' என்கின்ற கோமாளிக் கூத்தை நடத்தி முடித்தாகி விட்டது. மேலும் மேலும் இப்படியான கூத்துகள் தேவையில்லை.

## 'வட்டுக் கோட்டை தீர்மானம்' பற்றிய நிலைப்பாடு

புலிகள் இயக்கத்தின் தோற்றம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வயிற்றில் புளியைக் கரைக்கத் தொடங்கியிருந்தது. சில நாட்களுக்கு முன்னர்தான் புலிகள் இயக்கத்தின் மிக முக்கிய கூட்டமும் நடைபெற்றிருந்தது.

எப்படித்தான் நட்பு பாராட்டினாலும் 'பெடியன்கள்' எப்பொழுதும் தமது கட்டுப்பாட்டில் இருக்க மாட்டார்கள் என்பது கூட்டணிக்கு தெரிந்தே இருந்தது. மக்களும் புலிகளின் பக்கம் தமது பார்வையை திருப்பத் தொடங்கியிருந்தார்கள்.

இந்த நிலையில் தமிழ் மக்களை தமது பக்கம் திருப்ப வேண்டிய தேவை கூட்டணிக்கு எழுந்தது. மக்களை முட்டாள்களாக தொடர்ந்தும் வைத்திருந்து மேடை அரசியல் செய்யவும், விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தவும் கூட்டணியினர் கண்டு பிடித்ததுதான் இந்த 'வட்டுக் கோட்டை தீர்மானம்'.

தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை நீர்த்துப் போக செய்வதற்கு கூட்டணியினர் கையில் எடுத்த அதே ஆயுதத்தைக் கொண்டு முள்ளிவாய்க்காலின் பின்னர் புதிய வடிவம் எடுக்க இருந்த தமிழர்களின் அடுத்த கட்டப் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்த வேதனையை எங்கே போய் சொல்வது?

பெரும்பான்மையான தமிழர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என்ற செய்தியை உலகுக்குச் சொல்லி விட்டு வட்டுக் கோட்டைத் தீர்மான முடிவுகள் ஆவணக் கோப்புகளில் துங்கிக் கொண்டிருக்கின்றன.

## கேபி பற்றிய நிலைப்பாடு

கேபி கைது செய்யப்பட்டார் என்றே நம்புகிறேன். அவரைப் பற்றிய வதந்திகளை பரப்புவர்கள் யாரும் உத்தமர்களோ உண்மையைப் பேசுபவர்களோ அல்ல.

கேபி நீண்ட காலம் தமிழினத்தின் விடுதலைக்காக உழைத்தவர் என்பதும் புலிகள் இயக்கத்தின் வெளியில் தெரிந்து எஞ்சியுள்ள ஒரேயொரு மூத்த தலைவர் என்பதும் அவர் மீது மென்மையான பார்வையையே எனக்குக் கொடுக்கிறது.

தன்னுடைய சாணக்கியத்தனத்தினால் தன்னுடைய உயிரைத் தக்க வைத்திருக்கிறார். இன்றைக்கும் தேசியத் தலைவரை தன்னுடைய தலைவர் என்றே கூறுகிறார். தேசியத் தலைவர் வீரச் சாவடைந்தார் என்கின்ற செய்தியை அன்றைக்கு துணிந்து மக்கள் முன் சொன்னவர். தேசியத் தலைவர் வீரனாக வாழ்ந்து தமிழ் மக்களுக்காக வீரனாக போரிட்டு மடிந்தார் என்கின்ற வரலாற்றுச் செய்தியை இன்றைக்கும் அவரே சொல்கிறார்.

தேசியத் தலைவர் உயிரோடு இருப்பதாக பொய் சொல்லித் திரிகின்ற மோசடிப் பேர்வழிகளும், தேசியத் தலைவர் கோழையைப் போன்று சரணடைந்து பின்பு கொல்லப்பட்டார் என்று தமிழர்களின் வரலாற்றை கொச்சைப் படுத்த முனைபவர்களும் நிறைந்திருக்கின்ற இன்றைய நிலையில் கேபியின் குரல் தவிர்க்க முடியாதபடி தேவையாக இருக்கிறது.

எது எப்படியிருப்பினும் அவர் சிறிலங்கா அரசின் ஒரு கைதி என்கின்ற யதார்த்தம் முன்னே வந்து நிற்கிறது. அதையும் தாண்டி கேபியை வைத்து எம்மால் ஒரு சிறப்பான அரசியலை செய்திருக்க முடியும். கேபி தன்னை பயன்படுத்த அனுமதித்து சிறிலங்கா அரசை தமிழ் மக்களுக்காக பயன்படுத்துகின்ற அரசியலை செய்வதற்கு முயல்கிறார். ஆனால் இதை ராஜதந்திரத்தோடு அணுகுவதற்கு எம்மிடம் திறமை போதாமல் போய்விட்டது.

கேபிக்கு பேரம் பேசுகின்ற பலத்தை தற்காலிகமாக என்றாலும் வழங்கி சிறிலங்காவை எதிர்கொள்வதற்கு நாம் முயற்சி எடுத்திருக்கலாம். சிலர் அப்படி ஒரு முயற்சியை எடுத்தார்கள். ஆனால் சுயநலவாதிகளின் குரலே மீண்டும் ஓங்கி ஒலித்தது. இந்தக் குரலே பொதுவான தமிழர்களிடம் எடுபடுகிறது.

## இந்த நிலையில் எதை எழுத?

எனக்கு எல்லாத் தரப்பிலும் நண்பர்கள் உண்டு. இங்கே என்னுடைய நிலைப்பாடுகளை எழுதியதற்கு யாருடைய கோபங்களை சம்பாதிக்கப் போகிறேன் என்று தெரியவில்லை.

சில நாட்களுக்கு முன்னர் பல ஆண்டுகளாக சந்திக்காத ஒரு நண்பனை சந்தித்தேன். மிகவும் மகிழ்ச்சியோடு என்னை வரவேற்றான். அரசியல் பற்றி பேச்சு வந்தது. தேசியத் தலைவரின் இறப்பு அல்லது இருப்பு பற்றிய பேச்சும் வந்தது. சிறிது நேரத்தின் பின்பு தேனீரும் தராது எனக்கு விடை கொடுத்து அனுப்பி வைத்தான்.

எனக்கு சரி என்று படுவதை எழுதி மற்றவர்களுக்கும் மன உளைச்சலை கொடுத்து நானும் மன உளைச்சலுக்கு ஆளாகிறேனோ என்று சிந்திக்கிறேன். அரசியலை விட்டு விட்டு வேறு விடயங்களை கொஞ்ச நாட்களுக்கு எழுதலாம் என்று நினைக்கிறேன்.

அந்த வகையில் என்னுடைய அடுத்த கட்டுரை பற்றிய அறிவிப்பை இப்பொழுதே வெளியிடுகிறேன். இன்றைக்கு உலகத் தமிழர்களின் மிக முக்கிய வாழ்வாதாரப் பிரச்சனையாக மாறிப் போயிருக்கின்ற 'பிரபுதேவா - நயன்தாரா' விவகாரம் பற்றிய பரபரப்புக் கட்டுரை அடுத்ததாக வெளிவரும். இதனால் எனக்கும் பிரச்சனை இல்லை. படிப்பவர்களுக்கும் பிரச்சனை இல்லை. ஆவலோடு காத்திருங்கள்.

CHEF/COOK WANTED
for a busy Sri Lankan Restaurant
in Balham (SW12).
Exeperience Required.
Pay £7.50-£8.50 per hour
Please call Bahi
0772 054 7714

வீடு விற்பனைக்கு!
Extended 3 bedroom, Detached house, Garage with driveway, near the Nottingham University
£210,000 For immediate sale.
தொடர்புகளுக்கு: Mrs.Poobalasingam
020 8551 5159



EDITORIAL: EELAM NATION

# State terrorism stays on having thrown out Tamil terrorism it spawned



The world is being repeatedly told that terrorism of the Tamils has been defeated through a humanitarian operation, as to how, we do not understand, with nearly 40,000 civilians killed and tens of thousands maimed in the racist war during the early part of the year 2009 alone. It is often made out that terrorism is second nature to the Tamil people and therefore they have to be treated as such.

What is not recognised is the cause for the genesis of Tamil terrorism, which is Sri Lankan State terrorism never mentioned and which indeed needs radical treatment. It is unfortunate that some international media both print and radio, thanks to Bell Pottinger & Co. the public relations company employed to whitewash the misdeeds of Rajapakse & Co, still pursue the unethical policy of "cash for comment". There are others who report irresponsibly without doing their homework. Some others do have their own agenda and still others who are ignorant of the facts and to them we say once again: "Little learning is a dangerous thing".

It is very clear that President Rajapakse, his ruling dynasty and his sycophants constituting the Sri Lankan State taking cover under George W Bush's global war on international terrorism took the liberty to not only destroy the Tamil militants for whom we hold no brief, but also to destroy tens of thousands of Tamil civilians, motivated by racism, bringing their prolonged oppression to its near final conclusion. The process is not over yet. Sri Lankan State terrorism is still in action but with renewed vigour.

State terrorism in Sri Lanka has come to stay. With the progressive erosion of democracy, State terrorism gradually taking its place is being used as a hand maiden of the dictatorship of the Rajapakse dynasty as was the principal weapon of oppression of other fascist dictators. Having tasted its success against the Tamils, it is now being conveniently applied towards also the oppression of the Sinhalese masses compounded as always by corruption, nepotism, thuggery with state patronage, poverty, ignorance, the decline of the justice system, etc. The sections of the Sinhalese people including the Buddhist monks who tacitly supported the State in its terrorism against the Tamils and their mass killings have come to have a taste of it, and they will soon realise that is too late to change it.

From 1956 to 1983, State terrorism in Sri Lanka took the form of periodic Pogroms against the Tamils with instances of cultural genocide. Continuing up to now, activities in the killings and assaults of journalists, abductions, disappearances, unlawful arrests and prolonged incarcerations of the youth without trial, rape, torture, the current detention of nearly 10,000 ex-combatants without trial with no access to their relatives are being continued unabated. The internally displaced people (IDPs) though said to be released are still on the run harassed, bullied and terrorised by the military at every turn unable to enter even their own homes, while the international community are being told that they have been happily resettled. With no foreign media or INGOs allowed in, it is the word of the oppressive government as against that of the helpless IDPs. These people with an ancient culture and civilisation have to soon adapt themselves to living like gypsies, and that is, if they are allowed to continue to live at all.

During the war, said to be against the most ruthless terrorist organisation in the world, it was claimed that the Tamil-speaking people in the north and the east were being liberated from the clutches of the Tamil militants, only to realise that their destinies are being tragically guided by a handful of former Tamil terrorists, wimpish scoundrels and opportunists who lack absolutely any form of integrity. They are also criminals too weak and servile to stand up to the government against the injustices and the atrocities to the Tamils.

Lacking in any real or meaningful political power or influence, the Tamil people are subject to the dictates of the military in their respective regions which are virtually miniature police states.

President Mahinda Rajapakse made out that the war against the Tamil militancy was part of the war against global terrorism. Tamil militancy was nowhere global. It is now clear that the American invasion of Iraq under George W Bush was a racist war against the Iraqi people as retaliation to avenge the September eleventh Al-Qaeda attack in New York when there was no Al-Qaeda in Iraq at the time but only the tyranny of Sadham Hussein, and for the prospects of oil.

As a consequence, as we had previously pointed out in these columns, the war irreparably destroyed the future of the Iraqi nation, their culture, the ancient Babylonian civilization, their social fabric and their future generations never to be retrieved, including their health. This is what is happening to the Tamil-speaking people in Sri Lanka.

The Al-Queida menace was actually somewhere else, namely in Pakistan, a traditionally close ally of Sri Lanka as it is now, whose former President Musharaf was paid US $ 80 million by Bush purportedly for the elimination of the Al-Qaeida, while overnight Musharaf was transformed into a democrat and cleansed from being a dictator. The other problem areas are Somalia and Yemen and the "futile" war against terrorism by the allied forces is now confined only to the Muslim fundamentalist Taliban in Afghanistan who are in no way a threat to global terrorism. It is as absurd as saying that the nationalist Buddhist monks in Sri Lanka are a threat to world peace. There is evidence that Iran, another ally and benefactor of Sri Lanka, has been clandestinely helping the corrupt Hamid Karzai regime through financial support while also supporting the Taliban at the same time to maintain the status quo greatly diminishing the work of the allied nations in their war against terrorism and human rights abuses by the Taliban, a fact not denied by Karzai.

Actually, the Sri Lankan State in spreading its brand of terrorism is now in the process of appointing war criminals as ambassadors to the various countries of Europe in which the Tamils have chosen to live or taken refuge in, and even the UN now fast becoming a discredited organisation thanks to Ban ki Moon. For states like China, Iran, Pakistan, India and Myanmar, whatever their form of government it is advantageous for them to support a dictatorship in Sri Lanka for it is easier to deal with only one person and that too of the calibre of Rajapakse.

Rev. Father S.J. Emmanuel, the President of the Global Tamil Forum in regard to the numerous gruesome photographs of innocent Tamils being massacred in cold blood, being led to the killing fields, and in response to the shameful denial by the Sri Lankan foreign minister even without considering of the veracity of these pictures has stated: "These photos show blatant disregard to humanity. We do not know the authenticity of these photographs. However this makes the case stronger for an impartial independent international investigation into alleged war crimes and crimes against humanity."

"The deafening silence of the international community to the alleged crimes that have been committed in Sri Lanka to say the least is disheartening and simply disgraceful. Many in our community do not know what happened to their loved ones and whether they are still living in custody or not. Some of these photos show particular disrespect to women and children. These people who are alleged to have done this to our community are still occupying our land in North and East of Sri Lanka. Imagine what kinds of abuses must be still going on with impunity?" It could not have been said better. We unreservedly endorse the views expressed by Rev. Fr. SJ Emmanuel.

We learn from some websites managed by some credible Sri Lankan journalists that the Sri Lankan government has acquired gas chambers to be used to destroy any evidence of Tamils disappearing and those abducted, and as suggested therein, this could account for some former cadres of the LTTE who had taken refuge in the IDP camps and subsequently sent out in buses to some unknown destination with their whereabouts still a mystery. We shudder to even imagine that these persons could have been consumed into this gas chamber. At least for the sake of humanity in Sri Lanka, We hope they are still alive.

We are grateful to the British Prime Minister David Cameron who has in parliament stated that there should be an independent investigation into claims that the Sri Lankan government was guilty of human rights abuses during the final stage of the war against the LTTE last year. We are hopeful that the leaderships in other truly democratic countries in the world that genuinely respect human rights would soon follow suit. We are also thankful to the opposition parliament member Siobhian McDonagh, the Foreign Secretary William Hague and the Chairperson of the All Party Parliamentary Group on Tamils, Lee Scott MP of the Conservative Party for the interest shown in their genuine endeavors to bring the Sri Lankan war criminals to justice. This is indeed the spectacle of the mother of democracy, the British Parliament, at work.




அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம் உள்ளம் கனிந்த தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துக்கள்!!

- ✓ Accountancy & Auditing
- ✓ Business Start up Advice
- ✓ Business Plans & Cash Flow Forecasts
- ✓ Personal tax Affairs & Self Assesment
- ✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- ✓ Company Formation
- ✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
- ✓ Attending VAT & PAYE visits
- ✓ Tax Investigations
- ✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS

Accounting & Tax Consultancy Ltd.

65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR

Tel: 020 8313 0800

# Come Off It! Sri Lanka Isn't Paradise On Earth!

By: Emil van der poorten
THE SUNDAY LEADER

Contrary to the attempts to spin-doctor every excess of the current regime and its sins of omission by those whose names hardly need specifying to anyone familiar with the media in this country, Sri Lanka has very serious problems that stem, primarily, from the militarism, racism, triumphalism and brutality that appears to pervade society and is increasingly taken for granted, as a 'fact of life,' thanks to the seemingly never-ending barrage of propaganda from writers of this ilk and those who provide them with patronage.

## Rule of law exists in all but name

The fact that most of this stems from nearly three decades of violent conflict, does not provide an excuse to pretend it isn't a problem in the here and now.

Suffice it to say that the sycophantic voices are significant and their ranks swelling, thanks to the perks that accrue to such people for providing the cloak of concealment to a regime that it is increasingly short of raiment with which to cover its moral and ethical nakedness.

Sri Lankan governments past and present are guilty of generating and presiding over this tragic state of affairs. The constant fall back of the horde of apologists when confronted with these horrors is, "They did it first," the "they" ranging from Atilla the Hun, the Visigoths, the leaders of the Inquisition, on to Hitler, Idi Amin and the governments that invaded Iraq and Afghanistan. In the case of the last category, the very fact that their conduct was totally reprehensible and their subsequent behaviour hypocritical, does not give us the right to use them as stalking horses to visit misery on those we victimise.

And this is exactly the path that these apologists tread in their seemingly endless sycophantic posturing.

A simple phrase would describe the response of those of us who subscribe to a code of decency, morality or ethics of some description: "This is just not good enough." Invoking the horrors of years and centuries past to justify the excesses of Sri Lanka today is just not acceptable.

We do have an ancient culture which gives us a base for behaviour of a far more civil and decent kind. Or is 'decency' now 'old-fashioned' and minus anything resembling 'cachet' in the parlance of those philistines who seek to control all of us and the discourse as well?

We have suicide rates that are horrendous and I know that reported statistics in this field often only exhibit a tip (even if a substantial one) of the iceberg of reality.

We have a seemingly endless stream of crimes of violence, often exhibiting cruelty that beggars description.

We have a drug and alcohol problem that no amount of 'thithas' will ever put an end to until and unless 'the-powers-that-be' use the skills of those knowledgeable in the addictions field to put in place a realistic and effective programme.

We have bribery and corruption permeating every element of our collective existence, setting progress back in innumerable ways.

## "Enough," you say?

Okay. What should we do about this mess and what can we, in fact, do?

For starters, how about recognising and acknowledging the problems that confront us? Without this recognition we are not going to be able to deal with them. Invoking the mantram of "2500 years of Sinhala Buddhist civilization" will just not cut it! Yes, the answers could well reside in that canon, but merely invoking it without seeking to apply some of the eternal truths contained therein in a practical manner will be nothing but a waste of time.

Once we have accepted the need to deal with the problems before us, we need to devise the means of responding to them.

Here I would submit that we need to throw into the dustbin of governing practice the 'command'" structure as the panacea for all ills. It has never worked anywhere and it will never work here. We need to involve those facing the challenges, to work with them and not to 'do' to them, no matter how well-intentioned the 'doing' might be. Even Mussolini, the first Fascist, didn't succeed in making the trains run on time and look at the kind of end he had!

We also need to get away from the myopic belief that 'economic development' by itself, without the social development and integration that we so desperately need after nearly 30 years of war, is going to be the one-stop panacea. It isn't. We need well-constructed, ethically-conducted modes of social development alongside economic development. This combination is a sine qua non for any kind of success. There are certainly no economic quick fixes. All they provide is the opportunity for the unscrupulous to rake in the bribes and commissions.

This can and must take place because there is no other way to solve the problems we face. And solving the problems of some will mean, in the last analysis, solving the problems of all. I particularly say this because the current theology appears to be that we take credit for the successes and blame the failures on our opponents, whoever they may be at any given point of time and motor on with grandiose 'infrastructure' and 'economic development', whatever those elements ultimately amount to.

We need to leave the well of paranoia, xenophobia and delusion and look at the whole world for the practical approaches that will help us conquer the Himalayas confronting us. Particularly, discarding everything 'the West' has to offer in this regard will constitute foolishness of monumental proportions. We need to take the best and most appropriate to our purpose, no matter from where it comes.

The primary challenge, though, is that of a government divesting itself of the enormous power it has arrogated unto itself without the attendant accountability and responsibility. You can't work as a partner when you have pretensions to omnipotence. That has to change. That is the primary challenge facing us as a nation and as citizens who seek a life of peace, tranquillity and achievement within its shores. Irrespective of the authority that the current regime feels it is entitled to exercise, the voice of the people of this country must be heard and their needs met in a manner that they decree. Nothing less will suffice.







# KIDS

## Why Anansi Has Eight Thin Legs

Once upon a time, a long time ago, there lived a spider named Anansi. Anansi's wife was a very good cook. But always, Anansi loved to taste the food that others in the village made for themselves and for their families.

One day, he stopped by Rabbit's house. Rabbit was his good friend.

"There are greens in your pot," cried Anansi excitedly. Anansi loved greens.

"They are not quite done," said Rabbit. "But they will be soon. Stay and eat with me."

"I would love to, Rabbit, but I have some things to do," Anansi said hurriedly. If he waited at Rabbit's house, Rabbit would certainly give him jobs to do. "I know," said Anansi. "I'll spin a web. I'll tie one end around my leg and one end to your pot. When the greens are done, tug on the web, and I'll come running!"

Rabbit thought that was a great idea. And so it was done.

"I smell beans," Anansi sniffed excitedly as he ambled along. "Delicious beans, cooking in a pot."

"Come eat our beans with us," cried the monkeys. "They are almost done."

"I would love to Father Monkey," said Anansi. And again, Anansi suggested he spin a web, with one end tied around his leg, and one end tied to the big bean pot.

Father Monkey thought that was a great idea. All his children thought so, too. And so it was done.

"I smell sweet potatoes," Anansi sniffed happily as he ambled along. "Sweet potatoes and honey, I do believe!"

"Anansi," called his friend Hog. "My pot is full of sweet potatoes and honey! Come share my food with me."

"I would love to," said Anansi. And again, Anansi suggested he spin a web, with one end tied around his leg, and one end tied to the sweet potato pot.

His friend Hog thought that was a great idea. And so it was done.

By the time Anansi arrived at the river, he had one web tied to each of his eight legs.

"This was a wonderful idea," Anansi told himself proudly. "I wonder whose pot will be ready first?"

Just then, Anansi felt a tug at his leg. "Ah," said Anansi. "That is the web string tied to Rabbit's greens." He felt another. And another. Anansi was pulled three ways at once.

"Oh dear," said Anansi as he felt the fourth web string pull.

Just then, he felt the fifth web string tug. And the sixth. And the seventh. And the eighth. Anansi was pulled this way and that way, as everyone pulled on the web strings at once. His legs were pulled thinner and thinner. Anansi rolled quickly into the river. When all the webs had washed away, Anansi pulled himself painfully up on shore.

"Oh my, oh my," sighed Anansi. "Perhaps that was not such a good idea after all."

To this day, Anansi the Spider has eight very thin legs. And he never got any food that day at all.

## Dear Kids...

Do you like to draw? Send in a picture of your favourite animal and write a few words on why it's your favourite and send it to ORU PAPER and you could be the lucky winner of a new stationary kit!

The winner will be published in the next issue!



Contestant: Nisnovi Mahendran (11 years old)
23 Caverham Gardens
Ilford, Essex
IG1 1XX

**WINNER**





## Ant Jokes

Where do ants go for their holidays?
**Frants!**

What do you call an ant who skips school?
**A truant!**

What do you get if you cross some ants with some tics?
**All sorts of antics!**

What do you call a greedy ant?
**An anteater!**

Why did the elephant put his trunk across the path?
**To trip up the ants!**

What is even bigger than an elephant?
**A giant!**

What do you call an ant in space?
**Cosmonants & Astronants!**

What do you call an ant from overseas?
**Impartant!**

## Funny Quotes!

Always forgive your enemies - Nothing annoys them so much.

If Barbie is so popular, why do you have to buy her friends?

When everything's coming your way, you're in the wrong lane.

I used to have an open mind but my brains kept falling out.

I couldn't repair your brakes, so I made your horn louder.

For Sale: Parachute. Only used once, never opened, small stain.

Do you have trouble making up your mind? Well, yes or no?

If everything seems to be going well, you have obviously overlooked something.

Many people quit looking for work when they find a job.

When I'm not in my right mind, my left mind gets pretty crowded.

Everyone has a photographic memory. Some just don't have film.

You know the speed of light, so what's the speed of dark?

Join The Army, Visit exotic places, meet strange people, then kill them.

I poured Spot remover on my dog. Now he's gone.

Evening news is where they begin with 'Good evening', and then proceed to tell you why it isn't.


## Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

***Last issue winner is Mithuna from Enfield ( Age 7)***



Show Amy the way to her tricycle.

## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| C | X | T | U | K | L | M | R | D | V |
| F | T | N | P | U | T | T | U | G | U |
| F | U | N | M | U | D | D | A | I | B |
| R | A | I | N | W | S | O | H | I | Q |
| L | A | D | D | U | S | S | Y | Z | A |
| I | R | B | I | L | I | O | M | A | D |
| P | O | E | O | E | P | K | N | I | L |
| M | T | A | P | O | P | I | D | E | L |
| J | T | E | U | A | I | R | S | M | R |
| D | I | V | F | T | N | G | E | Q | Y |

**Hidden Words:**

**Subject: Tamil eatable items**

MUDDAI, ROTTI, LADDU, PUTTU, SIPPI, SOKI

*Submitted by:*

***By: Kavya Thomas (Age 7) (Hayes)***

# Lycamobile
Call the world for less

# India
+ Mobile
1p /min

## Sri Lanka 9p /min
+ Mobile

Happy Diwali




## 2000 FREE minutes & texts
Lycamobile PLUS to Lycamobile PLUS with £30 top-up

**For your FREE Lycamobile PLUS SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322**

Buy and top up online or in over 115,000 stores

TESCO Sainsbury's Budgens BARCLAYS Costcutter WELCOMEBREAK Mills ONE STOP wilkinson Nisa Today's BOOKER

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

*2000 free minutes and 2000 free texts Lycamobile PLUS to Lycamobile PLUS when you top-up for £30. The free minutes and texts are only valid during the promotional period and only for the first 2 top-ups in any calendar month. Once the free minutes and free texts have been used or if all the free minutes and free texts have expired, Lycamobile PLUS to Lycamobile PLUS calls will be charged at 10 pence per min and Lycamobile PLUS to Lycamobile PLUS texts will be charged at 9 pence per text. The offer may be withdrawn at any time in full or in part at the absolute discretion of Lycamobile UK Ltd. unless the offer is withdrawn, it is valid from 01.11.2010 until 30.11.2010. Any withdrawal will be notified at www.lycamobile.co.uk. Any unused free minutes and texts will expire on 30.11.2010. Top-up and calls to landlines in Poland, Russia, Romania, Turkey, China + mobile, Malaysia, India + mobile, Slovenia and Slovakia are 1 pence per minute every day of the week, any time. Offer is valid from the 1st November to the 30th November 2010. No connection fees apply to national, international (excluding Lycamobile World promotion) texts and mobile calls to different operators.

Lyca mobile
Call the world for less


அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த தீபாவளி
நல்வாழ்த்துக்கள் !!
Made using milk powder imported from New Zealand
Niru BRAND ®
Lemon Puff
WITH
REAL LEMON
CREAM
சுவைத்துப் பாருங்கள் உண்மையான
லெமன்கிறீம் சுவையை.
SGS
SGS
Produced in our ISO 22000/HACCP certified factory

# கரிக்கட்டை

அவன் ஓடி கொண்டிருந்தான்.

அவர்கள் துரத்தி கொண்டிருந்தார்கள்.

அதிகாலை மூன்று மணியை தாண்டி இருந்தது.

வீதியில் ஆளரவமே இல்லாத அந்த வேளையில்.. இவர்களின் ஆடு புலி ஆட்டம்.

அவர்கள் மூன்று பிரிவாக வந்திருந்தார்கள்.

அவனும் சளைக்கவில்லை.. அவர்களுக்கு தண்ணி காட்டி ஓடி கொண்டே இருந்தான்.

தலைநகரில் அந்த வேளையில் அவர்களின் அலைபேசிகள் விடாமல் கத்தி கொண்டிருக்க... இவன் ஓடி கொண்டே இருந்தான்.

இவர்களிடம் உயிரோட பிடிபடக்கூடாது. இது மட்டும் தான் இப்போ அவன் நினைக்கும் ஒரே எண்ணம்.

இவனை உயிரோடு பிடிக்காவிட்டாலும் பரவாயில்லை.

இவன் உடலை, ஆக குறைந்தது இவன் முகத்தையாவது சேதமில்லாமல் எடுக்க வேண்டும் இது அவர்களுக்கான ஒரே கட்டளை.

என்னை வைத்து,

என் உருவத்தை வைத்து,

என் மக்களுக்காக வெடிக்க இருக்கும்,

விடுதலையை விரைவு படுத்த காத்திருக்கும் தோழர்களை பிடிக்க விடக் கூடாது என்பது தான்.. அவனது கவலை.

இன்றைய சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் இனி இவன் கிடைக்க மாட்டான் என்பது அவர்களது கவலை.

ஆடு புலி ஆட்டம் தொடர்கிறது.

அந்தோ!... அவன் சுற்றி வளைக்கபட்டு விட்டான்.

ஐயோ.!. சக்கை கூட இல்லையே இப்போ வெடிக்க..

குப்பி கடித்தால் கூட, என் முகத்தை வைத்து இடங்களை பிடித்து விடுவார்கள்..

என்ன செய்ய.. என்ன செய்ய..

தொடர்பு எடுக்க கூட நேரமில்லை. நான் போனாலும் பரவயில்லை. அவர்கள் வாழ வேண்டும்..

ஆக குறைந்தது. எம் மக்களுக்காக வெடிக்கும் வரை அவர்கள் வாழ வேண்டும்..

என்ன செய்ய.. என்ன தான் செய்ய..

அப்பாடி.. ஒரு வெதுப்பகம் (பேக்கரி).

காலை பாணுக்காக மும்முரமாக இருந்தது..

அவன் உள்ளே நுழைந்து விட்டான்.

அவர்களும் உள்ளே வந்து விட்டார்கள்.

முழு இடமும் தேடியாச்சு.. அவனை காணவில்லை..

கடைசியாக..

ஒரு வழியாக அவர்கள் அவனை கண்டுபிடித்து விட்டார்கள்.

கரிக்கட்டையாக..

அந்த கரி அவர்கள் முகத்திலும் அப்பி இருந்தது.

அன்றைய நாளின். தலைநகரின் ஒரு பகுதி காலை பாணுக்கு மட்டும் அல்ல..

எம் தாயக மக்களின் விடுதலைக்கும்..

அவன் விறகானான்.

*குறிப்பு: இது ஒரு உண்மை சம்பவத்தை தழுவியது. இந்த மான மாவீரனின் தியாகத்தால் தான் தலைநகரின் ஒரு மிகபெரும் தாக்குதல், எந்த பிசகும் இன்றி நிவேறியது. இந்த மறைமுக மாவீரனது பெயர் வெளிபடுத்த படாமையால், இடம் மற்றும் பெயரை தவிர்த்துள்ளேன்.*

*- அபிராம்*

## பின்னூட்டங்கள்

வாசிக்கும் போதே உள்ளம் நடுங்கறதே, அவர்கள் நடுங்காமல் முடிவுகளை எடுத்து போராட்டத்தை முன் நகர்த்தியவர்கள், அவர்கள் நகர்வால் சர்வ தேசம் நோக்கி நகர்ந்துள்ள போராட்டத்துக்கு நாம் என்ன செய்ய போகிறோம். எங்களிடமே தலைவர் நம்பிக்கையுடன் போராட்டத்தை ஒப்படைத்திருக்கிறார்.

தியாகங்கள் ஒருபோதும் வீனாகாது நான், நீங்கள் ஒட்டுமொத்த புலம்பெயர் தமிழர் நினைத்தால், போக வேண்டிய தூரம் அதிகமாக இருந்தாலும் எமது இலக்கு அடையக்கூடிய ஒன்றே.

*- சித்தன்*

மாவீரர்கள் மூட்டிய நெருப்பு எங்கள் உள்ளங்களில் எரிந்து கொண்டிருக்கும் வரை தமிழீழம் என்ற இலட்சியம் அணையாது.

*- வாத்தியார்*

கட்டி அழ கல்லறை கூட இல்லாத இந்த கரும்புலி வீரர்களின் கனவு நிச்சயம் நனவாகும்.

'தேசத்துக்காய் எங்கெங்கும்' வெடித்த எங்கள் மறைமுக கரும்புலிகளை மனசிலே நிறுத்துங்கள்.

அவர்கள் பெயர்கள் கூட இன்னும் உலகத்துக்கு தெரியாமல் ஏன் பெற்றோருக்கு கூட தெரியாமல் இந்த மண்ணுக்காக தங்களை சாம்பாலாக்கியவர்கள்.

அவர்களின் உண்மையான தியாகமும், அவர்களின் பெயர்களும் வெளியில் வர வேண்டும் என்றால் எங்களுக்கு நாடு வேண்டும்.

அதற்காக எல்லாரும் ஒற்றுமையாக போராடுவோம் என்று இந்த நாளில் அவர்கள் மீது உறுதி கொள்ளுவோம்.

*- அபிராம்*

கரிக்கட்டையானாலும் காலத்தால் அழியாதவர்கள். விமர்சனத்திற்கு அப்பாற்பட்டு விழிகளில் நீர்வரவைத்தபதிவு.

*- காவலூர் கண்மணி*

எமது உறவுகளால் பல அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன

அவை அவையாகவே இருக்கட்டும்

அவை கதைகள் அல்ல

நிஜங்கள்

தயவு செய்து உண்மையென்றால் உண்மைச் சம்பவம் என்று எழுதுங்கள்.

அதை அப்படியே எழுதுங்கள்.

கதை என்றால் கதை என்று எழுதுங்கள்

கற்பனையும் உண்மையையும் கலந்தது என்று அவர்களை எமக்கு அறிமுகப்படுத்த வேண்டாம்.

*- விசுகு*

இவர்களின் கனவுகள் பலிக்குமா?. நம்பிக்கை முள்ளிவாய்க்காலோடு போய்விட்டது.

*- கந்தப்பு*

அந்த அப்பழுக்கில்லாத, எல்லாவற்றையும் துறந்து மற்றவர்களின் நலனையே கருத்தாக கொண்ட ஒருவனின் அழியாத தியாகத்தை, அவனது கடைசி எண்ணங்களை, மிகவும் அழகாக வடித்திருக்கிறீர்கள்.

சருகுகள் வீழ்ந்தால் தான் மரத்துக்கு உரம் கிடைக்கும். முப்பத்தாயிரம் சருகுகள் தமிழ் ஈழம் என்ற மரத்திற்கு உரமேற்றிவிட்டு சென்றிருக்கின்றன.

இந்த தியாகத்தால் வளர்ந்த மரத்தை வீழ்த்துவது முடியாத காரியம். காலம் வரும், நாம் சென்று கூடு கட்டும் காலம் திரும்பி வரும்.

கந்தப்பு ஐயா, எனக்கு தமிழ் ஈழத்தில் முள்ளிவாய்க்கால் ஜெனோசைட் பின் நம்பிக்கை இன்னும் கூடியது.

இந்த ஜெனோசைட் விடயத்தை ஸ்ரீ லங்காகாரன் முடக்காமல் உலகிற்கு கூறும் பொறுப்பு நம்மிடம் தான் உள்ளது. நாம் துவண்டிருப்பது சரியல்ல.

*- குளவி*



## வருடாந்த செய்தியாளர் கருத்தரங்கு



சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் (International Association of tamil journalists) வருடாந்தக் கருத்தரங்கு நிகழ்வுகள் கடந்த மாதம் 23ம் திகதியன்று University of Westminster இல் இடம் பெற்றன. நிகழ்வுகளின் போதுஎடுக்கப்பட்டபடங்களையேநீங்கள்மேலேகாண்கிறீர்கள்.

## நவராத்திரி நிகழ்வுகள்



சட்டன் தமிழர் நலன்புரி Sutton Tamil Welfare Centre அமைப்பின் சரஸ்வதி பூசை நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.


பிரித்தானியா

TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312

உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?

TEL: 647 724 4188 FAX : 416 438 7855

கனடா



## கற்க கசடற - திருக்குறள் போட்டிகள்






தமிழ் இளையோர் அமைப்பினால் லண்டனின் நான்கு முக்கிய நகரங்களில் நடாத்தி கொண்டிருக்கம் கற்க கசடற 2010 திருக்குறள் போட்டியொன்று கடந்த 30 .10 . 2010 வட கிழக்கு லண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்மன் கோவி லில் நடைபெற்றது.

இதில் 80ற்கும் அதிகமான சிறுவர் சிறுமிகள் பங்கு பற்றி தங்கள் திறமைகளை வெளிக்காட்டினார்கள். போட்டி யின் இறுதியில் பங்கு பற்றிய அனைத்து சிறுவர்களுக்கும் சான்றிதழும் முதல் மூன்று இடத்தை பெற்றவர்களுக்கு பதக்கங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

வயதெல்லையின் அடிப்படையில் நடைபெற்ற இப் போட்டி 4 பிரிவாக இடம்பெற்றது. அதில் முதல் பிரிவினராக ஆறு வயதிற்குட்பட்டவர்களும் இரண்டாவது பிரிவினராக ஏழு தொடக்கம் பத்து வயதிற்குட்பட்டவர்களும் மூன்றா வது பிரிவினராக பதினொன்று தொடக்கம் பதின்மூன்று வயதிற்குட்பட்டவர்களும் நான்காவது பிரிவினராக பதின் நான்கு தொடக்கம் பதினாறு வயதிற்குட்பட்டவர்களும் அடங்குவர்.

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் முதல் மூன்று இடத்தை தட்டி செல்லும் சிறுவர்கள் நவம்பர் 20 ஆம் திகதி இடம் பெறும் இறுதிச்சுற்றில் மற்றைய நகரத்தில் வெற்றி பெறும் முதல் மூன்று போட்டியாளர்களுடன் கலந்து கொள் வார்கள்.

அடுத்து வரும் வாரங்களில் லண்டனின் ஏனைய நகரங் களிலும் இவ் கற்க கசடற திருக்குறள் போட்டிகள் நடை பெறும்.

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**NOV 06 SATURDAY @ 17:00**

கார்றுவழிக் கிராமம் - 2010.

புங்குடுதீவு நலன்புரிச் சங்கம் (பிரித்தானியக் கிளை) நடாத்தும் பல்சுவைக் கலைநிகழ்ச்சி மற்றும் மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள்.

இடம்: ZOROASTRIAN CENTER
440 Alexandra Avenue Rayners Lane, HA2 9TLX

தொடர்புகளுக்கு: 07941 049 716, 07929 349 302

**NOV 20 SATURDAY @ 18:00**

Annual Get together - 2010

அளவெட்டி மக்கள் சங்கம் (பிரித்தானியக் கிளை) நடாத்தும் வருடாந்த ஒன்றுகூடல் மற்றும் கலை நிழக்வுகள்.

நேரம்: மாலை 6.00-11.00 வரை

இடம்: Bentley Wood High School
Bridges road, Stanmore, HA7 3NA,

**NOV 20 SATURDAY**

கற்க கசடற - 2010 பரிசளிப்பு விழா

சாவதேச சிறுவர் நாளை முன்னிட்டு தமிழ் இளை யோர் அமைப்பு நடாத்திய திருக்குறள் போட்டி களின் இறுதிச் சுற்று மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்வுகள்.

தொடர்புகளுக்கு: katkakasadara@tyouk.org
Mob - 07401094874

**NOV 27 SATURDAY @ 18:00**

தேசிய நினைவெழுச்சி நாள்-2010

நேரம்: காலை 11:00 மணி

இடம்: 1, Western Gateway, Royal Victoria Dock
London Docklands, E16 1XL.


தொடர்புகளுக்கு: tnrf.co.uk@gmail.com
www.tnrf.co.uk

Nearest Station : Custom House & Prince Regent









# நாம் செய்ய வேண்டியது என்ன?

அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்!

இலங்கை சென்று வந்தேன். இலங்கையில் யாழ்ப்பாணம் போய் வந்தேன். பல்வேறு தீவுகளுக்கு பயணித்தேன். அங்கு தமிழர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று பார்ப்பதற்கு எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. இங்கு வாழுகின்ற சராசரி மக்கள் இன்னும் தங்கள் கண்களிலிருந்து அச்சத்தை விடவில்லை. இவர்கள் முன்பை விட இப்போது கொஞ்சம் அமைதியாக இருக்கின்றாரர்கள், ஆனாலும் வேதனையோடு இருக்கின்றார்கள்.

இந்த நேரத்தில் யார், யார், யாரெல்லாம் துன்பத்திற்கு காரணம் என்றெல்லாம் பட்டியல் போட்டு அரசியல் பேசுவதை விடவும் இப்போது உடனடியாகச் செய்ய வேண்டியது என்ன என்று யோசிக்க வேண்டியது தமிழ் இனத்தினுடைய கடமை. மனிதர்கள் நடந்தது பற்றியே பேசுகிறார்கள். வெட்கமில்லாமல் பேசுகிறார்கள். நடவற்றை எண்ணிப் பேசிக் கொண்டிருந்தால் என்ன பயன் விளையப் போகிறது? நீ குற்றவாளி! நீ குற்றவாளி! நீ தவறு செய்தாய்! இது நியாயமா? அது நியாயமா? மணிக்கணக்காகப் பேசலாம். பத்துக் காசுக்குப் பயனில்லை.

இப்போது சாப்பாட்டுக்கு இல்லாதவர்கள், இப்போது நோய்களோடு போராடுகிறவர்கள், இப்போதும் தங்கள் இருப்பிடத்துக்கு திரும்புவதற்கு பயப்படுபவர்கள், தமிழர்கள். தம் சொந்த இடங்களில் குடியேறுவதற்கு தயங்குகிறார்கள்.

இப்போது உண்மையிலேயே என்ன நடந்தாக வேண்டும்? அவர்களுக்கு உணவு, உடை, உறையுள், எல்லாவற்றையும் விட நம்பிக்கை, வாழ முடியும், வாழ முடியும் என்ற நம்பிக்கை தேவைப்படுகிறது.

இப்போது மீண்டும் பல்வேறு அரசியல் பிரச்சினைகளை பேசிக் கொண்டே இருப்பதால் அங்கு வாழுகின்ற தமிழர்களுக்கு பாதுகாப்புக் குறைகிறது. உலகெங்கும் இருக்கின்ற தமிழர்கள், இந்தியாவில் இருக்கின்ற தமிழர்கள் சிந்திக்க வேண்டிய மிக முக்கியமான பிரச்சினையை மறந்துவிட்டு தங்கள் சௌகரியப் படியே அரசியல் பேசிக் கொண்டிருக்கிறார்களேயொழிய, இங்கு பேசப் பேச அங்கு வாழுகின்ற தமிழர்களுடைய பாதுகாப்பு உணர்ச்சி குறைகிறது என்பதை முற்றிலுமாக மறந்து விடுகிறார்கள்.

அவர்கள் எனக்கு சொல்லச் சொன்ன செய்தியை இங்கிருக்கின்ற தமிழர்களுக்கும், உலகத்தில் இருக்கின்ற தமிழர்களுக்கும் சொல்லுகின்றேன். நீங்கள் தேவையற்ற விசயங்களைப் பேசுவதனால் அவர்களின் பாதுகாப்பு குறைகிறது. அவர்களுக்கு பயம் அதிகரிக்கிறது. அவர்களின் தேவைகள் பற்றி இப்போது கவலைப்பட வேண்டுமென்றால் சேவை நிறுவனங்களை ஊக்குவியுங்கள். இதுதான் உடனடியாகச் செய்ய வேண்டிய வேலை.

சில பகுதியில் நான் பயணித்த போது என் நெஞ்சு நின்று போனது. வழியெல்லாம் குண்டு துளைத்த வீடுகள். ஓடுகளில்லை. ஒரே துளை, துளை, துளையெனப்பட்ட வீடுகளுடைய சாயல், ஆனால் என்ன அழகான மண் தெரியுமா? என்ன வளமான மண் தெரியுமா? எவ்வளவு அருமையான பூமி தெரியுமா?

ஆனால் இத்தனையும் போரினாலே வீணாகிப் போயிருக்கிறது. மீண்டும் அந்த தமிழினம் அங்கே எழுந்து நடமாட வேண்டுமென்றால் அவர்கள் அங்கு குடியேற வேண்டும். அங்கு குடியேறுவதில் என்ன பிரச்சினை? பயப்படுகிறார்கள்! தாங்கள் எப்படி அங்கே போய் குடியிருப்பது? அவர்கள் யோசிக்கிறார்கள்.

உலகெங்கும் இருக்கின்ற மற்றத் தமிழர்கள் இப்போ செய்ய வேண்டிய வேலை என்ன? அவர்கள் குடியேறுவதற்குச் சில வசதிகள் தேவை. அங்கே வீடு கட்டிக் கொள்ள வேண்டும். இவர்களுக்குக் கழிவறைக்ள் வேண்டும். குடிநீர் வேண்டும்.

அவர்கள் என்ன வேலைக்கு போவார்கள் என்று நினைக்கின்றீர்கள்? ஒரு யுத்தத்தினாலே முற்றிலும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்ற ஒரு இனத்தைச் சார்ந்தவர்கள் எப்படிச் சம்பாதிப்பார்கள்? எப்படிச் சாப்பிடுவார்கள்? அங்கிருக்கின்ற பெண்கள், அங்கிருக்கின்ற ஆண்கள், அவர்கள் என்ன செய்து வாழ்க்கையை நடாத்த முடியும்? அவர்களுக்கு என்ன இருக்கிறது? அதைப்பற்றி உலகெங்கும் இருக்கின்ற தமிழர்கள், மற்றையவர்கள் யோசிக்க வேண்டும்.

அவர்களுக்கு வீடு வேண்டும், உணவு வேண்டும். அவர்களுக்குத் தேவையான பொருட்கள் அவர்களுக்குக் கிடைப்பதற்கு, ஆறு மாத காலமாவது அவர்களைத் தங்க வைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் உடனடியாகத் தேவைப்படுகின்றது. இப்போது நாம் அரசியல் பேசலாமா? நாம் இப்போது என்ன பேச வேண்டும்? சமாதானமான உண்மையிலேயே சமூக சேவை நிறுவனங்களை வளப்படுத்துகிற முயற்சியைத் தான் இப்போது உடனடியாக செய்தாக வேண்டும்.

ஒரு வேதனையான செய்தியைச் சொல்லுகின்றேன். அவர்களுக்கு ஏதோ குடியிருப்பதற்கு மண் தரவில்லை என்றெல்லாம் வெளியிலே இருப்பவர்கள் வீரவசனம் பேசுகின்றார்கள், ஆனால் வெளிநாடுகளில் வாழுகின்ற உலகத் தமிழர்கள், வசதியான வீடுகளில் பல இடங்களில் குடியிருக்கிறவர்கள் அவர்களின் கிராமங்களிலே இருக்கின்ற பழைய வீடுகள், குண்டு துளைக்கப்பட்ட வீடுகள், ஓடுகள் பறந்து போன பாழடைந்த வீடுகள், அவற்றை அங்கிருக்கிற தமிழர்களுக்கு கொடுக்க தயாராக இல்லை.

ஒரு இனத்திற்கு இது சரியானதுதானா? அவர்களுக்கு புதிதாக ஒரு வீடு கட்டி கொடுப்பதை விட, இந்த வீடுகளை விட்டு விட்டு வெளிநாடுகளுக்கு ஓடிப் போனவர்கள்,

இந்த யுத்தத்தில் தான் செத்து விடக் கூடாது என்பதற்காக வெளிநாடுகளுக்குப் போய் தங்கிக் கொண்டு விட்டவர்கள்,

இந்த மண்ணிலே இருக்கும் வீடுகளை இந்த யுத்தத்தால் சங்கடப்பட்ட சக இன மனிதன், சக தமிழன், சொந்தத் தமிழன், இவனுக்குக் கொடுக்கக்கூடாதா?

என்னுடைய வீட்டை நான் யாருக்காவது கொடுக்க தயாராக இருக்கிறேன். அதைப் புதுப்பித்து எடுத்துக் கொள்ளட்டும். அவர்கள் அங்கே வாழட்டும். புதிதாக ஒரு வீடு கட்டி அங்கிருக்கும் ஒரு தமிழனுக்கு கொடுப்பதென்பது சுலபமான வேலையா?

தகரத்தினாலே வீடு கட்டுகிறார்கள், முடியுமா அது? ஏன் நமது பழைய பாழடைந்த வீடுகளை, இனி நாம் போய் திரும்பி அடைய முடியாத வீடுகளை சேவை நிறுவனங்களுக்குக் கொடுத்து அதன் மூலம் அங்கிருக்கின்ற தமிழர்களை வாழ வைக்க முடியாதா?

மனம் வரவில்லை. அவுஸ்திரேலியாவிலும், ஜேர்மனியிலும், சுவிற்சர்லாந்திலும் எத்தனையோ நாடுகளிலும் வாழுகின்ற தமிழர்கள், அங்கிருந்து திரும்ப இங்கே வராவிட்டாலும் குண்டு துளைக்கப்பட்ட தமது பழைய வீடுகளை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை ஒரு அரையடி மண்ணை தமிழன் தமிழனுக்காக விட்டுக் கொடுக்க தயாராக இல்லை. இது இனப்பற்றா?

அங்கிருக்கிற மக்களின் துயரங்களையும் கண்ணீரையும் துடைப்பதற்கு இப்போது மிக நல்ல சந்தர்ப்பம். அவர்களுக்கு தேவையானவற்றை உலகத் தமிழர்கள் கொடுத்துதவ வேண்டிய காலம் இந்தக் காலம். வெட்டி அரசியல் பேசுவதால. எந்தப் பயனும் இல்லை.

பல தீவுகளுக்குப் பயணித்தேன். என்ன இயற்கை வளம் கொழிக்கிற பூமி அது! மீன் வளம்! நில வளம்! நீர் வளம்! இயற்கை வளம்! பனைமரங்கள் சலசலத்துப் பேசுகின்ற அற்புதமான அந்த அழகு. அங்கிருக்கின்ற நாய்கள் வெறி பிடித்துப் போய் இருக்கின்றன. ஆம், அவைகள் பிணங்களைத் தின்று பழக்கப்பட்டு விட்டன.

ஒரு ஆட்டுக் குட்டி நடந்து போனால் கூட அதைக் கடிப்பதற்கு அங்கிருக்கின்ற நாய்கள் தயாராக இருக்கின்றன. இந்த அளவிற்கு இரத்த வாடை அந்த நாய்களுக்குப் பழகி விட்டது. இந்தச் சூழ்நிலையில் வாழ்கின்ற மக்கள் எவ்வளவு அச்சத்தோடு வாழ்வார்கள். அவர்களைக் காப்பாற்றுவற்கு என்ன செய்ய வேண்டும்?

அங்கிருக்கிற தமிழர்களை வாழ்விப்பது எப்படி என்பது பற்றி உலகெங்கும் இருக்கிற தமிழர்கள் கவலைப்பட வேண்டிய முக்கியமான காலம் இந்தக் காலம்.

நான் இலக்கியங்களில் மட்டுமே படித்து மகிழ்ந்த மணிபல்லவம் தீவு அதை மிதிக்கின்ற வாய்ப்பு கிடைத்தது. மணிமேகலையில் சொல்லப்படுகின்ற அற்புதமான அந்த மணிபல்லவம் தீவு, அந்தக் கடலின் நடுவிலே இருக்கின்ற சின்னஞ்சிறு ஒரு அழகிய தீவு.

அதற்குச் செல்லுகின்ற வாய்ப்பக் கிடைத்தது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம். இலக்கியங்ளினால் பேசப்பட்ட ஒரு அருமையான இடம். அவற்றைப் பார்க்கின்ற போது ஒருபக்கம் மனம் பொங்கி வழிகின்றது.

இன்னொரு பக்கம் இன்றய நிலையை பார்க்கும் போது கண்ணீர் வருகின்றது. பலகாலமாக மின்சாரம் இல்லை. பலகாலமாக அவர்களுக்குச் சரியான குடிதண்ணீர் இல்லை, ஏனென்றால் ஒரு யுத்தத்தில் முற்றிலுமாக சிக்கிக் கொண்டிருக்கின்ற மண் அந்த மண். இந்த மக்களுக்கு மருந்து இல்லை. தேவையான மருந்துகள் வெளியில் இருந்து கிடைப்பதற்கும் வாய்ப்பு இல்லை.

இவற்றை எல்லாம் எப்படிச் செய்ய முடியும். நாம் வீரவசனங்களைப் பேசலாம், ஆனால் ஈர இதயத்தோடு நடந்து கொள்ள வேண்டிய நேரம் இது. மிச்சம் இருக்கிற தமிழர்களை எப்படி வாழவைப்பது?

இவர்கள் வாழ்வதற்கு ஆடுகள் தேவை, கோழிகள் தேவை, மாடுகள் தேவை. அவற்றைக் கொண்டு அவர்களுடைய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து கொள்ள முடியும். கடலில் போய் மீண்டும் மீன் பிடிப்பதற்கு அவர்களுக்கு படகு தேவை, வலை தேவை, பொருளாதார உதவி தேவை. இவையெல்லாம் இருந்தால் மீண்டும் அங்கிருக்கும் தமிழர்கள் நிச்சயமாக சௌகரியமான, சுகமான, சுகந்தமான. ஒரு வாழ்வைப் பெற முடியும். அதில் எந்த சந்தேகமும் இல்லை.

எனவே எல்லோரும் மனச்சாட்சியின்படி சமூக சேவை நிறுவனங்களை பலப்படுத்தி, மனித நேயத்தோடு மட்டும் அங்கிருக்கிறவர்களை வளப்படுத்துவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். நடந்தவற்றைப் பேசுவதால் தீர்வும் கிடைக்கப் போவது இல்லை. அங்கிருக்கிற அரசாங்கத்தைச் சீன அரசாங்கம் மிகுந்த அளவுக்கு மீறிய நட்புறவோடு கூடிய அரசாங்கமாக நடத்திக் கொண்டிருக்கிறது. அதனால் உலகத்தில் இருக்கிற மற்றவர்கள் நடப்புச் சூழ்நிலையை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.


இந்தியாவின் எல்லை என்ன என்பதனையும் நாம் யோசிக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம். சீனாவோடு இலங்கை நெருங்குவதென்பது இந்தியாவில் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு ஆபத்தானது. எனவே இந்தியா அங்கிருக்கின்ற அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது என்பதனையும் நாம் வரலாற்றுப் பார்வையோடு புரிந்து கொள்ள வேண்டும். எனவே வெட்டி அரசியல் பேசுவதை நிறுத்தி விட்டு சமூக சேவை நிறுவனங்களைப் பலப்படுத்தி அங்கிருக்கின்ற மக்களுடைய பொருளாதார வாழ்வு உச்சத்தை எட்டுவதற்கான சேவை நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு அவர்களுக்கு வீடு கொடுப்பது, மருந்து கொடுப்பது, துணி கொடுப்பது, வாழ்வாதாரங்களை ஏற்படுத்தித் தருவது, மீண்டும் வாழமுடியும் என்ற நம்பிக்கையைத் தருவது,

வெளிநாட்டில் இருப்பவர்கள் தாம் மீண்டும் அம்மண்ணிற்குப் போவதில்லை எனத் தீர்மானித்தால், அந்த வீடுகளை அங்கு வாழ விரும்புகின்ற மக்களுக்குக் கொடுப்பது, இவைதான் உடனடித் தேவை. மனிதன் மனிதனாக (வாழ) இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

*- சுகி சிவம்*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ



creative artwork from concept to design

## தங்காத நகைகள்

கற்பக விநாயகருக்கே கடலில் நீராடி மகிழ ஆசை வருமானால் காசு கொடுத்து நீச்சல் கற்ற பிள்ளைகளுக்கு கடலில் நீந்தி விளையாட ஆசை வராதா என்ன. பிள்ளைகளின் நச்சரிப்பு தாங்க முடியாமல் கோடை விடுமுறை முடிவதற்குள் ஒருதரமாவது கடற்கரையைக் கண்டு மகிழ அந்தக் குடும்பம் ஆசைப்பட்டது.

தாயகத்தில் வளர்ந்த காலம், களவாக கடலில் குளிக்கச் சென்று வீடு திரும்பியதும் சிவந்திருக்கும் கண்கள் காட்டிக் கொடுக்க, கண்ட கண்ட இடத்திலெல்லாம் அம்மா விளாசித்தள்ளிய தழும்புகள், மாற எத்தனை நாட்கள் சென்றன என எண்ணிப் பார்க்கிறேன். இங்குள்ள நிலைமை அப்படியா? ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி குழந்தைப் பருவத்திலேயே நீச்சல் கற்க வேண்டியது அவசியம் மட்டுமல்ல அத்தியாவசியமும் கூட. நல்ல வேளை இந்தப் பிள்ளைகள் அதிஷ்டவசமாக இங்கு பிறந்தார்கள்.

அதுசரி, ஏதோ கடற்கரை, கோடை விடுமுறை என்றெல்லாம் கதை அளந்துவிட்டு பாதியில் விட்டதுபோல் தெரிகிறதா? நாங்கள் விட்டாலும் இந்தக்காலத்து பிள்ளைகள் விட்டுவிடுவார்களா என்ன? அந்தக் குடும்பம் சிறியது. ஒரு ஆண், ஒரு பெண் வசதிகள் வளிந்து கொட்டாது போனாலும் பிள்ளைகளின் ஆசையை நிறைவேற்ற நிறையவே வசதிகள் உண்டு.

இலண்டனில் வசிப்பவர்கள், அதிகம் விரும்பும் கடற்கரை, பிறைற்றன் நகரத்தை அண்டி இருப்பது எல்லோரும் அறிந்ததே. வாராந்த விடுமுறை நாட்களில் காலையில் சென்று மாலையில் திரும்பும் நோக்கத்துடன் சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டது. பிள்ளைகளின் சந்தோஷத்தை கேட்கவா வேண்டும். அதிகாலையிலேயே பரபரப்பாக எழும்பி கூடை நிறைய சாப்பாட்டுடன் குதூகலமாக கிளம்ப, கடற்கரை மணலில் மல்லாந்து படுத்து, அவேசமாக வந்து மோதிய அலைகளில் பிள்ளைகளுடன் நீராடி பொழுது போவதே தெரியாமல் அந்த இருட்டு வரத்தான் வீட்டு நினைவு வந்தது.

விறுக்க விறுக்க வாரிச்சுருட்டி வீடு வந்து சேர இரவு நடுச்சாமம் ஆகியது. வந்த களைப்பு வாட்டிய வெயில் எல்லாமே ஒன்றுகூட கதவைத் திறந்ததுதான் தெரியும் எல்லோரும் அவரவர் கட்டிலில் சங்கமம்.

அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை தானே என்று கட்டிலை விட்டு ஆறுதலாக எழும்பலாம் என்றிருக்க, வந்ததே விபரீதம், குசினிப் பக்கம் போக எண்ணிய குடும்பத்தலைவி, குபீரென வரும் காற்று பின் கதவால் வருவது அப்போது தான் தெரிந்தது. ஓடிச்சென்று பார்த்தால் பின் கதவு உடைபட்டிருந்தது. நடந்த சம்பவத்தை உடனே ஊகித்துக்கொண்ட அந்தக் குடும்பத்தலைவி, ஓடோடிச்சென்று தன் நகைகளைப் பத்திரமாக மறைத்து வைத்த இடங்களில் தேடினாள். அப்போது தான் தெரிந்தது வந்தவர்கள் கைவரிசையைக் காட்டிவிட்டார்கள் என்பது.

## எதைப் பார்கிறோமோ அதன் வாசனையையும் நுகரலாம்

பத்திரிகைகளில் காணப்படும் படங்கள் வர்ண வர்ண கலர்களில் காட்சியளித்தாலும் அவற்றின் நறுமணமும் கலந்து வந்தால் எப்படி இருக்குமென ஒரு அற்ப ஆசை. ஆசை வந்தால் மட்டும் போதுமா, ஆராய வேண்டாமா? என்று ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் செய்த கடும் முயற்சியால், கண்களால் காணும் காட்சிக்கமைய அவற்றின் இயற்கையான வாசனையையும் நுகர தொழில்நுட்ப வசதிகளால் கைகூடுமென நிரூபித்துள்ளனர்.

ரோக்கியோ நகரிலுள்ள கெலோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த Keniche Okada என்பவரும் அவரது சகாக்களும் கைவசம் வைத்திருக்கும் இந்த தொழில்நுட்ப அறிக்கையை இம்மாத இறுதிக்குள் இத்தாலியில் நடைபெறவிருக்கும் பல்கலை தொழில்நுட்ப மாநாட்டில் சமர்ப்பிக்க இருக்கிறார்கள்.

பக்கம் பக்கமாக பதிவு செய்யப்படும், பத்திரிகைத் தாள்களிலும், கணணிகள் மூலமாக பதிவு செய்யப்படும் அச்சுப்பிரதிகளிலும் எவ்வாறு Ink Jet மூலம் மை பீச்சப்படுகிறதோ அதே முறையில் நறுமணம் கலந்த வாசனைத் தூளிகள் பீச்சப்படும் போது, காட்சிகளுக்கான இயற்கை மணம் வீசுவது நிரூபிக்கப்பட்டுள்ளது. அச்சியந்திரங்களைத் தயாரிக்கும் பிரபல நிறுவனமான Cannon இந்த ஆராய்ச்சிக்கு கைகொடுத்து, இப்புதிய தொழில்நுட்பத்தின் பாவனையை விரைவில் அறிமுகப்படுத்த தயாராகவுள்ளது.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : உமா மகாலிங்கம்

முன்பொரு காலத்தில், தீபாவளி மலர்களாக வெளிவரும் கல்கி, ஆனந்தவிகடன், குமுதம் போன்ற தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில், நல்ல நல்ல வாசனைத் திரவியங்கள் நறுமணம் பரப்பி வருவதை கண்டுள்ளோம். அதுபோல் அல்லாது, குறித்த காட்சிக்குரிய இயற்கையான வாசனையை மட்டுமே நுகரக்கூடிய மட்டத்தில் இப்புதிய தொழில் நுட்பம் வசதி செய்துள்ளது. அதையும்தான் பார்ப்போமே.

## பயணிகளுக்கோர் அறிவித்தல் !

2001ம் ஆண்டு பாரிசிலிருந்துமியாமி நோக்கி பயணம் செய்த அமெரிக்க விமானத்தை பயணிகளுடன் வெடிக்க வைக்க Richard Reid தனது காலணிகளுக்குள் மறைத்துச் சென்ற வெடி மருந்து கண்டுபிடிக்கப்பட்டதின் பின்னர் விமானப் பயணிகளின் காலணிகள் கழற்றப்பட்டு பாதுகாப்பு பரிசோதனை நடைபெறுவது அமெரிக்க விமான நிலையங்களில் கடைப்பிடிக்கப் பட்டுவரும் கண்டிப்பான கட்டுப்பாடு.

காலணிகளில் மறைத்து வைக்கப்படும் Triacetone (TATP) வெடிமருந்தை கால்களிலிருந்து காலணிகளைக் கழற்றாமலே மிகத் துல்லியமாக கண்டுபிடிக்கக் கூடிய கையடக்கக் கருவியை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். இலகுவில் கிடைக்கக்கூடிய சாதாரண இரசாயனப் பொருட்களை வைத்தே TATP என்ற வெடிமருந்தை உருவாக்க முடியுமென 1895ம் ஆண்டளவில் ஜேர்மன் இரசாயன பகுப்பாளர் Richard Holppenstein என்பவர் தான் முதன் முதலில் அறிமுகப்படுத்தினார்.

ஏனைய மருந்துகளைப் போலல்லாது, இதன் பிரசன்னத்தை கால்களில் அணியும் சப்பாத்துகளைக் கழற்றாமல் கண்டுபிடிக்கவே முடியாமல் அதை அணிந்திருப்போரின் தேகச்சூடு, சுற்றச்சூழலில் காணப்படும் இரசாயனப் பொருட்களின் குறுகீடு, தடுத்துவிடும் தன்மை இருப்பதின் காரணத்தினால், சப்பாத்துகளைக் கழற்றியே கதிர் இயக்கங்கள் மூலம் பரிசோதனை செய்வது அவசியமாகிறது.


புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கையடக்கக் கருவியின் உன்னத செயல்திறனால் நச்சுத் தன்மையைக் கொண்ட TATP வெடிப் பொருட்களை மட்டுமல்ல வேறு 20 வகையான கொடிய நச்சுப் பொருட்களையும் மிக இலகுவில் அடையாளம் காணும் வாய்ப்பு கிடைத்துள்ளதாக கிலிறொய்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரசாயன பகுப்பாய்வாளர் Kenneth Suslick ஆதாரத்துடன் அறிக்கையிட்டுள்ளார்.

இப்புதிய கருவியை , ஆடைகளில் அணியக் கூடியவாறு ஒருசிறிய அடையாளச் சின்னமளவிற்கு, உருவாக்க ஆராய்ச்சிகள் தொடர்வதாக Suslick அவர்கள் நம்பிக்கை தருகின்றார.

2005ம் ஆண்டு இரசாயன சாஸ்திரத்திற்குரிய நோபல் பரிசைப் பெற்றுக் கொண்ட Robert Grubbs அவர்களே இப்புதிய கண்டுபிடிப்பைக் கண்டு வியக்கும் போது நாங்கள் எம்மாத்திரம். எதிர்காலத்தில், விமான நிலையங்களில் இக் கருவி பயன்படுத்தப்படும் போது கால்களிலிருந்து சப்பாத்துகளைக் கழற்ற வேண்டிய தேவையே இராது. ஆகவே 'பயணிகளுக்கோர் அறிவித்தல், தயவுசெய்து இனிமேல் காலணிகளைக் கழற்ற வேண்டாம்.'


R.S. Finance

Commercial Mortgages & Business Loans



Contact: Sri
220 - HIGH STREET NORTH, EAST HAM,
LONDON, E6 2JA.
Tel: 020 8475 0755
Fax: 020 8470 4755 / Mob: 07803 600 543

Re-Mortgages
(Raising Funds to Start Own Business and Other Needs)
Secured Loans

Commercial Loans
Shops (Pharmacies)
Petrol Stations
Restaurants & Hotels
Care Homes Etc.

Loans will be arranged for lease hold and free hold businessess

Arrangements are made to meet the senior business manager from leading banks in our premises to fulfil your business loan requirements.

Whatever your needs, Regarding your Commercial Loans



VINCENT SOLICITORS

- ✓ இந்த நாட்டில் பல வருடங்களுக்கு மேல் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டோருக்கு உத்தரவாதத்துடன் கூடிய நிரந்தர வதிவிட உரிமை பெற்றுத் தரப்படும். (லெஹசி)
- ✓ பலவருடங்களாக உங்கள் விண்ணப்பம் பல்வேறு காரணங்களால் சரியான முறையில் அனுமதிக்கப்படவில்லை என்பதை நாம் நன்கு அறிவோம்.
- ✓ ஆகவே நன்கு அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் குழுவினர் தமிழ்பேசும் மக்களுக்கான இலவச ஆலோசனை சேவை வழங்கி வருகின்றனர்.
- ✓ (Legacy) லெஹசி என்பது நிராகரிக்கப்பட்ட உங்கள் அகதி அந்தஸ்து உரிமையை நிரந்தர வதிவிட உரிமையாக பெறுவதற்கான ஒரு ஏற்பாடு என்பதை அறிவோம்.
- ✓ பிரித்தானியா, இலங்கை, பாஸ்போட் விண்ணப்பம் மற்றும் Travel Document விண்ணப்பம்.
- ✓ மாணவர் விசா நீடித்தல் மற்றும் விசா நிராகரிப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்தல்
- ✓ PSW, Tier - 1, Tier - 2, Tier - 4 விண்ணப்பங்கள், மற்றும் உறவினர்களை பிரித்தானியாவிற்கு அழைப்பித்தல்
- ✓ பிரித்தானியச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்வதற்கு அனுமதி பெற்றுத் தரப்படும்.



020 8574 0666
11-13 Southall Street, Southall, UB1 1SU (ஹிமாலயா சினிமா எதிரே)

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
குறிப்பு : போலி வாக்குறுதிகளை நம்பி ஏமாற வேண்டாம்.

நீங்கள் இரத்தம் சிந்தி உழைக்கிறீர்கள் என்பது எமக்குத் தெரியும்

உழைத்தவற்றை ஊருக்கும் உறவுக்கும் கொடுத்து களைத்தீர்கள் என்பதும் எமக்குத் தெரியும்

ஒரு நாளில் உங்களுக்கு ஓய்வாகக் கிடைப்பது ஒண்டு ரெண்டு மணித்தியாலங்களே!

இதற்கு அதிகம் செலவழித்து தமிழ்த் தொலைக்காட்சிகளை பார்க்க முடியாது என்பதும் தெரியும்.

ஒரே ஒரு வழிதான் உங்களுக்கு உண்டு

சீவியம் முழுக்க உங்களால் பார்க்க முடிந்த தொலைக்காட்சிகளை பார்த்து மகிழ்ந்திட

அழையுங்கள்

**020 7183 0367**






**புதிய சட்டிலைட்**

**இணைப்புகளுக்கும் அழையுங்கள்**

இந்தப் பொட்டியின் தார்ப்பரியத்தை ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் உங்கள் உறவினர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

http://www.nallatv.com

இது ஒரு தமிழ் பெடியங்களின் தயாரிப்பு

# தீபாவளித் திருநாள்



தீபாவளி இந்துக்களின் திருநாள். ஊரின் அவலங்களில் அகப்பட்டு அவ்வப்போது கொண்டாட்ட முறைகள் மாற்றங்களை கண்டுள்ளன. நரகாசுரன் என்ற கொடிய அரக்கன் விஷ்ணுவால் கொல்லப்பட்டதை குறிக்கும் நாள் என்பது காலகாலமாக குறிப்பிடப்படும் விளக்கம். தீமைகள் அகன்றதின் அடையாளமாக தீபங்கள் ஏற்றி மகிழும் நாளாக இந்தியாவில் இந்துக்கள் இதனை கொண்டாடுகின்றார்கள்.

இந்துக்களின் புதுவருடமாக ஏனைய நாடுகளில் தீபாவளியே அமைகிறது. இனிப்புப் பண்டங்களை ஏராளமாக பரிமாறி சுவைத்து மகிழ்வதும் இந்நாளின் வழக்கம். நினைவில் திரண்ட சிறுபிராய நாட்களில் தீபாவளி ஒரு உல்லாச நிகழ்வு. வீட்டில் ஒவ்வொருவருக்கும் புதிய ஆடைகள் வாங்குவது பெற்றோரின் வழக்கம்.

மலிவு விற்பனை என ஒவ்வொரு சேலைக் கடைகளும் இருமாதங்களுக்கு முன்பாகவே கலகலப்படையும். மிதி வண்டியில் புடவை என கூவி விக்கும் புடவை வியாபாரிகள் வீதி வீதியாக வலம் வருவார்கள். கடல் வழியாக வரும் தமிழக சேலைகளோடும் கால்நடை வியாபாரிகளை காணமுடியும். வீட்டு முன் விறாந்தைகளில் இவ்வியாபாரிகள் அமர்ந்து துணிமூட்டைகளை அவிழ்த்து ஒவ்வொன்றாக விரித்துப் போடுவார்கள். துணி அழுக்கடையாமல் இருக்க வியாபாரிகளைக் கண்டதுமே பாய் விரிக்கப்பட்டு விறாந்தை அழகாகிவிடும். அம்மம்மா, அம்மா, சித்தி, அடுத்தவீட்டுக்காரர் என ஒவ்வொரு புடவை உடுப்புகளையும் அழகு பார்ப்பதும், அளவு பார்ப்பதும், விலை கேட்பதும் தீபாவளிக்கு முன்பாகவே ஊடுப்பு தொடர்பாக ஒவ்வொரு வீட்டிலும் நிகழும் நிகழ்வு.

தீபாவளிக்கு ஒரு வாரம் முன்பாகவே யாழ்ப்பாண பட்டணம் சனங்களால் நிறையும். வீதியோர வியாபாரிகள் கூவி அழைப்பதும், சனங்களைக் கண்டதும் கடலை வண்டி, தும்புமிட்டாய்க்காரர், பலூன் விற்பனையாளர், அதிஷ்டலாபச்சீட்டு விற்பனையாளர், மரக்கறிச் சந்தையாளர் என ஒவ்வொருவரும் சுறசுறுப்படைவதும், கூவியழைப்பதும் பட்டணத்தை கலகலப்பாக்கும்.

பஸ்களில், வான்களில் பட்டணத்துக்குக் கொள்வனவுக்குச் செல்லும் குடும்பம் கையோடு ஒரு படத்தையும் பார்த்து விடுவோம் என்கிற திட்டமும் இருக்கும். வெலிங்டன், வின்ஸர், ராணி, றீகல், ராஜா என எல்லா திரையரங்கங்களிலும் பழைய படங்கள்தான் ஓடிக்கொண்டிருந்தாலும் தீபாவளிக்கு முன்னைய நாட்களில் கொட்டகை நிறைந்த காட்சிகளாக அவை அமையும். தீபாவளியை ஒட்டி வெளியாகும் புதிய படங்களின் ஒரு சில காட்சிகளை இடைவேளையின் போது ஒளிபரப்பாக்கி புதிய படத்துக்கான ஆர்வத்தையும் ஆசையையும் சனங்களுக்கு வளர்ப்பதிலும் திரையரங்கின் உரிமையாளர்கள் கவனம் செலுத்துவார்கள்.

வீடு வீடாக தீபாவளிக் கொண்டாட்டத்தை வெளிப்படுத்தும் வான வேடிக்கைகைகள் இரு மூன்று வாரங்களுக்கு முன்பாகவே ஆரம்பமாகிவிடும். வானவேடிக்கையோடு வீட்டில் பட்டாசு வெடிகளும் முக்கிய பங்கு வகிக்கும். ஈக்கிள் வானம், மூல வெடி, பட்டாசு வெடி என வெடி வரிசைகளால் கடைகளும் நிறையும். சிறுவர்களுக்கானது பூரிஸ். கையில் வைத்து சுற்றச் சுற்ற அலங்கார மினுங்கல்கள் மலர்ந்து மகிழ்விக்கும். பூரிஸ் வாணத்தின் தன்மை இது. சிரட்டைக்குள், உரல், பீப்பாய் என்பனவற்றுக்குள் வெடியை கொழுத்திப்போட்டு வித்தியாசமான சத்தத்தை வெளிப்பத்துவதிலும் அந்தக்கால ஆனந்தங்களில் ஒன்று.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

தீபாவளி மாமிச போசன கொண்டாட்டமாகவே பல காலம் தொடர்ந்தது. தீபாவளியன்று பங்குக் கிடாய் இறைச்சிக்கு முன்கூட்டியே சொல்லிவைப்பதும், மதியபோசன விருந்துக்கு ஆட்டுக்கறியே பிரதான கறியாக அமைவதும் வழக்கம். பெரியவர்களுக்கு சாராய போத்தில். வழக்கமாக கள்ளு அருந்துபவர்கள் தீபாவளியன்று விசேடமாக சாராயம் அருந்தவார்கள்.

சீமைச் சாராயத்தை தேடி வாங்குவதும், தீபாவளிக்கு கொழும்பால வரும் மருமக்கள் மாமன்மாருக்கு சீமைச்சாராயத்தை பரிசாக தருவதும் ஒரு வழக்கமாக இருந்தது. சட்ட விரோதமாக சாராயம் விற்கும் மூலைக் கடைகளில் பக்கத்தே வெவ்வேறு இடங்களில் கூடுதலான சாராய போத்தல்களை பத்திரப்படுதி முன்கூட்டியே வைத்து விடுவார்கள். வாடிக்கையாளர்களின் பாட்டுக்கள், ஆட்டங்கள, தளர் நடைகள், வீதியோரத்தில் புது சாரத்தோடு வெறியில் விழுந்து கிடக்கும் நிலை என்பன தீபாவளிக் காலத்தில் காணப்படும் சாராய விசேடங்களாக அமையும்.

வெவ்வேறு நகரங்களில் உத்தியோகம் காரணமாக தங்கியிருப்போர் விடுமுறைக்கு ஊருக்கு பரிசுப்பொருள்களோடு வருவார்கள். யாழ் தேவி, மெயில் வண்டி என ஒவ்வொரு வண்டிகளும் ஒரிரு வாரங்களாக சனங்களால் நிறைவதும் தீபாவளியோடு ஒட்டி நிகழும் நிகழ்வுகளில் ஒன்று. இனக்கலவர அவலம் இடம்பெயர்வு, புலம்பெயர்வு என்பவற்றின் ஆரம்பங்கள் தீபாவளிக் கொண்டாட்டத்திலும் மாறுதலை ஏற்படுத்தியுள்ளன. கௌரிவிரதம், கந்தர்சஷ்டிவிரதம் என ஒரிரு முதியவர்கள் மட்டும் முன்பு கடைப்பிடித்த முக்கிய விரதங்கள் தீபாவளியோடு ஒட்டி வருபவை. இந்த விரதங்கள் பலரும் கடைப்பிடிக்கும் விரதங்களாக சூழலால் மாறுபட ஆரம்பித்தது.

**தீபாவளிக் கொண்டாட்ட முறைகளும் உணவு ரீதியாக சைவ உணவு விருந்தோடு பெரும்பாலும் அமைந்துவிடுகின்றது கோவிலுக்கு போவதும், புத்தாடை அணிவதும் என்ற மட்டத்தில் தீபாவளிக் கொண்டாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.**

ஊரின் கொண்டாட்ட சூழல் இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்டதற்கு போர்ச்சூழலும் ஒரு காரணம். வெடிமருந்துக் கடையும் பட்டாஸ் வெடி கடையாகிவிட்டது. வீட்டுப்பிள்ளைகளுக்கு புத்தாடை எடுப்பதும் கோயிலுக்கு போவதும் என்ற மட்டத்தில் தீபாவளிக் கொண்டாட்டங்கள் இன்று எங்கும் தொடர்கின்றன.

எம்மவர்கள் மத்தியில் இவ்வாறான ஒரு நிலை. ஆயினும் ஏனைய நாடுகளில்இருக்கும் இந்துக்கள் இன்றும் இதனை மிகப் பெரிய கொண்டாட்டமாக புது வருடதிற்குரிய கொண்டாட்டமாக இணைத்துக் கொண்டாடுவது, எங்கும் வருடாந்த நிகழ்விலே இந்துக்களுடைய பெருநிகழ்வு தீபாவளியென்கின்ற நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றது.

எம்மவர்களுக்கு மட்டும் புதுவருடம் சித்திரையில் அமைவதால், தீபாவளிக் கொண்டாட்டம் இவ்வாறாக மட்டுப்படுத்தப் பட்டிருக்கின்றது. எனினும் எம்மவர்களிடேயும் கூட இந்துக்களின் ஒரு கொண்டாட்டத்தின் அடையாளமாக இன்றும் தொடர்கின்றது.




# தையனதக்கா நான் ஒரு ஈழத்தவன்

இனிய காலை வணக்கம் தொடர்ந்து கேட்க இருப்பது ஆத்மீக ஆராதனை என இந்திய தமிழ் பெண்குரல் வானோலியில் தவழ்ந்து வந்து என்னை எழுப்பியது. ஒவ்வொரு நாளும் என்னை எழுப்புவது இந்த ஆத்மீக ஆராதனைதான்.டி.எம்.எஸ்.இனிய குரலில் ஒரு இந்து பாடலும்,ஜோனி எபிரகாமின் குரலில் கிறிஸ்தவப் பாடலும்,இ.எம்.கானிபாவின் குரலில் இஸ்லாமிய பாடலையும் பாடி ,தங்களது மத கருத்துக்களை திணித்தார்கள். நானும் கருத்துக்களை கச்சிதமாக உள்வாங்கிக் கொண்டு காலைக் கடன்களை முடித்து பூஜை அறைக்குள் சென்றேன்.

பூஜை அறையில் சமஸ்கிருத ஓம், பக்கத்தில் இந்திய சாமியார் சாய்பாபா கையை உயர்த்தி பிடித்து ஆசிர்வாதம் வழங்கும் போஸ் கொடுக்க ஏனைய பழைய சாமி பிள்ளையார்,முருகன்,சிவன் எல்லோரும் ஓவ்வொரு மூலையில் இருந்து என்னை பார்த்து கொண்டிருந்தனர்.. எல்லோருக்கும் ஒரு வணக்கம் செய்து போட்டு, விபூதியை எடுத்து பூசின மாதிரியும் பூசாத மாதிரியும் நெற்றியில் கையை வைத்துவிட்டு வேலைக்கு போக தயாரானேன்.

இஞ்சாருங்கோ அப்பாகுஞ்சு சப்பாத்தியும், சனாக் கறியும் (கடலைக்கறி) சாப்பாட்டு பெட்டிக்குள் போட்டு பிறிட்ஜ்க்குள் வைத்திருக்கிறன் எடுத்துக் கொண்டு போங்கோ என மனிசி கட்டிலில் அரை தூக்கத்தில் இருந்தபடியே சொல்ல சரி அடியாத்தை என்று பதிலளித்து, உணவிலும் இந்தியாக்காரன் எங்களை ஆட்டிப்படைக்கிறான் என மனதில் புறுபுறுத்தபடியே காரை ஸ்டார்ட் செய்தேன்.

பிரபல இந்தியா பாடகர் சீர்காழி கோவிந்தராஜன் குரலில் முருகா முத்துக்குமரா என்ற பாடல் ஒலிக்கத் தொடங்கியது. அவரின் குரலிலேயே ஏனைய பாடல்களை கேட்டபடியே வேலைத்தளம் போய் சேர்ந்தேன்.

காலை வணக்கம் சொல்லி போட்டு என்னுடைய வேலையை பார்க்கத் தொடங்கினேன். ஒரு வெள்ளை பக்கதில வந்து கலோ எப்படி இருக்கிறாய், நான் நலம் உன்னுடைய சுகம் எப்படி என்றேன் (இருவரும் சுகமா இருக்கிற படியால்தான் இங்க இருக்கிறோம் என மனதிற்க்குள் நினைத்துக் கொண்டேன்.) என்னடாப்பா நல்ல சந்தோசமாய் இருக்கிறாய் என்ன விசயம், இன்று வெள்ளிக்கிழமை அதுதான் மகிழ்ச்சியா இருக்கிறேன், மதியம் பியர் அடிப்போம் வாரீயா என அழைப்பு விடுத்தான்.பின்னேரம் கோவிலுக்குபோகவேணும் வரமுடியாது பதிலளித்தேன். கிரேட் வேஸ்டேர்ன் ரோட்டில் இருக்கிற இந்தியன் டேம்பிலுக்கோ என் வினாவினான். எனக்கு கோபம் வந்திட்டுது, இந்தியன் டெம்பில் இல்லை கிந்து டெம்பில் என்றேன். இரண்டும் ஒன்றுதானே,நீயும் இந்தியன் தானே,இதுக்கு பிறகும் என்னால் பொறுமையாக இருக்க முடியவில்லை, நீ இங்கிலிஸ்காரனோ அவுஸ்ரேலியனோ என்று கேட்க ,எனக்கு இங்கிலீஸ் காரனை பிடிக்காது நான் ஒஸி என்றான் அது மாதிரித்தான் நானும் இந்தியன் இல்லை ஈழத்தமிழன் உணர்ச்சிவசப்பட்டு கூறினேன். கூல் ...கூல் என கட்டிப்பிடித்தான்.

நாங்கள் ஈழத் தமிழர்கள் காசு போட்டு கோவிலை கட்டி முருகனுக்கு விசாக்கு அப்பிளை பண்ணி இந்தியாவில இருந்து இங்க கூப்பிட்டு வைச்சிருக்கிறோம். இவன் வெள்ளை விபரம் தெரியாமல் இந்தியன் டெம்பில் என்கிறான் லூசன் பரதேசி ..கிறுக்கன் என மனதில் திட்டி தீர்த்தேன்.

வேலை முடிந்து வீடடை வந்தா, மனிசியும் பிள்ளைகளும் சன் டி.வி யில் மூழ்கியிருந்தார்கள். அமிதாப்பச்சன் விளம்பரத்திற்க்கு வந்து போனார் அவரை தொடர்ந்து சச்சின் தமிழில் பேச மகள் கேட்டாள் அப்பா அவர் டமிழா நல்லாய் டமிழ் கதைக்கிறார், ஓம் என தலையை ஆட்டி போட்டு அடுத்து வந்த ஐஸ்வரியா ராய்யை பார்த்து ரசித்தேன். தொடர்ந்தது ஒருநாடகம் எல்லோரும் சேர்ந்து பார்த்துக் கொண்டிருந்தோம். நாயகியின் சேலை நல்லாய் இருக்கு அடுத்த முறை இந்தியாவுக்கு போய் வாங்க வேண்டும் என மனிசியும், அந்த ஆண்டியின் பன்கிள்ஸ் நல்லாய் இருக்கு நான் அதை இந்தியாவில வாங்க வேணும் என் மகள்மாரும் சொப்பிங் லிஸ்ட் போட்டுக் கொண்டிருந்தார்கள்

சரி,சரி எல்லாம் வாங்கலாம் இப்ப கோவிலுக்கு போக வெளிக்கிடுங்கோ சத்தம் போட்டேன்,உடனே டி.வியை நிறுத்தி போட்டு எல்லோரும் வெளிகிட ஆயத்தமானார்கள்.பிள்ளைகள் அந்த இந்தியன் டொப்பையும் ஜீன்ஸ்சையும் போடுங்கோ.நான் போனமுறை இந்தியாவில வாங்கின பன்சாபி போடப்போகிறேன்.அப்பா நீங்களும் "குமரன் சில்க்ஸ்' வாங்கிய் குர்தாரை போடுங்கோ என்றபடியே குளியலறைக்குள் சென்றாள்

7 மணி பூஜைக்கு நாங்கள் கோவிலில் நின்றோம்.ஐயர் மணி அடித்து சமஸ்கிருத ஸ்லோகம் சொல்லி பூஜை செய்தார்.நான் தமிழில் அழகான வீடு வேண்டும் ,பிள்ளைகள் படித்து டாக்டர் ஆக வேண்டும், புது மோடல் பி.எம்.டபிள்யு வேணும் என்று எனது வழமையான அப்பிளிக்கேசன்களை போட்டுக் கொண்டிருந்தேன். ஐயரின் மணி ஒசை, மந்திர சத்தத்தில் நான் தமிழில் போட்ட வேண்டுகோள் முருகனுக்கு கேட்டிருக்குமோ தெரியவில்லை.

ஐயர் திராவிட மொழி நமஸ்கார பஞ்சபுராண அருளுக என்று சொல்ல உடனே பிள்ளைகள் இந்திய நாயன்மார் பாடிய தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருபல்லாண்டு, திருவிசைப்பா புராணம் என பாடி முடித்தனர். நான் சின்ன பிள்ளையா இருக்கும் பொழுது தேவாரம் மட்டும் நான் பாடுவேன் மிகுதியை ஐயர் பாடி முடிப்பார். ஆனால் புலத்தில பிள்ளைகளுக்கு ஒழுங்காக சொல்லி கொடுத்திருக்கிறோம். எங்களுடைய தமிழ் சைவ கலாச்சாரத்தை காப்பாற்றுவதற்கு எங்களால் ஆன ஒரு சிறு முயற்சிதானே. இல்லாவிடில் பிள்ளைகள் வெள்ளக்காரனின் கலாச்சாரத்தை பின்பற்றி அழிச்சு போய் விடுங்கள் என்ற ஒரு முன் எச்சரிக்கைதான்.

பிள்ளைகள் கோவிலில் தமிழ் சைவ கலாச்சாரத்துடன் இருந்தாலும் வெளியில் ஆங்கில கிறிஸ்தவ கலாச்சாரத்தில் மூழ்கி திலைக்கினம் என எங்களுக்கு விளகிங்னாலும் விளங்காதமாதிரியிருப்பம்.

பசிக்குது என்று பிள்ளைகள் சொல்ல கோவிலுக்கு பின்புறமிருக்கும் கடைக்கு சென்றேன்.அங்கு தோசை, மசாலாதோசை, இட்லி, பூரி, சாம்பார், சட்னி என வித விதமான சாப்பாடுகள் இருந்தன. எங்களுடைய பாரம்பரிய சாப்பாடாகிய புட்டு, இடியப்பம், சம்பல், சொதி ஆகியன இருக்கோ என எட்டிப் பார்த்தேன் ஒன்றையும் காணவில்லை. உடனே மனிசி குரல் கொடுத்தாள் உதில நின்று விடுப்பு பார்க்காமல் தோசையும், இட்லியும் வாங்கி கொண்டு வாங்கோ இதில இருந்து சாப்பிடுவோம், காருக்குள் உந்த தோசைகள கொண்டுபோக ஏலாது காருக்குள் பிறகு தோசை மணக்கும்.

சனிக்கிழமை பிள்ளைகளை தமிழ் பாடசாலைக்கு கூட்டிக் கொண்டு போனேன். அசம்பிளி முடியும் மட்டும் நின்றேன். தமிழ்தாய் வாழ்த்து பாடினார்கள் முடிவடையும் பொழுது' வாழ்க தமிழ்நாடே' என தமிழநாட்டை வாழ்த்தி ஈழத்து சிறுவர்கள் பாடி முடித்தனர்.

பின்பு திருக்குறள் செப்பினார்கள் ,தொடர்ந்து காந்தியை பற்றியும் அவரின் அகிம்சை கொள்கை, எமக்கு விடுதலை வாங்கித்தந்தார் காந்தி என்று புகழ்ந்தனர் ஈழத்து சிறுவர்கள். பாரதியாரின் விடுதலை கீதம் ஒன்றைபாடி பாரதிக்கும் மரியாதை செலுத்தினர்.

என்னடா ஒரே இந்தியாப் புராணம் பாடிக் கொண்டிருக்கிறோம் நாங்களும் எங்கன்ட பிள்ளைகளும் என நினத்துகொண்டு வெளியேறும் பொழுது தியாகி திலீபனுக்கு நினைவாஞ்சலி என்ற சுவரோட்டியை பார்த்து போட்டு அங்கு செல்வோம் அங்காவது எம்மவர் நிகழ்ச்சியாக இருக்கும் என்ற நம்பிக்கையில்,அவருக்கும் அஞ்சலி செலுத்தி எம்மவர் புகழ் பாடுவோம் என்ற எண்ணத்தில் சென்றேன்.

முதலில் மலர் வணக்கம் நடந்தது பங்கு கொண்டேன். பிறகு பட்டிமன்றம் இன்றைய காலகட்டத்தில் அகிம்சை போராட்டமா ஆயுத போராட்டமா சிறந்தது என விவாதம், அங்கேயும் இரு இந்தியர்கள் அகிம்சை சிறந்தது என அகிம்சை பற்றி புளுக நம்மவர் இருவர் ஆயுதம் சார்பாக விவாதித்தனர். ஆயுதபோராட்டத்தில் வளர்ந்த சமூகம் இன்று அகிம்சை பரப்புவதற்கும் இந்தியாவின் கருத்தாதிக்கத்தை எமக்கு திணிப்பதற்கு நாமே மேடை போட்டு கொடுத்துள்ளோம் என்று புறு புறுத்தபடியே மண்டபத்தை விட்டு வெளியேறினேன்.

எங்க போய் சுத்தி போட்டு வாறீயள், நாளைக்கு அரங்கேற்றத்துக்கு போகவேணும் உடுப்புகளை ரெடி பண்ணி வையுங்கோ என்றாள். எனக்கு உதுகளை பார்க்க விருப்பமில்லை நீர் போயிட்டு வாரும் என்றேன்.உங்களை யார் வந்து பார்க்க சொன்னது, எனக்கு சீலையை உடுத்து கொண்டு அவ்வளவு தூரம் கார் ஓட ஏலாது சீலை கசங்கி போயிடும் அதுதான் உங்களை வரச் சொன்னேன். பார்க்க விருப்பமில்லை என்றால் என்னையும் பிள்ளைகளையும் கொண்டு போய்விட்டிட்டு நீங்கள் காருக்குள் நித்திரை கொள்ளுங்கோவன் என கட்டளையிட்டாள்.

அடுத்த நாள் அரங்கேற்றத்திற்கு சென்றேன், மேடையில் ஒரு குட்டி இந்தியாவே காணக் கூடியதாக இருந்தது. இந்திய கலைஞர்கள், இந்திய உடைகள், இந்திய மொழிகள் (கன்னடம், தெலுங்கு) இந்திய நடனங்கள்........ இந்திய பெண்கள்

பார்வையாளர்கள் மட்டும் எம்மவர்கள்..... தையன தக்கா தையன தக்கா.... என இசை ஒலிக்க தொடங்க.....

நான் ஒரு ஈழத்தவன் எந்த கொம்பனும் எனக்கு இந்திய கருத்தியலை திணிக்க முடியாது.... தையனதக்கா தையனதக்கா..என பார்த்து இருந்து ரசித்தேன்..

*- புத்தன் (யாழ்)*

## மாட்டு வண்டி

காலை எழுந்தால் கடையில்
சாமம் வந்தால் வீட்டில்
மூன்று பிள்ளை பிறந்தும்
முழுதாய் முகங்கள் கண்டதில்லை.

வந்தால் குறட்டை கேட்கும்
மனைவி நல்லாய் தூங்கும்
போகும் போது சொன்னால்
தலையை மட்டும் ஆட்டும்.

பிள்ளைகள் முகங்கள் காண
போர்வை தூக்கிப் பார்ப்பேன்
கால்களை தொட்டுக் கொஞ்ச
கவலை அடைக்கும் நெஞ்சை.

மனைவிக்கு வாகனம் வாங்கியும்
வந்தும் என்னைப் பார்க்காது
கடையில் ஆளைப் போட்டால்
கையும் கணக்கும் சரியாகும்.

பிள்ளைகள் பாசம் தேடி
துடியாய் துடிக்கும் மனது
கடையை இழுத்துப் பூட்டினால்
கண்டிப்பாய் மனைவி கத்துவாள்.

வெளியில் எடுத்து சாப்பாடு
கேட்டால் நேரம் இல்லையாம்
பிள்ளைகள் படிப்பை சாட்டி
பெருமை கொள்ளும் மனைவி.

உப்பும் உறைப்பும் இன்றி
நாக்கும் செத்து போச்சு
அம்மா நினைப்பும் வந்தால்
அழுகை வந்து அடைக்கும்.

உள்ளமும் உடம்பும் தேய்ந்து
தூக்கம் இல்லை எனக்கு
வசதியான வாழ்வு போல
மனைவி அலையும் காட்சி.

முகத்தில் இருந்த வெளிச்சம்
முழுதாய் வற்றிப் போச்சு
இருந்தும் இருண்ட மனத்தோடு
இழுத்துப் போகிறேன் வண்டியை.

– வ. கணேஷ்

## மேலான பகைவன்

நண்பன் வேண்டியவன்
பகைவன் நண்பனிலும் மேலானவன்
கடன் கேட்க மாட்டான்

– வேல் தர்மா



# வீழ்வோம் என்று நினைத்தாயோ ?

மேசையில் இருந்து இப்பத்தியை எழுத ஒற்றை அடுக்கி பேனை மூடியைத் திறக்கிறேன் வெள்ளையான ஒற்றை கள் கறுத்த மை கொண்ட பேனை இதற்கும் அப்பால் என்ன எழுதப் போகிறேன் என்ற சிந்தனை இது மாவீரர்களுக் குரிய மாதம் என்ற இரட்டைச் சொல்லைத் தவிர வேறு சிந்தை ஏதுமில்லை இன்று(3-11-10 புதன்) எப்படியும் இப் பத்தியை அனுப்பி விடவேண்டும் என்ற முனைப்பில் ஜீ.ரீ.வியில் இடம்பெறும் வெளிச்சம் நிகழ்ச்சியை முழுமை யாகப் பார்க்காமல் இதனை எழுதுகிறேன். இன்று முக்கிய மான விவாதம் நடைபெறுகிறது. நாடுகடந்த தமிழீழ அரசா ங்கத்தின் அமைச்சரவை அறிவிக்கப்பட்டது தொடர்பாக நிகழ்ச்சித் தயாரிப்பாளர் தினேஷ் அவர்கள் நா.க. ஆ வின் அமைச்சர் தயாபரன் அவர்களுடன் கலந்துரையாடுகிற ார். தயாபரன் அவர்களின் கருத்துக்களை உள்வாங்கு கிறேன் முழுமையாக அல்ல.

மேசையில் என் முன்னே பாரதியாரின் படத்துடன் அவரது கவிதை ஒன்றும் சட்டம்(Frame) போட்டு இருக்கிறது. 'தேடிச் சோறு...' என்று தொடங்கும் கவிதை இவ்வாறு முடி கிறது. '...நான். வீழ்வேன் என்று நினைத்தாயோ' இறுதி வரியும் மாவீரர் மாதமும் தயாபரன் அவர்களின் கருத்துக்க ளும் என்னுள் ஒரு புள்ளியில் சந்திக்கின்றன. இவை குறி த்து ஏன் எழுதக் கூடாது?.

முள்ளிவாய்க்கால் துயரின் பின்னர் இது இரண்டாவது மாவீரர் நாள். இன்னும் சொன்னால் தமிழீழ தேசத்தில் பௌதீக ரீதியாகக் கொண்டாடப்படாத இரண்டாவது மா வீரர் நாள். எத்துணைப் பெருந்துக்கத்தை தம்முள் பொத்தி வைத்தபடி மாவீரச் செல்வங்களின் தாய்மாரும் உறவுக ளும் துடிதுடித்துப் பதைபதைத்துப் போயிருப்பார்கள். ஓர் ஆறுதல் தேடியோட அவர்களுக்கு யார் இருக்கிறார்கள். மாவீரர் துயிலுமில்லங்களும் சிங்களத்தால் சிதைக்கப் பட்டுவிட்டது. அது அப்படித்தான் ஆகும். இதில் ஆச்சரியப் பட ஒன்றுமில்லை.

ஆனால் சிங்களமோ பிற ஒடுக்குமுறையாளர்களோ ஒன்றை மறந்து விடுகிறார்கள். மக்களுக்காகப் போராடி யோர் எவரும் மரணிப்பதில்லை மக்களின் மனங்களில் என்றும் வாழ்கிறார்கள். சிங்களம் இடித்தது வெறும் கற் களை. உழுதது வெறும் நிலத்தை. மாவீரர் துயிலும் இல் லம் உலகத் தமிழர் ஒவ்வொருவர் மனத்திலும் உறைந்தி ருக்கிறது. மாவீரர்களுக்கான மனக் கோயில்கள் கொஞ்ச மில்லை. அங்கு உருவாகும் அன்புக்கோர் பஞ்சமில்லை.

மாவீரர் கனவு ஒன்றே ஒன்று தான் அது தமிழீழம். மாவீரர் கனவினை அடைந்து விட்டோமா? அல்லது அக்கனவை அழித்து விட்டோமா ? இதொன்றும் இல்லை. மறந்து கொண்டு போகிறோம். நம்முள் மல்லுக்கட்டிக் கொண்டு நிற்கிறோம். மீண்டும் மீண்டும் ஒப்பாரி பாடி ஏது பயனும் இல்லை. மாவீரர் கனவை மாத்திரமல்ல மாவீரரையே மறந்து போகிறோம்.

அப்படித்தானா? ஆனால் நாம் அப்படியானவர்கள் அல்லவே. இடையிடை சிற்சில தயக்கங்கள் நிகழும் குழப் பங்கள் நேரும். வழி மாறி நெறிபிறழ்ந்து செல்வோம். இருட்டை வெளிச்சம் என்று ஏமாறுவோம். இல்லாத ஒன்றை இலக்கு என்று குறிவைப்போம். எது நேரினும் ஈற்றில் சரியான பாதையில் நேரான பயணம் செய்து தெளிவான இலக்கை அடைவோம். ஜீ.ஜீ.பொன்னம்பலம் காலத்திலும் அது தான் நடந்தது. அமிர்தலிங்கம் காலத்திலும் அப்படியே தான் ஆனது.

இப்பொழுது மீண்டும் குழப்பம் மயக்கம் இது இயற் கை இப்படித்தான் நேரும் என்பது தான் உண்மை தவறு செய்யாதவன் மனிதனே அல்லன் என்று சொல்ல மாட் டேன். தவறுகள் தான் மனிதர்களை மானுடர்களாக உரு வாக்குகிறது. தவறுகள் தாம் தகுதியுள்ள மனிதர்களை ஆக்குகிறது.

இம்மாதத்தில் நாம். சிந்திக்க வேண்டியது ஒன்று தான் மாவீரர்கள் கனவை நனவாக்குதல். அது மாவீரர்களின் கனவு மாத்திரம் அல்ல, உலகத் தமிழர்களின் கனவு. இக் கனவு ஏன் வந்தது. 'நாம் இல்லா நாடுமில்லை நமக் கென் றோர் நாடும் இல்லை' ' ஆண்ட தமிழினம் மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன தவறு' போன்ற வெற்றுக் கொட்டு முழக்குகளினாலா தமிழீழம் நாம் கேட்டோம்?

அல்ல என்று அடித்துச் சொல்வேன் நாம் ஒடுக்கப் பட்டோம் அடக்கப்பட்டோம் அடிமைகளாக நடத்தப்பட் டோம். மனதில் எவ்வித சுதந்திரமும் இன்றி வாழ்வில் நிறையப் பயங்களுடன் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டோம். உலகில் மகா பெரியது எது என்று யாரிடமும் கேளுங்கள் அவர்கள் ஒன்றையே உரைப்பர். சுதந்திரமாக வாழ்தல். அவ்வாக்கியத்துடன் இன்னொன்றையும் இணைக்க வேண்டும் பயமின்றி வாழ்தல்.

ஒருவருக்கான மனச் சுதந்திரமே அவரது சிந்தனைச் சுதந்திரம் செயல் சுதந்திரம். வாழ்க்கைச் சுதந்திரம் அவ் வாறே பிள்ளைகள் பெற்றோர்களிடமோ மனைவி துணை வனிடமோ மற்றும் யாரும் யாரிடமோ பயமின்றி வாழ்தல் என்பதே வலிமையானது.

## இரவி அருணாசலம்

### எழுதுவது என்னவெனில்

இலங்கைத் தீவில் தமிழர்க்கொரு தேசமே சுதந்திரமான மனநிலையையும் பயமின்றி வாழ்தலையும் கொடுக்கும். அவையே அடுத்த கட்டத்துக்கு தமிழர் என்கின்ற மனிதர் களை நகர்த்தும். உலகில் அவர்களும் ஆற்றல் உள்ளவர் கள் என்பதை நிரூபிக்கும். எனது தேசத்தில் எனது மொழி யில் நான் வாழ்தலும் சிந்தித்தலுமே எனது வலிமை. அதற் காக எமக்கொரு தேசம் வேண்டும்.

இதனை 19ம் நூற்றாண்டிலேயே சிந்தித்தார் அப்போதைய தமிழர் தலைவர் என அறியப்பட்ட சேர். பொன். அருணாசலம் அவர்கள். அவரின் பின் அவ்வாறு சிந்தித்தோர் பலர். தந்தை செல்வா அவர்களுள் ஒரு விடிவெள்ளி. அச்சிந்தையை செயலாக்கி அடுத்த கட்டத்திற்கு ஏந்திச் சென்று உச்சி க்குக் கொண்டு போய் தமிழீழ தேசம் அமைத்துக் காட்டி யவர் எமது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள். அவர் போல் உலகில் ஒரு தமிழர் இல்லை உலகத் தமிழர் அனை வருக்கும் தலைமை தாங்கும் உன்னதம் பெற்ற ஒப்பற்ற தலைவர் அவர்

எமது இந்தக் கனவைத்தான் மாவீரர் தம் தோளிலும் வாளிலும் துணிவிலும் துடிப்பிலும் உணர்விலும் ஓர்மத்திலும் வீறிலும் வீரத்திலும் குருதியாலும் வியர்வையாலும் உழைப்பாலும் உறுதியாலும் தியாகத்தாலும் தீரத்தாலும் காவிச் சென்றனர்.


அதனைக் கவனத்தில் எடுப்போம் நண்பர்களே. மாவீரர் மாதத்தில் அதனை மனதில் இருத்துவோம். எவரும் எமது ஒருமைப்பாட்டை குலைக்க முடியாது என்று ஓங்கிக் குரல் கொடுப்போம். வீழ்ந்து போகிறார் தமிழர் என்றொரு வெற்றிச் சொல் சிங்களத் தேசமெங்கும் எதிரொலிக்கிறது. ஓம் என்று நாமும் அதனை வழி மொழியப் போகிறோமா அல்லது

வீழ்வோம் என்று நினைத்தாயோ? என்று கேட்டபடி எழுந்து நிமிரப் போகிறோமா? எதுவாயினும் மாவீரரை மனதில் இருத்தி உங்கள் பதிலை வையுங்கள்.

# அறிவியல் தகவல்கள்

சி.மாசிலாமணி
*(ஒரு பேப்பருக்காக)*

## பாலங்கள்




எளிதாகப் பயணம் செய்வதற்கு தடையாக இருக்கும் ஆறுகள் நீர்நிலைகள் பள்ளத்தாக்குகள் ஆகியவற்றுக்கு மேலாக தகுந்த உயரத்திலும் உரிய வடி வமைப்பிலும் கட்டப்படும் அமைப்புக்களை பாலங்கள் என்று அழைப்பர். இன்றும் கிராமப் பகுதிகளில் மரக்குற்றிகளால் ஆன பாலங்களைக் காணலாம். அவை எளிதானவை. நீளமான இரு மரங்களையோ தீராந்திகளையோ ஓடும் வாய்க்காலுக்கோ சிற்றாறுக்கோ குறுக்கே போட்டுவிட்டு அவற்றிற்கு மேலே ஒழுங்காகப் பலகைகளையோ சீவிய பனை தென்னை மரங்களையோ பரப்பி பாலம் அமைக்கிறார்கள். நீரோட்டம் தடைப்படாது நீர் ஓடும் திசைக்கு சீமெந் துக் குழாய்களை போட்டு மண் போட்டு நிரப்பி பாதை அமைக்கும் இன்னொரு முறையும் உள்ளது. இவை இரண்டினதும் முன்னேறிய வடிவங்களே இரும்பால் ஆன பெட்டித் தீராந்திப் (box girder) பாலமும் மேல்நோக்கிய வளைவுப்(arch) பாலமும். மைல் கணக்காகப் போடப்படும் மேட்டுப் (causeway) பாலமும்.

சிறு பிள்ளைகள் செக்காடுவதை அவதானித்திருப்பீர்கள். 10 அடி நீளத்திற்கு குறையாத சீவிய பனைத் தீராந்தியின் நடுப்பகுதியை உறுதியாக நாட்டிய ஒரு தடியின் விட்டத்தின் மேல் வைத்து விட்டு இரு பக்கமும் எடையை சமன்செய்து பல பிள்ளைகள் ஏறுவார்கள். அவர்களின் எடை முழுவதும் நாட்டப்பட்ட தடியை கீழ் நோக்கி அமுக்கும் வேலையை மட்டும்தான் செய்கிறது. இந்த அடிப்படை யில் உருவானவைதான் தொங்கு பாலம் (suspension bridge). தடிக்குப் பதிலாக பாரிய கோபுரங்கள் அச்சாகப் பயன்படுகின்றன. பாலம் தொடுக்கும் இரு கரைகளிலும் பாலத்தின் அகலத்திற்கு ஏற்றாற்போல் வலுவான ஒவ்வொரு மேடை கட்டப்படும். பாலத்திற்கு பிரதான இரு வடங்கள் தேவை. அவ்விடங் களின் ஒருபக்கத் தொங்கல்கள் மேடையின் இருமருங்கும் உறுதியாகப் பொரு த்தப்படும். இப்போ வடம் கோபுரத்தின் உச்சிக்கு மேலால் தூக்கப்பட்டு ஒழுங் காக உச்சியில் பொறுக்க விடப்பட்டு மேலேறிய அதே கோணத்திலேயே மறு பக்கம் கீழ் இறக்கப்படும். கீழ் வந்த வடத்தின் மிகுதிப் பகுதி அதே முறை யில் அடுத்த கோபுரத்தின் உச்சிக்கு மேல் எற்றப்பட்டு ஒழுங்காக உச்சி க்கு மேலால் ஓட விடப்பட்டு பின் கீழ் இறக்கப்பட்டு மறுகரை மேடையில் தொங்கல்கள் இரண்டும் பொருத்தப்படும். இப்போது என்ன, ஒருகரையில் ருந்து மறு கரைக்கு வடம் இழுத்தாயிற்று. அந்த இரு வடங்களிலிருந்தும் தொங்க விடப்படும் பல சிறு வடங்களில் பாலத்தை தொங்க விடவேண்டியது தான். ஒரு மைலுக்கு கூடுதல் தூரத்தில் அமைந்த இரு பாரிய கோபுரங்களு க்கு இடையில் எந்த ஆதரவும் இல்லாமல் அந்தரத்தில் தொங்கக்கூடிய பாலங் களை அமைக்கும் அளவுக்கு தொழிநுட்பம் முன்னேறிவிட்டது. எடுத்துக்காட்டி ற்கு கிட்டத்தட்ட இரண்டரை மைல் நீளமான யப்பானின் அகசி கய்க்யோ தொங்கு பாலத்தின் 6532அடி நீளம் கொண்ட நடுப்பகுதி அந்தரத்தில் தொங்கு கிறது. ஒடுங்கிய நீரிணையில் இப்பாலம் அமைந்துள்ளதால் இவை பாரிய நீரோட்டத்தை சமாளிக்க வேண்டும். கட்டும்போதே மணிக்கு 180 மைல் வேகக் காற்றைச் சமாளிக்கும் தன்மையும் 8.5 வரையான பூகம்பத்தைச் சமாளிக் கும் தன்மையும் பரிசோதிக்கப் பட்டது. இப் பாலத்தைத் தாங்கும் இரு கோபுரங் களின் அடித்தளம் பாரியது. 197 அடி நீருக்கு கீழே 263 அடி விட்டமும் 230 அடி உயரமும் கொண்ட இரு உருக்குக் குழாய்கள் நிமிர்த்திப் புதைக்கப்பட்டு அதன் அடியில் இருந்து கோபுரங்கள் தொடங்குகின்றன. இந்தக் கோபுரங்களி ன் உயரம் 928அடி. இதன் நீளமும் ஒரு உலக சாதனை. கோபுர உயரமும் ஒரு உலக சாதனை. பிரதான வடம் 3 அடி 8 அங்குல விட்டம் கொண்டது. பிரமிப் பை தருபவை இவை மட்டுமல்ல. பயன் படுத்திய மொத்த வடங்களின் நீளம் ஒரு இலட்சத்து எண்பத்தாறாயிரம் மைல். பயன்படுத்திய கொங்கிறீற் கலவை 14 லட்சம் கனமீற்றர். கொங்கிறீற்றுக்கு பயன்படுத்திய உருக்கின் எடை 181,400 மெற்றிக் தொன். தொங்கு பால அடிப்படையில் வடம் தாங்கு (cable stayed) பாலமும் அமைக்கப் படுகிறது. இங்கு தொங்கு பாலத்தைப்போல் பிரதான வடம் இரண்டு இருக்காது. கோபுரத்திலிருந்து நேரடியாகவே பல வடங்கள் கீழ்நோக்கி வந்து பாலத்துடன் தொடுக்கப்படும். முதலாவது வடம் உச்சி யில் ஆரம்பித்தால் கடைசி வடம் பாலத்துக்கு அண்மித்த உயரத்தில் ஆரம்பி க்கும். பார்த்தால் தலை கீழாகத் தொங்க விடப்பட்ட விசிறி வாழைபோல் தென்படும்.



# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. Age 30, 5'7", Doctor, Danish Citizen, looking for a well educated bride. Ref: 1729.

2. வயது 26, 5'11", Personal Banker, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் நன்கு படித்த தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1807

3. Age 36, 6", MSc finished, British Citizen, well employed, looking for a matching bride. Ref:1191.

4. வயது 37, 5'9", A/L finished, PR in France, தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 972.

5. Age 27, 5'9", BSc in Computer Engineer, Student visa in UK, looking for a matching bride. Ref: 1856.

6. வயது 31, 5'6", A/L finished, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1837.

7. வயது 31, 5'6", A/L finished, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1784.

8. வயது 30, 6", BSc Graduate, UK PR, இலங்கையில் வசிக்கும் தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றார். Ref: 2012

9. Age 29, 5'9", MSc in IT, Student Visa in UK, looking for a matching bride with UK PR or citizenship. Ref: 1919

10. 37 years, 5'10", working in a retail profession, British Citizen, looking for a matching bride. Horoscopes should be matched. Ref: 1728

11. 31 years, 5'7", Doctor, British Citizen, looking for a well educated bride. Ref: 1680

12. வயது 32, 5'2", Student visa இல் பிரித்தானியாவில் வசிக்கும், செவ்வாய் குற்றம் உடைய மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 636.

13. வயது 25, 6'0", துபாயில் வசிக்கும் மணமகனுக்கு ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1528

14. Age 25, 5'6", HMD Business student, student visa in UK, looking for a matching bride with UK PR or Citizenship. Ref: 1703

15. வயது 31, 5'5", இலங்கையில் கல்விக் கோட்டத்தில் வேலை செய்யும் வாய் பேச முடியாத மணமகனுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1656

16. வயது 31, 5'7", பிரித்தானியாவில் நிரந்தர வதிவுடமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 686

17. 24 years, 5'9", IT Student, student visa in UK, looking for a suitable bride. Ref: 1672

18. 35 years, 5'11", Uk PR, Self-Employed, seeking a matching bride. Ref: 1693

19. 37 years, 5'6", Computer Science Graduate, British Citizen, Divorced, looking for a suitable bride with UK citizenship. Ref: 1684

20. வயது 48, 5'7", Self-Employed, UK PR, மணமமகன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1694.

21. வயது 52, 5'7", widowed, இலங்கையில் வசிக்கும் மணமகன் சிறந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1699

22. Age 31, 5'7", working as Project Manager in a leading company in UK, British Citizen, seeking a suitable bride. Ref: 575.

23. வயது 28, 5'4", Medical sector, இந்திய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1565.

24. வயது 35 5'5", BA Graduate, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1480.

25. Age 35 5'7", selfemployed, French Citizen, seeking a suitable bride. Ref: 1444.

26. வயது 40, 5'7", Accountant, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1457.

27. துபாயில் வசிக்கும் வயது 28, 5'5", மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1602

28. வயது 32, 5' 7", UK PR, looking for a suitable bride. Ref: 1526.

29. வயது 30, 5'6", Accountant, அவுஸ்திரேலியன் PR பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார் Ref: 1413.

30. Age 30, height 5.5" in Sri Lanka, a farmer looking for a suitable bride Ref: 1323

31. Age 28, height 6.0" Engineer working in UK in a company with the work permit visa looking for a suitable bride Ref: 1316

32. Age 35, height 5.11" British Citizen, Engineer woking in a company looking for a suitable bride Ref: 1332

33. Age 30, height 5.5" Engineer working in UK with Work permit visa looking for a suitable bride Ref: 1355

34. Age 38, height 6.0" living in Canada, looking for a suitable bride Ref: 1407

35. Age 28, height 5.9" Canadian Citizen, Graduate is looking for a suitable bride Ref: 1339

36. Age 32, height 5.11" Marine Engineer currently studying in Cyprus looking for a matching bride Ref: 1356

37. Age 36 height 5.8" Canadian citizen, graduate, self employed looking for the suitable bride. Ref: 1409

38. 28 வயது, 6'2", Canadian Citizen, well employed, மணமகன் தகுந்த வாழ்க்கைத் துணையைத் தேடுகின்றார். Ref: 1203

39. 24 years, 5'9", working in a CCTV Company in malaysia, is looking for a suitable bride in Europe. Ref: 1202

40. 31 years, 5'9", Indian Nationality, BA Physicology, seeks a suitable bride. Ref: 1271

41. 37 years, 5'10", British Citizen, Accountant, looking for a matching bride. Ref: 678

42. British citizen 37 years, 5'10", self employed in IT, looking for a suitable partner. Ref: 1199.

43. 40 வயது, 5'9", கனடா பிரஜாவுரிமை பெற்ற, வங்கியில் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1231

44. 55 வயது, 5'6", இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற, Heathrow Airport இல் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref:1235.

45. 42 வயது, 5'6", British Citizen, இலண்டனில் IT Company ல் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1213.

46. 42 வயது, 5'6", Swiss Citizen, Engineer தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1167.

## மணமகன் தேவை

1. Age 27, 5'6", Investment Banker, British Citizen, looking for a educated and professional groom. Ref: 1722.

2. Age 28, 5'5", Doctor, British Citizen, seeking a well educated groom. Ref: 1780.

3. வயது 24, 5'3", BSc Degree holder in Mathematics & statistic, இலங்கையில் வசிக்கும் செவ்வாய் குற்றம் உடைய பெண் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றார். Ref: 1243.

4. வயது 37, 5'3", MSc in IT, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 895.

5. வயது 28, 5'5", Financial Officer ஆக இலங்கையில் வேலை செய்யும் மணப்பெண்ணுக்கு ஐரோப்பாவில் தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2027

6. வயது 29, 5'7", MSc in Financial Mathematics, இலங்கையில் Bank Of ceylonஇல் வேலை செய்யும் மணமகளுக்கு தகுந்த துணையைத் தேடுகினறனர். Ref: 1871

7. வயது 33, 5'3", A/L finished, இலங்கையில் வசிக்கும் விவாகரத்து பெற்ற மணமகளுக்குத் தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1782

8. வயது 36, 5", A/L finished, இலங்கையில் தினக்குரல் பத்திரிகையில் வேலை செய்யும் பெண்ணுக்கு பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற துணையைத் தேடுகின்றனர். Ref: 1942

9. வயது 46, 5'6", பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற, குழந்தையுடன் வசிக்கும் விவாகரத்து பெற்ற பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1845

10. Age 32, 5'6", Teacher, French Citizen, looking for a matching groom. Ref: 1954.

11. 21 years, 5'3", Information technology in IT, living in India, seeking a matching groom in UK with citizenship. Ref: 1686

12. வயது 30, 5'4", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1551

13. வயது 23, 5'3", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு UK Citizen பெற்ற மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1697

14. 25 years, 5'1", BA Graduate, PR in UK, seeking a suitable grrom. Ref: 1580

15. வயது 25, 5'6", இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1696

16. வயது 29, 5'4", Doctor, இலங்கையில் வசிக்கும் மணமகள் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1695

17. 41 years, 5'5", MSc in computing, British Citizen, looking for a matching groom. Ref: 1678

18. Age 38, 5'7", working in financial sector, Canadian Citizen, looking for a matching groom. Ref: 1595.

19. வயது 23, 5'2", Medical Student, British Citizen, தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1408.

20. Age 25, 5'2", Pharmasist, British Citizen, looking for a educated groom. Ref: 1531.

21. வயது 28, 5'4", BSc Degree Holder, இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகள் நன்கு படித்த தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1596

22. Age 25, 5'2", Computer Engineer, Danish Citizen, looking for a educated groom. Ref: 1527.

23. வயது 25, 5'0", தற்பொழுது France இல் வசிக்கும் பெண்ணுக்கு, ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1475.

24. வயது 27, 5'2", இலங்கையில் Administrative Assistant ஆக வேலை செய்து கொண்டிருக்கும் மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1459.

25. வயது 25, 5'0", இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1525.

26. Age 43, 5'2", working in a University in Sri Lanka, looking for a suitable grrom. Ref: 1246.

27. வயது 27, 5'1", graduate degree holder, இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1433.

28. Age 24, 5'9", BA finished in Jaffna univercity, looking for a suitable groom. Ref: 1599

29. இலங்கையில் வசிக்கும் வயது 30, 5'5", Nurse, மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1598.

30. Age 37, height 5.5" Doctor working in a Jaffna Hospital looking for a suitable Groom Ref: 1063

31. Age 38, height 5.6" Canadian Citizen, Engineer working in a company looking for a suitable Groom Ref: 1322

32. Age 35, height 5.6" French Citizen, in UK Divorcy working as a sales assistant looking for a suitable Groom Ref: 610

33. Age 28, height 5.0" in India looking for a suitable Groom Ref:1347

34. Age 27, height 5.2" British Citizen Accountant working in a company looking for a suitable Groom Ref:1348

35. Age 32 height 5.3" Sri Lanka, finished diploma in Psychology looking for a suitable Groom Ref:1391

36. Age 28, height 5.7" in UK worked as a English teacher in Sri Lanka looking for a suitable Groom Ref:1406

37. Age 30, height 5.7" British citizen, Graduate and working as a Biochemist looking for a suitable Groom Ref:627

38. Age 22, height 5.2" British citizen, Graduate looking for a suitable groom Ref: 1408

39. 24 வயது, 5'3", BSc Degree holder in Mathematics, படித்த, இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற செவ்வாய் குற்றமுள்ள மணமகனைத் தேடுகின்றார். Ref: 1243.

40. 28 வயது, 5'0", மணமகள் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1222

41. 41 years, 5'5", finished MBA in UK, seeks an educated groom. Ref: 1230.

42. 38 வயது, 5'4", Doctor in UK, நன்கு படித்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1232

43. 43 years, 5'2", working at univercity in sri Lanka, is looking for a grrom with Europe Citizenship. Ref: 1246.

44. 46 வயது, 5'2", British Citizen, divorcee, தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1210

45. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற 28 வயது, 5'2" உயரம், BSC Degree in Computer Science & Business Management படித்த பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1160.

46. இலண்டனில் படித்துக் கொண்டிருக்கும் 22 வயது, 5" உயரம் உள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1040.

47. Accountant, British Citizen, 28 age, 5'5" tall, is looking for a well educated groom. Ref: 1102.

48. Nowagien Citizen, 27 age, 5'4" tall, is looking for a suitable groom. Ref: 1104.

49. Royal Scottish Bank Team Leader ஆக இருக்கும் 28 வயது, 5'5" உயரம் கொண்ட மணமகள் Accountant அல்லது IT Qualified மணமகனைத் தேடுகின்றார். Ref: 871

50. British Citizen, 34 age, 5'2" tall, working as a Information Technology, seeks a well educated & employed groom. Ref: 1076.

51. Australian PR, Accountant, 30 age, 5'10" tall, is looking for a educated groom. Ref: 1120.

52. Living in Sri Lanka, a widow, 36 age, 5'3" tall, seeks a matching groom in UK or Sri Lanka. Ref: 1166

53. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற, Case Progress Officer ஆக Majestic Courtஇல் வேலை செய்யும் வயது 28, உயரம் 5.2" கொண்ட பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 963.

54. British Citizen, Age 21, Tall 5.5" LLB finished, Looking for a well educated groom. It's better if the groom was born in UK or brought up in UK. Ref: 992.

55. Age 26, Tall 5.3", Finished her MA in French and English, is seeking an educated groom in UK. Ref: 897

56. UK PR, பல்கலைக் கழகத்தில் மூன்றாவது வருடம் படித்துக் கொண்டிருக்கும், வயது 22, உயரம் 5" பெண்ணுக்கு நன்கு படித்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1008

57. Working in a Audit Firm in Sri Lanka, Age 29, Tall 5.3" is looking for a Roman Catholic groom age between 30 – 36. Ref: 913.

58. இலங்கையில் வசிக்கும் வயது 21, உயரம் 5.2" உடைய பெண்ணுக்கு இலண்டன் அல்லது கனடா குடியுரிமை பெற்ற தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 956.

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# எனது நாளாந்தப் பணி

எனது பெயர் சுந்தரி. நான் எனது கணவருடனும் இரண்டு பிள்ளைகளுடனும் இலண்டன் மாநகரில் வாழ்ந்து வருகின்றேன். கணவர் கடை வைத்திருப்பவர். நான் காலையில் கண் விழிப்பதற்கு முன்பே எழுந்து கடை திறப்பதற்கு போய்விடுவார். இவர் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக கடை நடத்துகிறார். ஆனால் நான் ஐந்து தடைவகள் கூட கடைப் பக்கம் போனதில்லை.

எனக்கும் வீட்டில் நிறையவே வேலைகள் உண்டு. காலை எழுந்து பிள்ளைகளை குளிக்க விட்டு, அவர்களை பாடசாலைக்கு தயார் செய்து பக்கத்து வீதியிலுள்ள பாடசாலைக்கு எனது கணவர் எனக்காக வேண்டி தந்த வசதியான வாகனத்தில் (4 Wheel Drive) பிள்ளைகளை ஏற்றிப் போய் இறக்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு நான் ஒருநாளும் மதிய உணவு(Pack Lunch) கொடுத்து விடுவதில்லை. காரணம் அவர்கள் இந்த நாட்டில் பிறந்தவர்கள். ஆங்கில உணவைத்தான் அவர்கள் பழக வேண்டும். அதற்காக அவர்கள் மதிய உணவிற்காக மாதம் தோறும் பணத்தை கட்டிவிடுவேன்.

காலை பிள்ளைகளை பாடசாலையில் இறக்கி விட்டால் அவர்கள் தானாகப் போய் வரிசையில் நிற்பார்கள். அங்கு என்னைப் போலவே வருகின்ற ஐந்தாறு தமிழ் தாய்மார்களும் உண்டு. அவர்களோடு நானும் ஒன்று கூடிவிடுவேன். பிறகென்ன? ஆண்களைப் போல் எங்களுக்கு அரசியலெல்லாம் வராது. ஆனால் நாங்கள் பேசுவதெல்லாம் மிகவும் சுவாரஸ்யமானவை.

அதாவது எங்களோடு ஒட்டாத சில தமிழ் தாய்மார்களும் உண்டு. அவர்களைப் பற்றியெல்லாம் துப்பறிந்து அவர்களின் சரித்திரத்தை பற்றியெல்லாம் கதைப்போம். அவர்கள் பிள்ளைகள் எப்படி படிப்பார்களா? அவர்கள் பிள்ளைகளை எங்கே ரியூசனுக்கு விடுகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் அறிந்து கொள்வதுண்டு.

எங்கள் பிள்ளைகளின் தரம், அவர்களின் கற்கை செயற்பாடுகள் பற்றியும் பேசுவோம். ஆனால் எங்கள் எல்லோருக்கும் (ஆளாளுக்கு) தெரியும் ஒவ்வொருவரும் பிள்ளைகள் விசயத்தை குறைக்க வேண்டிய இடத்தில் குறைத்து, கூட்ட வேண்டியவற்றை கூட்டி மறைக்க வேண்டியவற்றை மறைத்துத்தான் பேசுவதென்று. இருந்தாலும் நான் நிறைய விசயங்களை அவர்களிடமிருந்து பிடுங்கி விடுவேன். (அவர்களும் அப்படித்தான் நினைப்பார்களோ தெரியும்).

பிள்ளைகள் வகுப்பறைக்கு போனதும் வெளியில் வந்து ஓரிரு மணி நேரம் சில விசயங்களையே மாற்றி மாற்றி வெவ்வேறு கோணங்களில் பேசுவோம். அதிலும் அடுத்தவர்களைப் பற்றித்தான் தாராளமாக கதைப்போம். இப்படியே பேசிப் பேசி பிரியும் போது (மனமில்லாமல்தான்) ஒரு பதினொரு மணியாகிவிடும்.

வீட்டுக்குப்போனால் தனிமை வாட்டும். இருந்தாலும் தொலைபேசி (Talk Talk) இருக்கும் போது கவலைப்பட என்ன இருக்கிறது. எனக்கு பிள்ளைகளை ரியூசனுக்கு விடும் இடங்களிலும் சந்தித்து பழகும் வேறு பல தமிழ் தாய்மார்களுமுண்டு.

ஆக தொலைபேசி எடுத்து மாறிமாறி காலையில் நண்பர்களுடன் கதைத்த கதைகளில் 'கற்றுக் கொண்ட பாடங்கள்' பற்றி அலசி ஆராய்ந்து கதைத்ததில் பிடிக்காதவற்றுக்கு கொஞ்சம் ஆடம்பரமும் செய்து இவர்களிடத்தில் புட்டு புட்டு வைப்பேன். மேலும் என்னை கொஞ்சம் விசயம் தெரிந்தவர் மாதிரி காட்டித்தான் கதைப்பேன். அப்பொழுதுதான் இவர்கள் ஆ ஆவென்று கேட்பார்கள்.

இப்படியே மாறி மாறி கதைக்க பிற்பகல் மூன்று மணியை நெருங்கும். பிள்ளைகளை எடுக்கும் நேரம் ஆக பாடசாலை போய் அவர்களை எடுத்து வந்து தெருவில் நின்று காலையில் தொலைபேசியில் 'கற்றுக் கொண்ட பாடங்கள்' இந்த நண்பர்களுடன் பேசுவேன். இப்பொழுது மணி நாலு நாலரை வந்துவிடும்.

அனேகமாக என் பிள்ளைகளுக்கு ஒவ்வொரு நாளும் மாலை ரியூசன் உண்டு. எல்லாம் ஐந்து மணிக்குப் பின்புதான். ஆக பிள்ளைகள் காரில் ஏறினால் தயாராக இருக்கும் உருளைக்கிழங்கு பொரியலையும் குளிர் பானத்தையும் கொடுத்து ரியூசனுக்கு கூட்டிப் போவேன். சில இடங்களில் ரியூசனுக்கு பக்கத்தில் தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் பிள்ளைகளை இறக்கியவுடன் அவர்கள் வீட்டில் போய் ஊர்க் கதைகள் கதைத்து விட்டு சரியான நேரம் பார்த்து பிள்ளைகளை வந்து எடுப்பேன்.

வீட்டுக்கு வர எப்படியும் எட்டு மணியாகி விடும். Pizza ஒன்றை எடுத்து oven இல் தள்ளி விட்டு பிள்ளைகளை வீட்டு வேலை (School Home Work) செய்ய பணித்து விட்டு அன்று காலையில் யார் யார் தொலைபேசியில தட்டுப்படாமல் இருந்தார்களோ அவர்களுடன் தொடர்பு கொண்டு பேசுவேன். பேசிப் பேசியே பிள்ளைகள் சாப்பாட்டையும் முடித்து படுக்கைக்கு அனுப்பிவிடுவேன்.

சரியாக ஒன்பதரைக்கு 'தென்றல்' தொடர் நாடகம் தொடங்க எதாவது பொய் சொல்லி தொடர்பை துண்டித்துவிட்டு நாடகம் பார்ப்பேன். சில வேளைகளில் பார்த்தபடியே சோபாவில் உறங்கியும் விடுவேன். (சரியான அலுப்புத் தானே) எனது அன்புக் கணவர் சரியாக பத்தரைக்கு Take Away உடன் வீட்டுக்கு வருவார். அவர் குளித்து வர முதலே நான் சாப்பாட்டை அவிழ்த்து விடுவேன்.

படுக்கைக்கு தயாராக களைப்பில்லாத கணவர் சற்று சில்மிசத்தில் இறங்குவார். பகல் முழுதும் நூலாய் தேய்ந்து அலுப்போடு இருக்க உறக்கம் தூக்கும். ஒரு சிலிர்ப்பொன்று சிலிர்ப்புவேன் பேசாமல் ஒதுங்கி விடுவார். உண்ட களை தொண்டருக்கும் உண்டல்லவா? படுப்பதுதான் தெரியும். காலை கணவர் கடைக்கு புறப்படும் போது வாசற் கதவை ஒரு அடியடித்து சாத்துவார். (கோபத்திலாக்கும்) அப்போதுதான் கண்கள் மெல்லத் திறக்கும்.

*- வ. கணேஷ்*

# பலவுமிழந்த என் இனமே

பலமிழந்து நிலமிழந்து
பொருளழிந்து நிலையிழந்து
உரமிழந்து உயிரிழிந்து
பரிதவிக்கும் என் இனமே

பரிதவித்து பதை பதைத்து
உதைபட்டு வதைபட்டு
உயிரோடு புதைபட்டு
துணையற்ற என் இனமே


துணையற்று துயருற்று
துடிதுடித்து அடிபட்டு
கலைபட்டு எரியுற்று
கதியற்ற என் இனமே

கதியற்று உணவற்று
தெருவுழன்று கருவழிந்து
உருக்குலைந்து செருக்கழிந்து
பலவுமிழந்த என் இனமே.

துயர் நீக்கி துரோகம் தவிர்த்து
வேறுபாடு களைந்து ஒற்றுமைப்பட்டு
உணர்வெடுத்து உரிமை பெற
கிழர்ந்தெழு என் இனமே.

**– வேல் தர்மா**

# வீரவணக்கம்



தொடரும் 6ம் ஆண்டு

## நினைவலைகள்

எல்லை காத்த மாவீரன்

**வீரப்பன்**

**(முனுசாமி வீரப்பன்)**

[இந்திய அரச கூலிப்படைகளுடனான நேரடி மோதலில் வீரச் சாவைத் தழுவிக் கொண்டார்]

வீரச்சாவு
**18.10.2004**

*- ஒரு பேப்பர்*

# அபத்தமான சமகாலம்!



ஒரு திரைப்படம், ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் பெரும்பான்மையை பித்துப்பிடிக்க வைத்து மனப்பிறழ்வு மந்தைகளாக ஆக்க முடியும் என்பதைக் காணும் போது அந்த ஊடகத்தின் அசுர பலத்தை மீண்டும் வியப்பதா அல்லது நாம் எவ்வளவு பலவீனமாவர்களாக இருக்கிறோம் என்பதற்காக வேதனைப்படுவதா என்று தெரியவில்லை. 'எந்திரன்' திரைப்பட வெளியீடு குறித்து அதன் ரசிகர்கள் நடத்தின கோமாளித்தனங்களை தன்னுடைய வணிகத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளும் சாமர்த்தியத்தோடு (இதுவே எதிர்மறையானதாகவும் மாற வாய்ப்பிருக்கிறது) இதை எழுதுகிறேன்.

அலகு குத்தல்கள், பால் குடங்கள், மண்டி போட்டு மலையேறுதல்கள், படப்பெட்டிக்கு பூஜை புனஸ்காரங்கள், கட் அவுட்டிற்கு பாலாபிஷேகங்கள்.. இவ்வளவும் எதற்காக? தன்னுடைய பிரியமான நடிகரின் படம் வெற்றிகரமாக ஓடுவதற்காம். இத்தனையையும் கள்ள மௌனத்தோடு கவனிக்கிற அதன் மூலம் இந்தக் கோணங்கித்தனங்களை மறைமுகமாக ஊக்குவிக்கிற ரஜினியின் இமயமலை சுற்றுலா 'ஆன்மீகம்' எத்தனை போலித்தனமானதோ, அதே அளவிற்கு இந்த நிகழ்வுகளும் அபத்தமானவை. எப்படி இவற்றை செய்வதற்கு அவர்களுக்கு எல்லா விதமான உரிமைகளும் இருக்கிறதே?, அதே அளவிற்கு இதை ஆட்சேபிக்கிற உரிமை துரதிர்ஷ்டவசமாக அங்கு வாழ்கிறவர்களுக்கும் உண்டு. அதன் விளைவே இந்தப் பதிவு.

எல்லா தனிமனிதர்களுமே தனக்கேயென்று இருக்க விரும்புகிற 'சுய அடையாளத்தை' தேடி அலைகிறவர்கள் தான். அதை நேர்மையான உழைப்பின் மூலம் பெற இயலாதவர்கள், சமூகத்தால் வெற்றிகரமானவர்கள் என்று சுட்டிக் காட்டப்படுவர்களின் அடையாளங்களைச் சார்ந்து நின்று அதன் மூலம் தன்னுடைய அடையாளத்தைப் பெற முயல்வது. சுருக்கமாகச் சொன்னால் இது ஒரு குறுக்குவழி. இதன் புறவயமான வடிவங்கள்தான் ரசிகர் மன்றங்கள், அரசியல் பேரவைகள், தொண்டர் படைகள், முதலியவை.

'நெரிசலில் சிக்கி அவதிப்படக் கூடாதென்பதற்காக' தன் ரசிகர்களை தன் மகன் திருமணத்திற்கு வரவேண்டாம் என்று கரிசனத்துடன் அறிக்கை கொடுத்த ரஜினி, இப்படி முதல் காட்சிக்காக பெருங்கூட்டத்தில் சிக்கி அவதிப்படும் ரசிகர்களுக்காக 'ஏன் இப்படி அவதிப்படுகிறீர்கள். எப்படியும் ஒருவாரத்தில் இதன் கள்ள குறுந்தகடு வெளிவரப்போகிறது. அதை வாங்கி வீட்டிலேயே சௌகரியமாக அமர்ந்து பாருங்கள்' என்று ஏன் அறிக்கை விடவில்லை இவர்களில் யாராவது யோசிப்பார்களா? தாம் ரசிக்கும் நடிகனை அரங்கிலேயே கழற்றி விட்டு வராமல் தம் தோளிலேயே சுமந்து கொண்டு 'வீட்டுத் திருமணத்திற்கு' அழைக்கவில்லையே என்று ரசிகன் வருத்தப்படுகிற கொடுமைகளெல்லாம் தமிழ்நாட்டில்தான் நிகழும்.

இவர்கள் செய்வது மகா அபத்தங்களென்று இவர்களில் பெரும்பான்மையானவர்களுக்கே தெரியும். 'இரவல் அடையாளத்தைத்' தாண்டி ஏதாவது ஆதாயம் கருதியோ, சம்பந்தப்பட்ட நடிகர்கள் அல்லது படத்தயாரிப்பாளர்களின் 'ஏற்பாடுகள்' மூலமே இவை நிகழ்கின்றன. எப்போது வேண்டுமானாலும் இதிலிருந்து விலகக் கூடிய சாமர்த்தியக்காரர்களை விட்டுவிடலாம். ஆனால் தன்னுடைய அன்றாட உழைப்பிலிருந்து கிடைக்கும் சொற்ப வருமானத்தை அறியாமை காரணமாக வீணடிப்பவர்கள் குறித்தும் அதிகாரத்திற்கெதிராக திரையில் வீராவேசமாக முழங்கும் தன் தலைவன், யதார்த்த வாழ்க்கையிலும் அதே போல் இருப்பான் என்கிற கனவுடன் அவனை அரியணையில் அமர்த்தத் துடிக்கும் அப்பாவிகளைக் குறித்துத்தான் நம்முடைய கவலை.

இந்த நிகழ்ச்சியை கூடவே பார்த்துக் கொண்டிருந்த நண்பர், 'பார்த்தீர்களா, உலகமெங்கிலும் எப்படி வரவேற்பு?' என்றார் நமட்டுச் சிரிப்புடன். அதுசரி. 'இந்தப் பேனா எல்லா உலக மொழிகளிலும் எழுதும்' என்கிற தந்திரமான விளம்பர வாசகங்களின் மூலம் தம் பொருளை விற்கும் வணிகர்களின் சாமர்த்தியத்திற்கு இணையானதுதான் இந்த ஊதிப் பெருக்கல்கள். 'ஆங்கிலத்தில் பேசினாலே அவன் அறிவாளி' எனக் கருதும் பொதுப்புத்தியுடன் கூடிய முட்டாள்கள் உலகெங்கிலும் பரவியிருப்பது போல், தமிழர்களும் உலகெங்கிலும் பரவியிருப்பதும் அவர்கள் இந்தப்படத்தை ஆரவாரத்துடன் வரவேற்பதிலும் அப்படியில்லாத இடங்களிலும் நான்கைந்து பேரை கேமரா முன் அடைசலாக நிற்க வைத்து அவர்களின் கூக்குரல்களின் மூலம் ஏதோ அந்த நகரமே இந்தப்படத்தைக் காண்பதற்காக காத்திருப்பது போன்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்தும் ஊடகத்தின் போலித்தந்திரங்களைக் கண்டு மந்தைகள் வேண்டுமானாலும் மயங்கலாம். மனச்சாட்சியுள்ளவர்கள் அல்ல.

உங்களை மாதிரி ஒரு சில பேர்கள் மூலையில் அமர்ந்து திட்டிக் கொண்டிருக்கலாம். படம் எப்படி ஓடுகிறது பார்த்தீர்களா? என்றார் அதே நண்பர். உண்மைதான். சென்னை நகரின் திரையரங்குகளில் 80 சதவீத அரங்குகளில் இந்தத் திரைப்படம்தான்.

தமக்குள்ள பலத்தின் மூலம் சக போட்டியாளர்களின் காலை உடைத்து அறையில் பூட்டி வைத்து விட்டு தான் மாத்திரமே ஓட்டப் பந்தயத்தில் ஓடி 'வெற்றி வெற்றி' என ஒருவன் முழங்குவானாயின் அவனை இந்த உலகம் 'வீரன்' என மாலையிட்டு கொண்டாடுமா? அல்லது அவனின் அயோக்கியத் தனத்தைக் கண்டு காறித் துப்புமா? சென்னையில் மாத்திரமல்லாமல் தமிழகத்தின் பெரும்பாலான நகரங்களிலும் இதே நிலைதான் என அறிகிறேன். இந்த அசுரத்தனமான போட்டியிலிருந்து தாமாக விலகிப் போனவர்கள் சொற்பமிருக்க, அதிகாரத்தைக் கொண்டு மிரட்டி விலக்கப்பட்டவர்களும் அடித்து ஓடுக்கப்பட்டவர்களும் எத்தனை பேரோ?

ஓரளவிற்கு மனச்சாட்சியுடன் நியாயமாகப் பேசுபவர்கள் என கருதக்கூடிய பிரகாஷ்ராஜ், சேரன் என்று திரையுலகில் உள்ளவர்களே மேற்குறிப்பிட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சியில் இத்திரைப்படத்தை விரும்பியோ விரும்பாமலோ கொண்டாடுவதைக் காண சற்று வேதனையாகவே இருக்கிறது. ஒரு மாநிலத்தின் அனைத்து மக்களுக்கும் பொதுவாக இருக்க வேண்டிய, திரைப்படத்தின் சிறப்புக் காட்சிக்காக அழைக்கப்பட்ட மாநில முதல்வர் சொல்கிறார். 'இந்த தயாரிப்பு நிறுவனத்தைப் பாராட்டுவதென்பது என்னையே பாராட்டிக் கொள்வதாகும்'. ஆக.. இந்த கூட்டுக் களவாணித்தனத்திற்கு தானும் ஓர் உடந்தை என வெளிப்படையாகவே வாக்கு மூலம் கொடுத்த அவரின் நேர்மையை எவ்வளவு பாராட்டினாலும் தகும். தமிழ்ப் பெயரில் தலைப்பு வைத்தற்காக இதற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டதையும் முதல்வர் தெரிவிக்கிறார். 'திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் வைத்தால் தமிழ் வளரும்' என்ற அரிய யோசனையை செயல்படுத்தும் முதல்வர், அது தரமான உள்ளடக்கத்துடன், தமிழ் கலாசாரத்தை உள்ளடக்கிய படங்களுக்கு மாத்திரமே' என்பதையும் இணைத்திருந்தால் எத்தனை ஆரோக்கியமானதொன்றாக இருந்திருக்கும்? சிறு முதலீட்டுத் தயாரிப்பாளர் பயன்பெற வேண்டிய இந்தச் சலுகையையும் பலநூறு கோடிக் கணக்கில் செலவு செய்யும் தயாரிப்பாளர்களும் உள்ளே புகுந்து பெற்றுக் கொள்வது எத்தனை பெரிய அயோக்கியத்தனம்?. அரசியல் காரணங்களுக்காக என்றாலும் ஒரு ரூபாய்க்கு வழங்கப்படும் அரிசியை பில்கேட்ஸ் வரிசையில் நின்று வாங்கினால் 'அவருக்கும் இந்தச் சலுகை உண்டென்றால் அதைப் பெறுவதில் என்ன தவறு' என்போமா? அல்லது தார்மீக ரீதியான உணர்வுடன் இந்தச் சலுகையை அவர் மறுத்தால் அவரைப் பாராட்டாமல் இருப்போமா?

'ஹாலிவுட் தரத்திற்கு நிகரானதாக அதையும் தாண்டி பெரும் பொருட் செலவில் இத் திரைப்படம் உருவாக்கப்பட்டிருக்கிறது' என்பது ரசிகர்கள் மட்டுமில்லாமல் பொதுத் திரைப்படப் பார்வையாளர்களின் உற்சாக கூக்குரலாகவும் இருக்கிறது. வெறும் நுட்பம்தான் சினிமாவா? என்ற கேள்வியை அவர்கள் முன்வைக்கிறேன். வைரம் பதிக்கப்பட்ட கோடிக்கணக்கான மதிப்புள்ள பேனாவில் எழுதியதாலேயே ஒரு சிறுகதையோ, புதினமோ பாராட்டப்பட வேண்டுமென்பது எத்தனை பெரிய நகைச்சுவையாக இருக்கும்? பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கப்பட்டுவிட்ட ஹாலிவுட் படங்களின் நுட்பங்களை, மக்களைச் சுரண்டி குவிக்கப்பட்ட பணத்தின் மூலம் நாம் சமகாலத்தில் அதே ஹாலிவுட் நுட்பவியலாளர்களைக் கொண்டே ஹாலிவுட்டின் அபத்த நகல்களாக உருவாக்கி விட்டு நாமே அதை சிலாகித்துக் கொண்டால் எப்படி? மேலும் எந்த ஹாலிவுட் படத்தில் பல நூறு கண்ணாடி பாட்டில்களை அடுக்கி விட்டு 'இரண்டு பெருசுகள்' டூயட் பாடும் அபத்தங்களெல்லாம் நடக்கிறது? 'யாரும் இதுவரை படப்பிடிப்பு நடத்தியிராத இடங்களை இதற்காக தேடிச் சென்றார்களாம்'. இதெல்லாம் ஒரு பெருமையா? இதுவரை யாரும் படப்பிடிப்பு நடத்தியிராத சேரிகளும் மூத்திரச் சந்துகளும் சென்னையிலேயே நிறைய இருக்கின்றனவே? ஷங்கர் இதை அறிய மாட்டாரா?

## ஹாலிவுட் நுட்பங்களைக் கொண்டு உள்ளூர் அபத்தங்களை நிரப்பி எடுப்பது நல்ல சினிமாவா? அல்லது நமது கலாசாரத்தை, பண்பாட்டை, சமூக அவலங்களை, நிகழ்வுகளை, ஆன்மாவை ஊடுருவிச் செல்லுமாறு எடுப்பது நல்ல சினிமாவா?

நான் பொழுதுபோக்கு சினிமாவின் எதிரியல்ல. கலையின் அடிப்படையே பொழுதுபோக்குதல்தான். சினிமாவைக் கொண்டு பொழுதைப் போக்குவதல்ல. அரைத்த மாவையே அரைக்காமல், வணிகக் காரணங்களுக்காக நாயக பிம்பங்களையும் வன்முறையையும் ஆபாசங்களையும் ஊதிப் பெருக்காமல் சுய சிந்தனைகளுடன் ஆரோக்கியமான உள்ளடக்கங்களுடன் கூடிய பொழுதுபோக்கு சினிமாக்களை நான் ஆதரிக்கிறேன். சர்வதேச அரங்குகளில் விருதுகளை குவிக்கும் உயர்ந்த தரமுள்ள திரைப்படங்களைக் கூட நான் தமிழில் இப்போது எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவ்வாறான திசையில் தமிழ் சினிமா பயணிக்கத் துவங்கும் போது, அந்த நம்பிக்கை துளிர்க்கத் துவங்கும் போது அதில் பின்னடைவை ஏற்படுத்துகிற, கட் அவுட்டிற்கு பாலாபிஷேகம் செய்கிற, அலகு குத்திக் கொள்கிற மூடநம்பிக்கைகளுக்கு நம்மைத் தூண்டுகிற, நம்மை அந்த ஆட்டு மந்தை நிலையிலேயே வைத்து அதன் மூலம் நம் பணத்தையும் சிந்தனையும் பிடுங்கிக் கொள்கிற வணிகத்தையே ஒட்டுமொத்த குறிக்கோளாகக் கொண்டிருக்கிற சூழலைத்தான் நான் வெறுக்கிறேன்.

ஹாலிவுட் நுட்பங்களைக் கொண்டு உள்ளூர் அபத்தங்களை நிரப்பி எடுப்பது நல்ல சினிமாவா? அல்லது நமது கலாசாரத்தை, பண்பாட்டை, இலக்கியத்தை, சமூக அவலங்களை, நிகழ்வுகளை, நுண்ணுணர்வுகளை மீட்டெடுக்கக்கூடிய, ஆன்மாவை ஊடுருவிச் செல்லுமாறு எடுப்பது நல்ல சினிமாவா? விவசாயிகளின் பிரச்சினைகளை ஊடகங்களின் நாய்ச்சண்டைகளை பார்வையாளர்களின் முன்வைப்பது நல்ல சினிமாவா? மனித இயந்திரம் உயிருள்ள பெண்ணைக் காதலிப்பதும் அதன் மூலமான நுட்ப பிரம்மாண்டங்களையும் அசட்டு நகைச்சுவைகளையும் கொண்டது நல்ல சினிமாவா? சினிமா ஆர்வலர்களின் முன்பு இதையெல்லாம் ஒரு கேள்வியாக முன்வைக்கிறேன்.

*- அரோஷ் கண்ணன்*


NAG & Co.
SOLICITORS

✓ CRIME
✓ CONVEYANCING
✓ MATRIMONIAL
✓ IMMIGRATION
✓ TRAFFIC MATTERS
✓ LANDLORD & TENANTS
✓ POLICE STATION MATTERS
✓ EMPLOYMENT MATTERS
✓ WORK PERMITS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Email : nagandco@yahoo.co.uk
Unit 3 Holles House, Myattsfield south, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

# (வ) குவாட்டர் கட்டிங்

## திரை விமர்சனம்



*நடிகர்கள்: சரண், சிவா, லேகா*

*இசை: ஜி.வி.பிரகாஷ்*

*ஒளிப்பதிவு: நிரவ் ஷா*

*எடிட்டர்: அன்டனி*

*இயக்கம்: புஷ்கர்-காயத்திரி*

ஒரு முன்னிரவில் சென்னைக்கு வருகிறார் சுறா (மிர்ச்சி சிவா). அவரை வரவேற்கிறார், சுறாவின் வருங்கால மாமா சரண். விடிகாலை, சுறா, சவுதிக்கு பறக்க போகிறார் (சவுதியில் வேலை). இருப்பதோ இன்று ஒரு இரவு. சவுதியில் மதுவுக்கு தடை. கடைசியாக தாய்த்தமிழ்நாட்டில் ஒரு குவாட்டர் அடிக்க ஆசைப்படுகிறார் .(ஆஹா,என்னே ஒரு நாட்டுப்பற்று) . ஆனால் தேர்தல் காரணமாக டாஸ்மாக்குகள் மூடல். எப்படியாவது ஒரு குவாட்டர் தேத்திவிட வேண்டுமென்று சிவாவும், சரணும் குட்டிக்கரணம் அடிப்பதே படம். கூடவே ஜான் விஜய், மற்றும் இன்னபிற ஓரம் போ நடிகர்கள்.

Harold & Kumar : Going to white castle (2004) என்றொரு ஆங்கில நகைச்சுவை படத்தின் ஒருவரியை எடுத்திருக்கிறார்கள். அங்கு burger. இங்கு குவாட்டர். ஆனால் அந்த படத்தின் தழுவல் நிச்சயமாய் இல்லை. கூடவே ஒரே இரவு. சில சம்பவங்கள். இரண்டு பேர் (சம்பவங்களில் பங்கு பெறும் மற்றவர்களும் இருக்கிறார்கள்) எனும் போது காட்சிகளை விட, வசனங்கள் மீது அதிகம் செலுத்தியிருக்கிறார்கள். சிரித்து மாளவில்லை. எல்லாவற்றையும் கலாய்த்து தள்ளுகிறார்கள்.

பாவம் விஜய். சுறா என்ற பெயரை வைத்துஅலும்பு பண்ணுகிறார்கள். இரண்டு பெரும் அட்டகாசம். அதுவும் சிவா, சான்சே இல்லை. கூடவே திரும்பத்திரும்ப பெயிலாகிக்கொண்டே இருக்கும் லேகா. இரண்டாம் பாதியில் இந்த கலாட்டாவில் லேகாவும் சேர்ந்து கொள்கிறார். (நல்லவேளை காதல் எல்லாம் முளைக்கவில்லை, டூயட்டுகளும் இல்லை). கூடவே யாருக்கும் யார்மீதும் பெரும் ஒட்டுதல், அன்பு ஏதுமின்றி இருப்பது நல்லா இருக்கு. படம் முழுக்க சம்பவங்கள். இறப்பு, ஆவி, சுயேச்சை வேட்பாளர், எஸ் ஐ, கோவில், சீட்டாட்டம், பலான இடம், நாய்கள், ஜெயில், கார் சேசிங், என பற்பல.

மேலும் படம் முழுக்க சோடியம் தெருவிளக்கின் மஞ்சள் ஒளி நிறத்திலேயே படம் எடுத்திருப்பது சிறப்பு. கூடவே ஜி.வி. பிரகாஷின் பின்னணி இசை அருமை ஆண்டனியும் படத்தொகுப்பும் சிறப்பு. மேலும் படம் முழுக்க கலை இயக்குனரின் உழைப்பு. சென்னை நகர சுவர்களில் வரையப்பட்டிருக்கும் ஓவியங்களையும் படத்தோடு காட்சியோடு இணைத்து ஓடவிட்டிருக்கிறார்கள். புஷ்கர் காயத்ரி இம்முறையும் கலக்கியிருக்கிறார்கள்.

சிவாவுக்கு பொருத்தமான வேடம். தமிழ்ப்படம் போலவே இதிலும் கலய்க்கும் கேரக்டர்.விஜய் ரசிகர் என்ற போர்வையில் தன் நெஞ்சில் சுறா என பச்சை குத்திக்கொண்டு இவர் பண்ணும் லூட்டிகள் கலக்கல் ரகம். எஸ்.பி.பி சரண் காமெடி நடிப்பில் சிவாவுக்கு இணையாக அதகளம் பண்ணுகிறார்.

வசனங்களை கூர்ந்து கவனித்தால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். சட் சட் என கட்சி மாறும் அரசியல்வாதிகள் போல் ஷாட் டக் டக் என மாறுகிறது ஹிரோயின் தற்கொலைக்கு முயல்வதைக்கூட காமெடியாக சொல்லி இருப்பது படத்துக்கு பிளஸ்.

படத்தில்4பாடல்காட்சிகள் வந்தாலும் நான்கிலும் தனது ரசனையை காண்பித்து அனைத்து பாடல்களையும் அதே இரவு ஷேடில் எடுத்து இருக்கிறார்.ஒரு பாடல் காட்சியில் 1/4 என்ற எண்ணை (குவாட்டர்) எப்படி எல்லாம் பயன்படுத்த முடியும் என காட்சிப்படுத்தி பிரம்மிக்க வைக்கிறார்.அவர் அபாரமான க்ரியேட்டிவ் மைண்ட் உள்ளவர் என்பதற்கு அந்த ஒரு பாடல் காட்சியே போதும்.

தமிழ் சினிமாவில் பாம்பை வைத்து பயப்படும் காட்சியும்,நாய் துரத்தும் காமெடியும் எப்போதும் சிரஞ்சீவித்தனம் பெற்றவை.இயக்குனர் இந்தப்படத்தில் நாய் துரத்தும் காமெடியை நம்பி இருக்கிறார்.

படத்தை பார்த்து விமர்சகர்கள் படத்தில் கதை இல்லை என்று சொல்வார்கள் என இயக்குனருக்கு க்கு நன்றாகவே தெரிந்திருக்கிறது. அதனால்தான் அவர்களுக்கு பதிலடி கொடுப்பது மாதிரி ஒரு டயலாக் வைத்திருக்கிறார். 'இதுல மெசேஜ் என்ன' 'ஏண்டா மெசேஜ் மெசேஜ்னு அலையறீங்க? '.

இயக்குனரை சில விஷயங்களுக்காக தாராளமாக பாராட்டலாம். படம் முழுவதும் ரெண்டே கால் மணி நேரம் ஒரே ஒரு இரவில் நடக்கும்படி திரைக்கதை அமைத்தது. அடுத்தது வழக்கமாக தமிழ்ப்படங்களில் வரும் கோகக் காட்சிகள் எதுவும் இல்லாமல் காமெடி என்ற ஒரே ஒரு இலக்கை நோக்கி கதை பயணிக்க வைத்தது. மற்றும் ஒளிப்பதிவில் ஜால வித்தை எல்லாம் செய்யாமல் இயல்பாகவே கதை எவ்வளவு அனுமதிக்குமோ அந்த அளவு மட்டும் மொத்த படத்தையும் எடுத்த துணிச்சல்.

படத்தின் குறை என்னவென்றால் கொஞ்சம் நீளம், சில காட்சிகளின் தொய்வு. மேலும் குடியை பற்றி தெரியாதவர்கள், அதன் அருமை புரியாதவர்களுக்கு, ஒழுக்க சீலர்களுக்கு, இந்த படம் கடுப்பை உண்டாக்கும் போல. ஒரு குவாட்டருக்கா இவ்ளோ பிரச்சனை என்று சரண் கேட்கும்போது சிவா சொல்வார். இது ஒரு ஸ்ட்ராங்கான எமோஷன் என்று. அது உங்களுக்கு புரிந்தால் அல்லது குடித்தல் அவரவர் விருப்பம் சார்ந்தது என்பது உங்கள் கருத்தானால் இப்படத்திற்கு செல்லலாம்.

*மொத்தத்தில் இப்படத்தை குடும்பத்துடன் பாக்கவே முடியாது. புதுமை விரும்பிகள்,குடி மகன்கள் மட்டும் பாக்கலாம்.*

*- அம்பலவாயன்*

# சினித்துளி

## சீமானுக்குக் காத்திருக்கும் புது சினிமா !



சிறை சென்றால் என்ன? அண்ணா உனக்காக ஒரு கேரக்டர் காத்திருக்கு. நீ வரும்வரை அதில் நடிக்கப்போவது யாரும் இல்லை என்று 'தில்'லோடு காத்திருக்கிறார் ஐந்து கோவிலான்.பாரதிராஜாவிடம் பல வருடங்களாக உதவி இயக்குனராக இருந்தவர், தற்போது 'கலிங்கத்துப்பரணி' என்ற படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார்.இயக்குனரான ஐந்து கோவிலானும் சீமானின் நாம் தமிழர் இயக்கத்தில் முக்கிய பொறுப்பில் இருக்கிறார்.

திரைப்படத்தில் சீமானுக்கென்றே குறிப்பிட்ட பாத்திரம் அவருக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளதாம். இன்னும் ஒரு வருடம் ஆனாலும் அவர் வந்து நடிப்பார். அது வரைக்கும் காத்திருப்போம் என்று தைரியமாக காத்திருக்கிறார் இயக்குனர்.

## விக்ரமின் தெய்வமகன் !



மதராசபட்டினம் இயக்குனர் விஜய் அடுத்து இயக்கும் படம் 'தெய்வமகன்'. இதில் விக்ரம் ஹிரோ. ஹிரோயின் அனுஷ்கா. விஜய் சூர்யாவை தொடர்ந்து முதல் விக்ரமுடன் நடிக்கிறார் அனுஷ்கா. தன் ஏழு வயது மகளுக்காக போராடும் ஒரு தந்தையின் கதையாக இது இருக்குமாம். மன நோயாளியாக நடிக்கும் விக்ரமுக்கு பக்கபலமாக இருக்கும் வழக்கறிஞர் கதாபாத்திரத்தில் அனுஷ்கா கலக்க இருக்கிறாராம். சமீபமாக விக்ரமுக்கு பெரிய படங்கள் கைகொடுக்காமல் போனாலும் தெய்வமகன் கைவிடாமல் இருக்கும் என்றே நாமும் நம்புவோம்.

## மணிரத்தினத்தின் அடுத்த படம் !



இதுவரை புராண கதைகளை மையமாக வைத்து படம் இயக்கிவந்த மணிரத்தினம் அடுத்ததாக தமிழ் இலக்கியம் சார்ந்து படம் எடுக்கபோகிறாராம். தமிழுக்கு புதினம் என்ற முறையில் சிறந்த மணிமகுடமாக திகழ்வது கல்கியின் 'பொன்னியின் செல்வன்'. இந்தப் புகழ் பெற்ற நாவலைத் தழுவி படம் எடுக்கப்போகிறாராம் மணிரத்தினம். இதில் கமலஹாசன் அல்லது விக்ரம் போன்றவர்கள் நடிக்கலாம் என்றும் கூறப்படுகிறது.சோழர்களின் சிறப்பினை கூறும் பொன்னியின் செல்வன் திரை வடிவமாக்கப்பட்டால் சந்தோஷம்தான்.

ஆனால் மணிரத்தினத்தின் படங்களில் வசனங்கள் குறைவாக இடம் பெறுவது தான் வழக்கம். பொன்னியின் செல்வனை தமிழ் வசனங்களின் தங்கச்சுரங்கம். எப்படி எடுப்பாரோ? ஒருவேளை ரத்தினச் சுருக்கமாக எடுப்பாரோ...!

## ஆங்கிலத்திலும் எந்திரன் !



வசூல் ரீதியாக இந்தியாவின் அவதார் என்றுதிரையுலக மேதைகள் என கூறிக்கொள்ளும் சிலரால் வர்ணிக்கப்படும் ரஜினியின் எந்திரன் திரைப்படத்தை ஆங்கில டப்பிங் வடிவத்தை ஜப்பான் உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளில் பெருமளவில் வெளியிடத் திட்டமிட்டிருக்கிறார்களாம். இந்த ஆங்கிலப் பதிப்பில், குறிப்பிட்ட 7 நிமிட காட்சிகள் 3 டி தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டு இணைக்கப்பட உள்ளனவாம். எந்திரன் உருவான கதை, ஆணி அடித்த கதை என எல்லாவற்றுக்கும் விளம்பரம் செய்து வரும் சன் டீ.வீ நிறுவனம் 3டி பதிப்புக்கும் பெரிய விளம்பரம் கொடுத்து மேலும் பணத்தைப் புரட்டிவிடும்.

அனைவருக்கும் எங்கள் தீபாவளி நல்வாழ்த்துக்கள்



**ஷிரய்யா திருமண ஏற்பாட்டு சேவை**



தனிமை என்றும் கொடுமை.
இணைவே இன்பமயம்.
உலகவாழ் தமிழ் மக்களே வாழ்க்கைத் துணையின்றி வாட்டமா?
திருமண தென்றல் இன்னும் உங்களை தேடி நாடி வரவில்லையா?
கவலைப்படாதீர்கள்! தயக்கம் வேண்டாம்!
உடனே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்!

*தனித்து வாழ்ந்து தொலைந்து விடாதீர்கள்!*
*எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.*
*இனிமை! இனிமை! இனிமை!*
*இதுவே எமது கடமை! கடமை! கடமை!*

**காதல் அணுக்கள் உன் கண்ணில் எத்தனை? கலகலப்பான கற்பனைகள் உன் இதயத்தில் எத்தனை? அத்தனையும் ஒன்று சேர்த்து வைப்பதே எமது சாதனை!**

தொடர்புகளுக்கு
**02476 456 106 / 07760 832 149**

*திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்று அன்று சொன்னவர்கள் சிலர்! திருமணங்கள் ஷிரய்யா திருமண ஏற்பாட்டுச் சேவையில் நிச்சயிக்கப்படுகின்றன என்று இன்று சொல்பவர்கள் பற்பலர். இந்த வாழ்க்கை உங்களுக்கு கிடைத்திருப்பது ஒரு முறைதான்!*

லூசியம் வாழ் மக்களே...
உங்கள் ஆதரவுக்கு..... எமது

# நன்றிகள்

உங்கள் நம்பிக்கைக்கும் நன்மதிப்புக்கும்
உரிய நிறுவனமாக திகழ்வோம்

AVAILABLE NOW
1,2,3 BEDROOM
HOUSES
AVAILABLE NOW

அனைவருக்கும்
எமது
உள்ளம் கனிந்த
தீபாவளி
வாழ்த்துக்கள்

Lee High Road,
London SE12 8RU
tel: 020 8852 5234

email: lee@bairstoweves.co.uk
www.bairstoweves.co.uk
www.rightmove.co.uk

வீடுகள் வாங்க... விற்க... வாடகைக்கு பெற...
அழையுங்கள்.....Raj: 020 8852 5234

OPEN 7 DAYS A WEEK

Bairstow eves
Countrywide

## Mass Global Shipping

Sea - Air - Road & Ticketing
Serving all the Sri Lankan Communities

Best Rate Guaranteed for Car shipments, 20ft & 40ft Containers



Most professional Sri Lankan Shipping Company in UK

* Packers * Movers * Shippers

WE OFFER THE BEST SERVICES
THAN ALL THE OTHER IN THE TRADE!

FREIGHT ONLY £10.00
FREIGHT AND BOX £15.00
(volume 4.5Cu.ft)

4 Collection Points
Harrow,
Watford,
Knightsbridge,
Croydon

Wooden boxes from £9.00

Call 0208 3862314

Local Collection Charge £5.00 up to Hounslow. Within M1 collection charge £15.00 upto Coventry
All other area's we will offer the best rates

Special rates for
Containers and Machinery

Hot Line 24/7
079 4010 8177

WareHouse Address
262 Victoria Road
Ruislip HA4 OLN

E-mail: info@massshipping.com
Web: www.massshipping.com

இன்டலிஜென்ட் டெட் மேனேஜ்மென்ட் நிறுவனத்தின் தரமான சேவையைப் பெற்று...

Personal Loans,
Student Loan,
Bank O/D, Credit
Cards, Store Cards
போன்ற கடன்களை
கையாள்கிறோம்.

கடன் சுமை உங்களை
அழுத்துகிறதா?
கடன்களுக்காக
மாதாந்தம் கட்டும் பணம்
கட்டுப்படவில்லையா?
கவலையை விடுங்கள்.
உங்களுக்கு நாங்கள் கை
கொடுத்திருக்கிறோம்.

உங்கள் அனைத்து
கடன்களையும்
ஒருங்கமைத்து, கடன்
வழங்கிய நிறுவனங்களுடன்
சட்டரீதியாக தொடர்பாடல்
செய்து மாதாந்தம் மிக
மிகக் குறைந்த கட்டணம்
செலுத்த வழியமைத்துத்
தருகின்றோம்.

## உங்கள் கடன் சுமைகளை இன்றே அகற்றுங்கள்!

எமது சேவையினால் அடையக்கூடிய பல நன்மைகளில் சில இவை!

1. கடன் வழங்கிய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் தொலைபேசி அழைப்புகள் மற்றும் கடிதங்கள் என்பவற்றை நாம் கையாள்கிறோம்.
2. உங்களுக்கு கடன் வழங்கிய நிறுவனங்களிற்கான மாதாந்தக் கட்டுப்பணத்தை தனித்தனியாக கட்டாது ஒரு மாதாந்த கட்டணம் மூலம் அனைத்து நிறுவனங்களிற்கும் சென்றடையச் செய்தல்.
3. மேலும் மேலும் கடனுக்கான வட்டி அறவிடப்படாமல் தடுக்க முயற்சித்தல்
4. Bankruptcy என்னும் வங்குறோத்து நிலையை அடைய முதல் சரியான பரிகாரம் காணுதல்.
5. கடன் தந்த நிறுவனங்களுடன் ஆலோசனை செய்ய மூலக்கடனில் ஒரு பகுதியை மட்டும் செலுத்தி முழுக்கனையும் நிவர்த்தி செய்தல்.

ஒவ்வொருவரும் எதிர்கொள்ளும் கடன் பிரச்சினைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை ஆகவே எங்களுடன் ஒருமுறை கலந்தாலோசியுங்கள். சரியான வழியில் உங்களை வழிநடத்தி உங்கள் கடன்தொல்லைகளை நிவர்த்தி செய்கின்றோம்!

Office: 17A Walm Lane, Willesden Green, London NW2 5SJ
இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

020 8459 5812
Sivakumar 075 8874 5506
Muralee 079 0321 7854

# INTELLIGENT DEBT MANAGEMENT

அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது உள்ளம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!!!

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

ATOL PROTECTED 5555